# கிராமவலம்

# புத்தூர்

நூலாசிரியர்
சட்டத்தரணி
**உயர்திரு. சதா. லோகேஸ்வரன்**

வெளியீடு
**சைவத்திரு கா. சிவபாலன்**

**2015**

# கிராமவலம்

# புத்தூர்

நூலாசிரியர்

சட்டத்தரணி

**உயர்திரு. சதா. லோகேஸ்வரன்**

வெளியீடு

**சைவத்திரு கா. சிவபாலன்**

**2015**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | பதிப்புரை | 1 |
| 02. | புத்தூரில் சைவப்பணி | 4 |
| 03. | புத்தூர் தேரம்பிள்ளையார் கோயில் வருடாந்தத் தீர்த்தத் திருவிழாவும், சித்திரைப் பௌர்ணமித் தினமும் | 10 |
| 04 | சவுக்கடிச் சந்திச் சுற்றாடல் அன்றும் இன்றும் | 18 |
| 05. | உடையார் உத்தியோகம் பற்றிய ஓர் பார்வை | 30 |
| 06. | புத்தூர் மத்திய மருந்தகம் | 38 |
| 07. | கோவிற்பற்று | 45 |
| 08. | வெள்ளப்பரவை உப்பு ஏரியின் சரித்திரப் பிரசித்தி | 52 |
| 09. | புத்தூர் பதியும் பதிசார்ந்த வரலாறும் | 59 |
| 10. | கங்காதேவி தரிசனம் | 78 |
| 11. | ஊரும் - பேரும் | 86 |
| 12. | **PUTTUR TIDAL WELL** | 90 |

# நூல் தரவுகள்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கிராமவலம் புத்தூர் |
| நூலாசிரியர் | : | சட்டத்தரணி. |
| | | உயர்திரு. சதா. லோகேஸ்வரன் |
| பதிப்பாசிரியர் | : | கா. சிவபாலன் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| காலம் | : | 2015 மே |
| பதிப்பகம் | : | அனுஷ் பிரின்டர்ஸ், கொழும்பு-13. |
| பக்கம் | : | IV + 92 |
| விலை | : | ரூபா. 150.00 |

# BOOK DATA

| | | |
|---|---|---|
| Title | : | Gramavalam Puttur |
| Author | : | Attorney-At-Law. Mr. Satha. Logeswaran |
| Publisher | : | K. Shivapalan |
| Edition | : | First Edition |
| Date | : | 2015 - May |
| Printers | : | Anush Printers, Colombo-13. |
| Pages | : | IV + 92 |
| Price | : | Rs. 150.00 |

# பதிப்புரை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் புத்தூர்ப் பதி பல்வகையான சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. இதற்கு சான்றாக புத்தூர் சிவன் கோவில், அறக்கொடையாளர் புத்தூர் மழவராயர் கந்தையா அவர்களின் கல்விப்பணி, அன்னசத்திரப்பணி நவக்கிரி நிலாவரை நீரூற்று கிணறு போன்ற பல சிகரம் வைத்தாற் போல அமைந்துள்ளது.

இங்கு புத்தூரில் தலைசிறந்த சான்றோர்கள் வரிசையில் ஒருவர் திரு. சதா. லோகேஸ்வரன் அவர்கள் என்றால் மிகையாவது ஒன்றும் இல்லை. இவர் கல்விமானாக தமிழறிஞராக, சட்டத்தரணியாக வாழ்ந்து எங்களுக்கு வழிகாட்டியாக உள்ளார். இவருடைய அருமைத் தந்தையார் புத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகப் பணியாற்றிய திரு. சுப்பிரமணியம் சதாசிவம் J.P. அவர்கள், தாயார் திருவாட்டி வள்ளிப்பிள்ளை அம்மையார் ஆவார். இவ் அம்மையாரின் பணி புத்தூர் தேரம்பிள்ளையார் கோவில் தீர்த்த உற்சவ உபயம், செல்வச்சந்நிதி முருகன் சூரன் போரை அடுத்துவரும் கந்தசஷ்டி அன்னதானப்பணி, வல்லிபுர ஆழ்வார் கோவில் சந்தானகோபாலர் ஸ்தாபித்து நித்தியபூசைப்பணி, புத்தூர் சிவன்கோவில் நவராத்திரி விழா நவமிபூசைப் பணி போன்ற பல பணிகள் நீடித்து செல்கின்றன.

உயர்திரு. சதா லோகேஸ்வரன் சட்டத்தரணியாக விளங்கி நன்முயற்சிகளுக்கு தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுவருபவர். இவர் தமது புத்தூர் பிரதேசத்தை நன்கு அறிந்தவர். இங்கேயே நீண்ட காலமாக சட்டத்தரணி பணியை ஆற்றியமையால்

பெரும் வாய்ப்புபெற்றார். இதனால் தமது பட்டறிவு, படிப்பறிவு கொண்டு இப்பிரதேசத்தின் ஆவணகாப்பகமாக "கிராமவலம் - புத்தூர்" என்ற அருமையான நூலை எமக்குத் தந்துள்ளார். இந்நூலில் பதினொரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது.

இக்கட்டுரைகள் வாயிலாக தமது தேடல்களினால் சிறந்த ஆய்வாளராக, ஆராட்சியாளராக எமக்கு இனம் காணப்பட்டுள்ளார். மேலும் இவருடைய தேடல்களும், புள்ளி விபரங்களும், உசாத்துணை நூல்களும் இந்நூலில் பதிவாகியுள்ளன. இவருடைய பதிவுகள் கொண்ட நூல் சரித்திர ஆய்வாளர்களுக்கு ஒரு விருந்தாக அமையும் என எதிர்கொள்ளலாம்.

எமது நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினாலும், கால வெள்ளத்தினாலும் யாவற்றையும் இழந்துள்ளோம். இந்நிலையில் மறைகின்ற பழைய நினைவுகளை மீட்டுத்தந்துள்ளார் நூலாசிரியரான பிரபல சட்டத்தரணி சதா. லோகேஸ்வரன் அவர்கள். இவரின் உறவினர்கள் அநேகமானவர்கள் சட்டத்தரணிகள் ஆவர் மேலும். பழம் பெரும் பிரபல சட்டத்தரணிகளான சாண்டோ முத்துச்சாமி, S. R. கனகநாயகம், கதிர்காமலிங்கம், நமசிவப்பிரகாசம் போன்றவர்களின் பெருமதிப்பைப் பெற்றவர் இவர். மிகுந்த தமிழ்மொழிப் பற்றாளரான இவர் அரசியல் தலைவர்களின் நன்மதிப்புப் பெற்றவர்.

நம் நாட்டில் ஒரே ஒரு ஆதீனமாக விளங்கும் நல்லைஞானசம்பந்த ஆதீனத்தில் அறக்கட்டளை சபையின் உபதலைவராகவும், சைவ பரிபாலன சபையிலும் சமயப்பணிகளை ஆற்றியுள்ளார்.

கோவைவாணர் அ.வி. மயில்வாகனம் ஐயாவின் மருகரான இவரை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்

"தமிழ் அறிஞன்" என்றே அடிக்கடி கூறுவார். இத்தகைய பெருமைக்குரிய சதா. லோகேஸ்வரன் அவர்களுடைய நூலில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைத்தொகுப்பு கோயில் மலர்கள், கல்லூரி மலர்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றிலும் இணையத்தளங்களிலும் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூலை குறுகிய காலத்தில் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் அச்சிட்டு உதவிய கொழும்பு-13, அனுஷ் பிரின்டர்ஸ் முதல்வர் திரு. கு. அருளானந்தம் அவர்களுக்கு என்றென்றுமே நன்றியுடையேன்.

எனது ஊரில் மட்டுவில் முத்துமாரிஅம்மன் கோவில், பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் தர்மசாதன, நன்கொடை உறுதிகளை எழுதிய காலங்கள் தொடக்கம் எம்மோடு ஈடுபாடும் தொடர்பும் ஏற்பட்டது. ஒருவாரகாலம் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி மாணவராக இருந்தேன். அக்காலத்தில் சவுக்கடிச் சந்திபற்றிய விளக்கம் எனக்கு புரியவில்லை. வலிகாமம் பகுதிக்குள் நுழையும் சவுக்கடிச் சந்தி எமது பிரதேசத்தின் நுழைவாயில் ஆக உள்ளது.

மக்களோடு மக்களாக வாழ்ந்த சதா. லோகேஸ்வரன் அவர்களின் கட்டுரைகளைப் பார்த்தவிடத்து நூலாக வேண்டும் என்று எனது கருத்தைத் தெரிவித்தேன். எனது கருத்தை அங்கீகரித்து பெரும் ஆதரவையும், அனுமதியையும் தந்து இருந்தார். நூலாசியரான அவருக்கு யான் என்றென்றும் நன்றியுடையேன். அறிஞர்களும், புலவர்களும், கவிஞர்களும் பேராசிரியர்களும் வாழுகின்ற புத்தூர் பிரதேசத்துக்கு மாத்திரமல்லாது எல்லாப்பிரதேசத்து வாழும் ஊர் மக்களுக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

**- கா. சிவபாலன் -**

உ

சிவமயம்

# புத்தூரில் சைவப்பணி

**தோற்றுவாய்:**

இலங்கையை ஏலேல மன்னன் ஆண்ட காலத்தில், தொண்டை நாட்டில் இருந்து "அந்கக்கவி" வீரராகவன் என்ற யாழ்பாடி இங்கு வந்து பாடி பரிசாக யாழ்ப்பாண நாட்டைப் பெற்றான். தான்பெற்ற நிலத்தைத் திருத்தி, குடியிருப்புக்கள் அமைத்து நாடாக்கத் தொண்டை நாட்டிலிருந்து குடிமக்களைக் கொண்டுவந்தான். அவன் ஆள உதவியாக மந்திரி குழு, சேனை என்பனவும் குடிகளுடன் கொண்டு வரப்பட்டது. அவ்விதம் யாழ்பாடிக்கு மந்திரியாக வந்த சேதுராசனுக்கு ஒரு பகுதி நிலம் ஒதுக்கப்பட்டு, காடுவெட்டித் திருத்திப் புதிதாகக் குடியேற்றம் நடைபெற்றது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்ட ஊருக்குப் "புத்தூர்" எனப்பெயரிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பழைய கிராமங்களில் ஒன்றாகப் புத்தூரும் கொள்ளப்படும். ஆதிமுதலே இங்கு குடியேறியோர் சைவர்களாகவும், சமயக் கடவுளருக்குக் கோயிலெழுப்பி வழிபாடு செய்தும் வந்தனர்.

**வீடயப்பிரதேசம்:**

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் சைவப் கோயில்கள் இடிக்கப்பட்டு, இடத்துக்கிடம் கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டப்பட்டன. இவ்வாறு யாழ்ப்பாணப்பகுதியில் ஊருக்கொரு தோயில் எழுப்பி, ஒவ்வோர் கோயில் இருந்த பிரிவையும் குறிக்கும் கோயிற்பற்றுக்கள் ஆக்கப்பட்டன. யாழ்ப்பாணப் பிரதேசம் 32 கோயிற்பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டது. இதில்

வலிகாமம் கிழக்குப்பிரிவில் மூன்று கோயிற்பற்றுக்கள், முறையே கோப்பாய், புத்தூர், அச்சுவேலி என்பன இடம்பெற்றன. புத்தூர்க் கோவிற்பற்றுக்குள் பல கிராமங்கள் அடங்குகின்றன. அவற்றுள் புத்தூர் என்னும் கிராமம் புத்தூர் வடக்கு இறை என்றும் புத்தூர் தெற்கு கிராமசேவையாளர் பிரிவுகள் அடங்குகின்றன. நவற்கிரிக் குறிச்சியின் நிலாவரை நன்னீரூற்றுள்ள பகுதியும், வாதரவத்தை என்னும் குறிச்சியும் புத்தூர் வடக்கு இறையில் அடங்கும். இப்போது வாதரவத்தை ஒரு தனிக் கிராமசேவையாளர் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை கூறும்பகுதி குறித்த புத்தூர் வடக்கு இறை, புத்தூர் தெற்கு இறை ஆகிய இருபிரிவுகளையும் உள்ளடக்கும்.

**சைவப்பணி:**

இக்கட்டுரையில் முக்கியமாக இந்த இறைகளுள் அடங்கும் கோயில்களைப்பற்றியும் அவற்றை வளர்ப்பதில் ஈடுபட்ட சான்றோரைப்பற்றியும் கூறப்படுகிறது. புத்தூர் வடக்கு இறையில் புத்தூர் - ஆவரங்கால் எல்லையில் காரைக்கூடல் நடராஜஇராமலிங்க வைரவசுவாமி கோயிலமைந்துள்ளது. இதற்கு நிலம் வழங்கியவர் காசிநாதர் வேலுப்பிள்ளை என்பவராவர். இவரது பரம்பரையிலுள்ளவர்கள் இக்கோயிலைப் பரிபாலிப்பதுடன் புனருத்தாரண வேலையும் செய்து, மண்டபமும் அமைத்தனர். அண்மைக்காலம்வரை திரு. செல்லப்பா நாதமுத்து என்பவர் பரிபாலித்துவந்தார். இப்போது திரு. சி. மாணிக்கவாசகர் பரிபாலனப் பொறுப்பு ஏற்றுள்ளார். இக்கோயில் 1932ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் உருவாகியது.

வாதரவத்தைக்கு அண்மையில் உள்ள தகரம் பிள்ளையார் கோயில், வயல்வெளியில் அமைந்துள்ளது. இது 1910 ம் ஆண்டிற்கு முற்கூற்றில் அமைக்கப்பட்டது.

கோயில் நிலம் கனகசபை முத்துக்குமாருவின் மூதாதையரால் அளிக்கப்பட்டு பிறபக்தர்களான குமாரசாமி கைம்பெண் சின்னத்தங்கச்சிப்பிள்ளை போன்றோரால் கோயில் பிரகாரத்திற்கும், பூசைச் செலவுகட்கும் நிலம் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் மயில்வாகனம் பொன்னம்பலம் அக்கோவிலைப் பராமரித்து வந்தார். இவரின் சந்ததியார் பரிபாலித்து இன்று செல்லப்பா குமரன் என்பவர் நிர்வகித்து வருகிறார். வசந்தமண்டபம் கந்தையா மகள் நாகரத்தினம் என்பவராலும், முன்மண்டபம் கந்தர் செல்லையா என்பவராலும் கட்டப்பட்டுள்ளது.

வாதரவத்தைக் குறிச்சியில் அமைந்த சேதுப்பிள்ளையார் கோயிலை வேலுப்பிள்ளை ஆறுமுகம் என்பவர் அமைத்து, நித்திய கருமப் பூசைகளை ஆற்றி வந்தார். இவரின் இப்பரம்பரையில் வந்த தபால் அதிபர் இரத்தினசபாபதி என்பவர் தொடர்ந்து பரிபாலனம் செய்து வருகிறார்.

இன்னும் புத்தூர் வடக்கு இறையில் நவற்கிரிக் குறிச்சியில் இப்பொழுது அரசிற்குச் சொந்தமான நிலத்தில் நவசைலேஸ்வரம் கோயில் அமைந்துள்ளது. இதற்கு அருகில் அமைந்துள்ள நிலாவரை நன்னீர்க்கிணறே இக்கோவிலின் தீர்த்தக்கிணறாக அமைந்துள்ளது. இக்கிணறு வற்றாத ஊற்றுக் கொண்டதெனவும், இராமர் இலங்கைக்கு வந்து காலை இவ்விடத்தில் வில் ஊன்றி நின்றாரெனவும் பரம்பரைக் கதைகள் உண்டு. இக்கோயிலின் பரிபாலனம் நாகலிங்கம் என்பவரின் குடும்பத்தவரிடம் உள்ளது.

இவைகளைவிட சிறிய கோயில்கள் வடக்கு இறையில் அமைந்துள்ளன. பேச்சியம்மன் கோயில், கொக்கணை அண்ணமார் கோயில், புத்தகலட்டி அண்ணமார் கோயில், ஏரந்தனை வைரவர் கோயில் என்பன

இதிலடங்கும். இவ்வாலயங்கட்கு சிற்றம்பலம் முத்துச்சாமி, சுப்ரமணியம் சதாசிவம், சிற்றம்பலம் நடராஜா என்போர் கோயில் அமைக்கவும் வீதிக்கும் நிலம் வழங்கியுள்ளனர்.

புத்தூர் தெற்கு இறையிலடங்கும் கோயில்களை நோக்கின், முக்கிய இடம் புத்தூர் விசுவநாதகோயில் பெறுகிறது. இது மழவராயர் கந்தையா அவர்களால் 1912க்கு முற்பட்ட காலத்தில் தாபிக்கப்பட்டடு அவராலே பரிபாலிக்கப்பட்டது. பின்னரும் அவரது குடும்பத்தவரே இத்தொழிலை மேற்கொள்கின்றனர். இக்கோயிலுக்கு வடக்குப் பக்கமாகவுள்ள "பலாவடி அம்மன்"ஆலயமும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இவர்கள் பரிபாலனத்திலுள்ளது. கோயில் அமைவிடம் கந்தையாவாலும் சுற்றுலா வீதிக்கு அண்மித்த நிலங்கள் மயில்வாகனம் பரமநாதர், மூத்ததம்பி காசிநாதர், வன்னித்தம்பி ஐயாத்துரை, தில்லைநாதர் போன்றோராலும் வழங்கப்பட்டது. இக்கோயிலின் புனருத்தாரண வேலை பூர்த்தியாகி இப்பொழுது குடமுழுக்கு "கும்பாபிஷேக விழா" நடைபெற்றுள்ளது. கந்தையா அவர்கள் சைவப்பிள்ளைகட்கெனக் கல்வி கற்க ஓர் பள்ளிக்கூடமும் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி கோயிலுடன் தொடர்புடையதாக ஓர் அன்ன சத்திரமும் கட்டியுள்ளார். இம்மூன்று தாபனங்களும் தடங்கலின்றி நடக்க, போதியளவு நிலங்களை அளித்து அதன் வருவாயை எடுத்துச் செலவிடத்தக்க வகையில் தர்மசாசனம் எழுதியுள்ளார். கந்தபுராணம் படிப்பதற்கென ஒரு மடம் அமைத்துக் கொடுத்தார்.

கோயிலின் பூந்தோட்டத்திற்கு நிலம் அளித்து, பூமாலை கட்ட கட்டடம் அமைத்துக் கொடுத்தவர் திருமதி மாரிமுத்துப்பிள்ளை பொன்னையா ஆவார். அவர்களே அதன் பரிபாலனத்தைச் செய்தார். இக்கோயிலின் நவமி பூசையை நடத்த முத்தையா விசுவலிங்கம் நிலம்

வழங்கியுள்ளார். திருவெம்பாவைப் பூசை நடத்த திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா நிலம் வழங்கியுள்ளார். இக்கோயிலின் திருக்குளம் பூதத்தம்பி என்பவரால் அமைக்கப்பட்டது.

இவ்விறையில் அடங்கும் பிறகோயில்கள் தம்பனைப் பிள்ளையார் கோயில், குருநாதர் கோயில், ஈஸ்வரன் கோயில், சொக்கதிடல் அண்ணமார் கோயில், வேம்பிராய் அண்ணமார் கோயில், காளியானை வைரவர் கோயில், விரைவாணி நாச்சிமார் கோயில், நரங்கொல்லை நாகதம்பிரான் கோயில் என்பனவாகும். இவற்றிற்கு நிலம் வழங்கி அம்பலவாணர் ஐயர், கனகசபை முத்துக்குமாரு, பொன்னையா மாரிமுத்துப்பிள்ளை, சுப்பிரமணியம் சதாசிவம், சிற்றம்பலம் முத்துச்சாமி, சிற்றம்பலம் சுப்பிரமணியம், சுப்பிரமணியம் அம்பலவாணர், வைரவப்பிள்ளை பொன்னுத்துரை போன்றோர் ஆதரித்து வந்தனர்.

**மன்றங்கள்**

இவ்வூரில் சைவப்பணி புரியவென அமைக்கப்பட்ட மன்றங்கள் சிலவுள. 1932ல் தகரம் பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்பட்டுக் கோயிலின் புனருத்தாரண வேலைகள் செய்தனர். இன்னும் ஒரு சபை இவ்வேலைகளைச் செய்து வருகிறது.

புத்தூர் விசுவநாத சுவாமி கோயிலில் இந்து இளைஞர் மன்றம் உருவாக்கி, கலாசாரத்தைப் பேணவும் சமயப்பணி புரியவும் ஊக்குவிக்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் திருப்பணிச்சபையும் அமைக்கப்பட்டது. இவ்வூரில் சனசமூக நிலையங்களும் நவராத்திரி விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் சமய அறிவை வளர்க்கின்றன.

இக்கிராம மக்களின் சமயப்பற்றை எடுத்துக் கூறும் வகையில் இலங்கை முழுவதிலும் உள்ள சைவ ஆதீனமான நல்லை ஆதீனத்திற்குக் காணி வழங்கி, ஆதரித்தவர்கள் புத்தூரைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை கந்தையா, சின்னத்தங்கச்சிப்பிள்ளை குமாரசுவாமி, சின்னச்சிப்பிள்ளை சிற்றம்பலம் என்ற மூன்று பெண்மணிகளாவர். வேறும் பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு இவ்வூர்ப் பிறந்த பெரியார்கள் காணிகள் வழங்கியுள்ளார்கள். இவ்வகையில் இவர்கள் செய்த பணி மகத்தானதும், போற்றப்பட வேண்டியதுமானதும்.

**சார்த்துரை:**

இப்பெரியார்கள் செய்த பணியைச் சிறப்பிப்பதாக அமைவது. தொடர்ந்தும் இக்கோயிற்பணிகள் சிறப்புற நடக்க ஒழுங்குகள் செய்யவும், இடைவிடாத சமயப் போதனையும், சமயப் போட்டிகளை நடாத்தவும் செய்யலாம். இப்பெரியார்களின் பணிகள் தொடர்ந்தும் பயன்தர ஒரு குழுவும் அமைத்து, கிராமத்தில் சிறந்த சைவப் பிள்ளையை தெரிந்து மேற்படிப்புக்காய உதவியை இவர்கள் அளித்த நிலங்களின் வருவாயிலிருந்து வழங்கலாம். இளம் சைவர்கட்டு ஒரு குருகுலம் அமைத்துச் சைவநெறி முறைகளைக் கற்பிக்கலாம். கந்தையா அவர்கள் எழுதிய அன்னசத்திர அறக்கட்டளையினை கொண்டு இவ்வாய்ப்பை ஏற்படுத்த இடமுண்டு. அண்மையில் சிவசம்பு சிற்றம்பலம் அவர்களும் சைவ அபிமானிகளும் மேற்கொண்ட மகாகும்பாபிஷேக நிகழ்ச்சி இப்பெரியோர் செய்த தர்ம கைங்கரியங்களை மக்கள் மறக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

நன்றி - புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் சிவன் கோவில் மகா கும்பாபிஷேக மலர் - *1989*

# புத்தூர் தேரம்பிள்ளையார் கோயில் வருடாந்தத் தீர்த்தத் திருவிழாவும், சித்திரைப் பௌர்ணமித் தினமும்

புத்தூர் தேரம்பிள்ளையார் கோவிலானது இப் பதியில் உள்ள பழம்பெரும் தலங்களில் ஒன்றாகும். இக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் நிறைவாகக் கொண்டு, மூல நாயகராக சித்திவிநாயகரையும், தல விருட்சமாகப் புன்னையையும், தீர்த்தமாடத் திருக்குளமும் பெற்று, இக் கிராமத்துவாழ் மக்களுக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் அருள் பாலித்துக் கொண்டு இருக்கிறது. இத் திருத்தலம் ஆனது யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பிரதான தெருவில், புத்தூர் பகுதியில் வரும் பத்தாவது மைல்கல்லை அண்மித்துள்ள இடத்தில் தொடங்கும் வாதரவத்தை என்னும் கிராமம் வரை செல்லும் வீதியில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் மேற்கேயும் தெற்கேயும் செந்நெல் விளையும் "வெல்லனஊரி" என்னும் பெயரால் அழைக்கப்படும் வயல் நிலங்களையும், வடக்கே குறித்த இத் தெருவையும் கடலேரியையும், கிழக்கே "பானாலிப்புலோ" என்னும் கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களையும் எல்லையாகக் கொண்டு, முகப்பில் தீர்த்தக்குளமும் அதற்கு நேரே இடது பக்கத்தில் குறித்த வீதியின் வடக்கே மந்தைகளுக்குத் தண்ணீர் தாகம் தீர்க்கும் தடாகமும், அதன் முன் நாட்டப்பட்டிருக்கும் ஆவுரோஞ்சிக் கல்லும் அதில் உரஞ்சித் தங்களைச் சௌகரியப் படுத்திக் கொண்டு கூட்டமாக நிற்கும் மாடுகளையும் காட்சியாகத்தரும் அமைதியான சூழலில், கிழக்குப் பார்த்த "வாயில் வளைவுடன்" அதன் இடது புறத்தில் ஆலமரமும் வலது பக்கத்தில் புன்னையும். அரசும், பூவரசு மரங்களும் நிழல் வழங்க, ஒரு ஏக்கர் விஸ்தீரணங் கொண்ட திட்டி ஒன்றில் அமைந்துள்ளது.

அநாதியில் இவ் ஆலயத்தைச் சுற்றிவர தென்னை, பலா, விளாத்தி, நெல்லி, மா, தாழை ஆகிய மரங்கள் நின்றுள்ளது. ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கான பெயர்,உறுதிகளில் "தேரம் பிள்ளையார் வளவு" என்று கூறப்பட்டு இருக்கின்றது. இந்து கலாசார அமைச்சின் "Temple unit" இக்கோவிலை *07-12-1988*ல் பதிவு செய்த போது இந்த விபரப் பட்டியலில், எட்டாம் பக்கத்தில் இதன் முகவரி 'புத்தூர் கிழக்கு எனவும்இக்கோவிலின் பெயர் "தகரம் பிள்ளையார்" ஆகவும் பதிவு இலக்கம் *HA/5/JA/91* எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அநாதியில் இவ்வீதி "காவலோடை வீதி" என்ற பெயருடன் புத்தூர் கிராமச் சபையின் பராமரிப்பில் இருந்துள்ளது. இக்கோயிலை "தேரம்பிள்ளையார் கோயில்" என்ற நாமம் கொண்டு தான் அநேகம் பக்தர்கள் அழைத்து வருகின்றனர். ஆனால் இந்த இடத்தின் வயது முதிர்ந்த பக்தர்கள் சிலர் "தேரம்பிள்ளையார்" என்பது "தகரம்பிள்ளையார்" என்ற பதத்தின் திரிபெனவும், இக்கோயிலின் மூல மூர்த்தியின் மூலஸ்தானக் கூரை மிகவும் அண்மைக் காலம் வரை தகரத்தினால் வேயப்பட்டு இருந்ததெனவும், அதனை வைத்தே "தகரம்பிள்ளையார்" என அழைக்கப்பட்டு வந்தாரெனக் கூறுகிறார்கள். இவருக்கு இன்னும் ஒரு காரணப் பெயரும் உள்ளது. அது "கொடித்தூக்கிக் பிள்ளையார்"என்பதாகும். இக்கிராமத்தில் இப்பெயர் இவருக்கு வந்ததற்கான காரணம் கர்ணபரம்பரைக் கதையாகவே இருக்கின்றது. வாய் வழியாக தொடர்ந்து காவப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது, காலமும், காத்திரமான சான்றுகளின்றியும் கூறப்பட்டு வருகிறது. ஆனால் அற்புதங்கள் பல புரிபவரான, புத்தி தரும் வித்தகருக்கு அதில் கூறப்படும் அற்புதத்தை இயற்றி இருக்க முடியாதெனக் கூறிக் கொள்ளவும் இயலாது.

இக்கதை இவ்வாறு அமைந்துள்ளது. அநாதியில், பெருந்திருவிழா ஆரம்பமாகி கொடியேற்ற நன் நாளன்று, அதற்கான கிரியைகள் நிகழ்ந்து, தீபாராதனைகள் முடிந்து, கொடிச்சீலையைத் தம்பத்தின் உச்சிப்பகுதிக்கு இழுத்துச் செல்லப் போடப்பட்டிருந்த கயிற்றினை இழுத்து மேலே அனுப்ப முயற்சித்துக் கொண்டிருக்கையில், பிரதம குருக்கள் பக்தி மேலீட்டின் நிமித்தம் அக்கயிற்றைக் கைவழுக விட்டு விட்டார். ஆனால் அக்கொடிச்சீலை, இயற்கையான ஈர்ப்புச் சக்தியின்தன்மைக்குக் (கீழ் நோக்கிச் செல்ல வேண்டியதுக்கு) மாறாக, வித்தக விநாயகரின் அற்புதத்தால், கொடிச்சீலை கொடித்தம்பத்தின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்து கொண்டது. இது இவ்வாறு நிகழ்ந்த போது கயிற்றைக் கைவழுக விட்ட பிரதம குருக்கள் அவர்கள், நினைவிழந்து கொடித்தம்பத்தின் அருகில் சாய்ந்து கொண்டார். கொடிச்சீலை தம்பத்தின் உச்சியை அடைந்த அற்புதத்தைப் பார்த்த பக்தர்கள் “அரோகரா” “அரோகரா” என்று குரல் எழுப்ப, அந்த ஓசையைக் கேட்டு, பிரதம குருக்கள் நினைவு திரும்பப் பெற்று எழ, அவர் அருகில் நின்ற உதவிக் குருக்கள் நிகழ்ந்தவற்றைக் கூற அந்நிகழ்வின் ஆழம் உணர்ந்தவரா, கண்ணிலிருந்து நீர்சொட்ட, கையில் தீபமெடுத்து, முதலில் மூலஸ்தான மூர்த்திக்கும், பின்பு கொடித்தம்ப விநாயகருக்கும், அடுத்து கொடித்தம்பத்திற்கும் காண்பித்து வணக்கம் செலுத்தி விட்டுகொடியேற்ற நிகழ்வின் மிகுதிக் கருமங்களை அவரே நடத்திக் கொண்டார் எனவும் கூறுவர். இந்நிகழ்ச்சிஆவரங்காலைச் சேர்ந்த புகழ் படைத்த குருக்கள் ஒருவரின் காலத்தில் நிகழ்ந்ததாக மட்டும் அறியக் கூடியதாக உள்ளது. அபிராமிப் பட்டருக்காக அமாவாசைப் பொழுதைப் பௌர்ணமியாக மாற்றி மகிழ்வித்த அபிராமி அம்மன் செயலை இதற்கு

ஒப்பாக பக்தர்கள் காண்கிறார்கள். ஆயினும் "தகரம்" என்ற பதத்திற்கு "இதயத்தின் உள்ளிடம்" என அர்த்தம் கூறி, புத்தூர் வாழ் மக்களின் இதயத்தினுள் குடி கொண்டவராக இருப்பதால், "தகரம்பிள்ளையார்" ஆனார் எனக் கூறுபவருமுளர். இவ்வாலயம் அமைந்துள்ள தேரம்பிள்ளையார் வளவு, அநாதியில் புத்தூரைச் சேர்ந்த கனகசபை முத்துக்குமாருவின் பேரனின் பெயரிலிருந்து, பின்பு அவரே கோவிலுக்கு உபயம்செய்தார் என்றும், திரு. மயில்வாகனம் பொன்னம்பலம் என்பவரின் முன்னோரிடம் கோவிலையும் அதன் சொத்தையும் பரிபாலிக்கும் பொறுப்பையும் வழங்கினார் எனவும், அறியக்கிடக்கிறது. இந்த ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இற்றை வரை காலஞ் சென்ற திரு. கனகசபை அவர்களின் பூட்டப்பிள்ளைகளாலேயே நிகழ்த்தப்பட்டு வருகிறது. இப்பொழுது கோவிலின் பரிபாலன ஒழுங்குகளைக் கவனிக்க பிரதம குருவான பிரமஸ்ரீ நடராசக் குருக்களின் மகன் யோகானந்தேஸ்வரக் குருக்களும், மயில்வாகனம் பொன்னம்பலம் வழி வந்த திரு செல்லப்பா குமரன் ஆகிய இருவரையும் இணைத்தலைவர்களாகக் கொண்ட செயற்குழு ஒன்று நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## தீர்த்தத் திருவிழா

அவ் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தத் திருவிழாவின் உபயகாரராக எனது முன் இரண்டு தலை முறையினர் இருந்து, பின்பு அடியேன் *1970*ம் ஆண்டிலிருந்து அப்பணியை விநாயகர் திருவுளத்துடன் செய்து வருகிறேன்

*1956*ம் ஆண்டு வட மாகாணத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்குக் காரணமாக அத்திருக்கோயிலின்

தீர்த்தக் குளத்திற்குப் பாரிய நஷ்டம் ஏற்பட்டு, அதன் நாலு பக்கங்களின் சுவர்களும் வெள்ளத்தால் தள்ளப்பட்டு, குளத்தின் உள்ளே விழுந்து, நீரில் அமுங்கி, குளத்தின் தண்ணீர் ஊற்றுத் தடைப்பட்டு போய்விட்டது. அதனை அடுத்து ஐந்து வருடங்களுக்கு திருக்குளத்தை எதுவித பாவனைக்கும் உட்படுத்த முடியாத நிலையில் இருந்து... பின்பு அரசாங்க உதவியும், பக்தர்களின் பணக் ொகடையும் பெற்று நாலு வருடங்களின் பின்பு நாற்பது வீதம் அளவிலேயே அதனைத் திருத்தம் செய்ய முடிந்தது. ஆனால் தீர்த்தோற்சவக் கருமத்துக்கு அதனைப் பாவிக்க அந்த திருத்தங்கள் போதியதாக அமையவில்லை. ஆகவே 1957ம் ஆண்டு தீர்த்தோற்சவம் கோயிலின் இரண்டாம் வீதியிலுள்ள இறைக் கருமங்களிற்காகப் பாவிக்கப்படும் திருமஞ்சனக் கிணற்றைப் பாவித்தே தீர்த்தோற்சவ நிகழ்வு நடை பெற்று வருகின்றது. இந்த ஆண்டும் அவ்வண்ணமே அவ்விடத்தில் சிறப்பாக 14-05-2014அன்று நடைபெற்றது. ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் பிரசன்னமாக இருந்தார்கள்.

**சித்திரா பௌர்ணமி:**

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தன்றுவரும் பௌர்ணமி, சித்திரைப்பௌர்ணமி ஆகும். இத்திருத்தலத்தில் ஆதிதொட்டு இந் நோன்பு வருடாந்த தீர்த்தத் தினத்தன்று சேர்த்துக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதே நாளில் சித்திரகுப்தர் பெருநாளும் வருவதால், அந்த நோன்பையும் சேர்த்து அன்று நிகழ்த்தி வைக்கப்படுகிறது. இக் கோவிலில் இதனைச் சாத்திரியார் அப்பா என்று அழைக்கப்பட்டு வந்த காலஞ்சென்ற திரு. அருணாசலம் அவர்கள் நடத்தி வந்தார்கள். அவரின் பின்பு அவருடைய மகன் திரு. ஏரம்பு

அவர்கள் அப்பணியை இயற்றி வந்தார்கள். இப்பொழுது குருக்களின் மேற்பார்வையில் அதனைச் செய்கிறார்கள். இத் தினத்தன்று இதனை இயற்றுபவர், நீராடித் தூய உடை அணிந்து, விபூதி தரித்து, கருவறைக்கு அடுத்த மண்டபத்தின் வடமேற்கு மூலையில், மாக்கோலமிட்டு அம்மாக்கோலத்தின் ஒரு பக்கத்தில், தெற்கு நோக்கிய தேரில் எழுத்தாணி, ஓலை இவற்றைக் கையில் கொண்ட சித்திரகுப்தர் திருவுருவம் வரைந்து கொள்வர். அந்த உருவத்துக்கு முன் ஒரு பித்தளைக் குடத்துக்கு நூல் சுற்றி, குடத்தில் நீர் நிரப்பி, அதன் வாயில் மாவிலை வைத்து, அதில் தேங்காய் வைத்து, குடத்துக்கு வண்ண ஆடை உடுத்தி, கூர்ச்சம் சார்த்தி, அக்கும்பத்தில் சித்திரகுப்தனாரை ஆவாகனம் செய்து கொள்வர். பின்பு ஒரு காகிதத்தில் இவ்வாறு எழுதி:

"கத்துநீர்க் கடற்பரப்பில் காண்எழில் நீலாதேவிப்
பத்தினிப்பெண்முயங்கப் பரிதியின் சேயாய்த் தோன்றும்
சித்திரகுப்தர் பேரின் தேவு உனை நோற்பார்க்கென்றும்
நத்துநற்பேறது அனைத்தும் நயந்தருள்புரிவாய் போற்றி"

அதற்கு மஞ்சள் காப்பிட்டு, சுருட்டிக் கும்பத்தின் முன்னுக்கு வைப்பர். பின்பு விதைநெல், எழுத்தாணி, மாங்காய், பழங்கள், பானகம், பட்சணங்கள் முதலியன வைத்து தாமரை முதலிய பூக்களால் சித்திரகுப்தரை அர்ச்சிப்பர். சர்க்கரைப்பொங்கல், வடை, பாயாசம், எள்ளினால் செய்த உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை நிவேதனம் செய்து, வழிபாடு நடை பெறும். பின்பு தீபம், கற்பூரம் காண்பித்து, சித்திரகுப்தனார்நோன்புக் கதையை வாசித்து, தோத்திரப் பாடல்கள் பாடி, காகிதத்தில் எழுதிச் சுருட்டி வைத்த பாடலையும் வாசித்து, படைத்த யாவற்றையும் ஆடையையும் சேர்த்துதானம் செய்வர்.

வழிபாட்டின் முடிவில் காய்ச்சிய உப்பில்லாக் கஞ்சியைப் பக்தர்களுக்கு வழங்கி, நோன்பை முடித்து வைப்பர். பால், தயிர் படையல்களுடன் வைப்பதுவுமில்லை அவற்றைத் தானமாகக் கொடுப்பதுவுமில்லை. தென் இந்தியாவில் காஞ்சிபுரத்தில் சித்திரகுப்தருக்கு எனத் தனியாகக் கோயில் உண்டு. இத்தினத்தில் கன்னியாக்குமரியில் சந்திரோதயமும் சூர்ய அஸ்தமனமும் ஒன்றாக நிகழ்வதைக் காணப் பெரும் கூட்டம் கூடுவதும் வழக்கமாக உள்ளது. இந் நோன்பு பிடித்தால் தாமதித்த விவாகம் விரைவில் நிகழும் எனவும் குழந்தைச் செல்வம் கிட்டுமெனவும் நம்பிக்கை இருந்து வருகிறது.

**தல விருட்சம்:**

இதன் முதற் பந்தியில் கூறியவாறு இத்தலத்தின் பெருமைக்குரிய விருட்சமாக புன்னை மரம் உள்ளது. அதற்குப் பக்கத்தில் அரச மரமும் நிற்கின்றது. இயற்கையில் ஜீவசக்தியுடன் விளங்குவது விருட்சங்களாகும். கோயில்களில் உள்ள சிலைகளை விட பன்மடங்கு சக்தி உடையவை விருட்சங்கள். எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. புன்னை மரம் மருத்துவ ரீதியில் மேம்பாடு உடையது. புன்னை இலையை எடுத்து பவுடராக்கிப் பொடியாக முகர்ந்தால் மண்டைச்சளி, தலைவலி, சைனஸ் தலைச் சுற்று ஆகிய குணமாகுமென வைத்தியர்கள் கூறுகிறார்கள். இம் மரத்தைத் தல விருட்சமாக் கொண்ட கோயில்கள் பல தமிழகத்தில் உள்ளன. சங்கரன் கோவில், சென்னை திருமயிலைக் கோயில் எனப் பட்டியல் இடலாம். புன்னை மரத்தின் அறிவியற் பெயர் Calophyllum inophyllum ஆகும். இதனைச் சிங்களத்தில் "தொம்ப" எனவும் மலையாளத்தில்"புன்னாகம்" என்றும்

அழைப்பார்கள். அவுஸ்திரேலிய நாட்டிலும் இது தெருவோரங்களில் நிழலுக்காக உண்டாக்கப்பட்டுள்ளன. வரண்ட மணற்பாங்கான கடல் கரை ஓரங்களில் வளரக் கூடியது. இக்கோவிலின் வடக்கு எல்லையில் உப்பு ஏரி அமைந்திருப்பது மேற்படி கூற்றை வலுப்படுத்துகின்றன. இம்மரம் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் அதிகம் காணப்படுகின்றன.

**உசாவியவை:**


விகிப்பீடியா: மரங்கள் பட்டியல் - கூகுள்

Wikipedia- list of hindu temples in srilanka

www.hindudept.gov.lk/wep/templelist

www.nellaisokkar. blogspot.com.au

இந்து சாஸ்திர சம்பிரதாயம் - கூகுள்

# சவுக்கடிச் சந்திச் சுற்றாடல் அன்றும் இன்றும்

மூன்று முக்கிய பட்டிணங்களுக்குச் செல்லும் பிரதான பாதைகள் புத்தூரில் ஒருங்கிணையும் இடமாக அமைந்த பகுதியே மேற்குறித்த "சவுக்கடிச் சந்தி" ஆகும். இச்சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பாதை பருத்துறைப் பட்டிணத்திற்கும், தெற்கு நோக்கிச் செல்லும் தெரு யாழ்ப்பாணப் பட்டிணத்திற்கும், மேற்கு நோக்கிச் செல்லும் வீதி சங்கானைப் பட்டிணத்திற்கும் சென்றடைவனவாக உள்ளன. இன்னுமொரு சிறப்பு அம்சம் யாதெனில் குறித்த இச்சந்தியிலிருந்து மூன்று பட்டிணங்களும் ஒரேயளவான (ஒன்பது மைல்கள்) தூரத்தில் அமைந்துள்ளன. பூர்வீக காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டின் பிற்கூறு வரை, குறித்த இம்மூன்று தெருக்களும் புத்தூரில் ஒன்று கூடும் இடத்தில், நூறு மீற்றர் வரையான தூரத்திற்கு அவற்றின் இரு பக்கங்களிலும் மிகவும் வயதுடைய சவுக்க மரங்களும் அவற்றின் கன்றுகளும் சோலையாக நின்று காட்சி கொடுத்தன. 1950ம் ஆண்டளவிலேயே அம்மரங்களின் வயது இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்குமெனக் கூறக் கேட்டிருக்கிறேன். இவ்விடத்திற்கு இந்த நாமம் வரக் காரணமாக இருந்தது இச்சந்தி அமைந்திருந்த சூழலே என இடப் பெயர் ஆய்வுசெய்பவர்களாலும், இக்கிராமத்தின் மூத்த உறுப்பினராலும் ஏற்கப்பட்டிருக்கிறது. இச்சந்தியின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளதும், இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிச் காலம் தொடக்கம் இருந்து வருவதுமான "சென்லூக்ஸ்" (பரிலூக்கா) மெதடிஸ் தேவாலயத்தின் மதகுருமார் அவர்களே இம்மரங்களை உருவாக்கினார்கள் என்று பரவலாக இவ்விட மக்களால்

நம்பப்படுகிறது. இச்சந்தியின் கிழக்குப் பக்கத்தில், பாதர் (வைத்தியக் கலாநிதி) கிறீன் அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் கலவன் பாடசாலையின் நிருவாகமும் இம்மரங்களை இவ் இடத்தில் வளர்ப்பதிலும், பராமரிப்பதிலும் குருமார்களுடன் சேர்ந்து அக்கறை எடுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் குறித்த தேவாலயத்தின் மதகுருமார் மரணித்த பின் நல்லடக்கம் செய்யும் ஒரு சவச்சாலை குறித்த பரிலூக்கா தேவாலயக் கட்டிடத்தின் தென்மேற்கு மூலையில், இச்சந்தியிலிருந்து சங்கானைப் பட்டிணம் செல்லும் தெருவின் ஓரமாக இடம் பெற்றிருந்தது. அவர்களின் இன்னொரு சவச்சாலை இச் சந்திக்குக் கிழக்கேயும் இருந்துள்ளது. இப்படியான சவுக்க மரங்களின் சூழல், இச்சவச்சாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதுபவர்களும் உண்டு. ஆதி காலத்தில் இரவு நேரங்களில் இச்சந்தியைத் தாண்டி பிரயாணம் செய்வதைத் தவிர்த்து, மாற்று வழிகள் ஊடாகத் தமது பிரயாணங்களைத் தொடர்ந்தவர்களும் இருந்திருக்கிறார்கள் என்றும், குறித்த சவச்சாலையின் பிரசன்னமும் இன்னும் பொழுது இருண்ட நேரத்தில் இச்சுற்றாடலில் உள்ள சவுக்க மரங்கள், காற்றின் நிமித்தம் ஒன்றோடு ஒன்று உராயும் போது உண்டாகும் ஒலியைக் கேட்டுக், குறித்த சவச்சாலைகளில் இருந்து பேய்கள் ஓலக் குரல் எழுப்பவதாக, அவர்கள் தவறாகப் புரிந்து வைத்திருந்தமையுமே அவர்களின் அவ்வாறான செயலுக்குக் காரணமெனவும் கூறக் கேட்டிருக்கிறேன். இச்சந்தியடி பிற்பகல் ஆறுமணிக்கே, அவ்விடத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த சவுக்க மரங்களினாலும், இந்தச் சந்தியை அடுத்து இந்த கிராம நீதிமன்ற வளவில் அப்பொழுது நின்றிருந்த மூங்கில் (Bamboo) வாகை (Srissa) தேக்கு (Teak) வேம்பு (Margosa) மா (Mango) பலா (Jack)

நெல்லி (Emblic Myrobalan) விளாத்தி (Wood Apple) போன்ற மரங்களின் நிழல் காரணமாக நேரத்தோடு இப்பகுதி இருட்டுக் கட்டி விடுவதும், அவர்களை அவ்வாறு சிந்திக்க வைத்திருக்கலாம். என இவ் ஊரின் சில முதியோர் கூறிக் கொள்கிறார்கள்.

இச்சந்தியை இன்னுமொரு பெயர் கொண்டு "புத்திரிக் கோவிலடி" என்று அழைக்கும் வழக்கமும் இருந்துள்ளது. இதுவும் ஒரு காரணப் பெயர் ஆகவே பார்க்கலாம். இப்பெயரானது "பாதிரி கோவிலாக" இருந்து காலப் போக்கில் திரிபு பட்டுப், "புத்திரி கோவிலடி" என வழங்கி வந்திருக்கலாம். இன்னுமாரு சாரார் அவ்விடத்தில் பெரும் எண்ணிக்கையில் நின்றிருந்த மூங்கில் மரங்களும் அப்பெயர் வரக் காரணமாக இருந்திருக்கலாம் என்று கூறகிறார்கள். மூங்கில் மரத்திற்கு மறுபெயர் "பாதிரி மரம்" தேவாலயச் சுற்றாடலிலும் கிராமக் கோட்டு வளவின் தென்கிழக்குப் பக்கத்திலும் தொகையாக மூங்கில் மரங்கள் நின்றிருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. இப் பகுதியை அதனை வைத்தே "பாதிரி கோவிலடி" ஆக அழைத்து வந்திருப்பார்கள் எனக் கூறுபவர்களது கருத்தும் நோக்கற்பாலதாகும். மேலும் இவ் விடத்தில் அமைந்திருக்கும் பரிலூக்கா கிறிஸ்துவத்தேவாலயத்திற்கு வடக்குப் பக்கத்தில் கிறிஸ்துவப்பெண் துறவிகள் தங்கும் பெரிய விடுதி ஒன்றும் இருந்துள்ளது. இப்பொழுது அக்கட்டிடங்கள் அவ்விடம் உள்ளன. அதில் ஒன்று மாடிக் கட்டிடமாகவும் உள்ளது. ஆனால் அவை முதியோர் இல்லமாக இப்பொழுது மாற்றம் பெற்று இருக்கின்றன. ஆகவே இவ்வாறு விவாகமாகாதஇளம் புத்திரித் துறவிகள் இருந்த சூழல் காரணமாக "புத்திரி கோவிலடி" என அழைக்கப்பட்டு வந்திருக்கலாம் எனக் காரணம் கூறுகிறார்கள். அவர்களின் இக்கருத்தையும் இலகுவில் நிராகரித்து விட முடியாது.

மிகவும் அண்மைக் காலம் வரை இச் சந்தியை "கிராமக் கோட்டடிச் சந்தி"என்று இன்னுமொரு நாமத்தில் இவ்விட மக்கள் அழைத்து வந்துள்ளனர். குறித்த இச்சந்தியின் தென்மேற்கு மூலையில் ஏழேகால் பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணிக்குள் நீதிமன்றக் கட்டிடமும், 1960ம் ஆண்டிலிருந்து கிராம சபைக்குத் தனியான ஒரு கட்டிடமும் இடம் பெற்றிருந்தன. குறித்த நீதிமன்றக் கட்டடிடத்தில் 1985ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் இருந்த விண்ணப்ப நீதிமன்றத்தினதும், நீதவான் நீதிமன்றத்தினதும்"சுழற்சி முறை நீதிமன்ற" அமர்வுகள் இடம் பெற்று வந்தன. அதன் நிமித்தம் இச்சந்தியைக், "கிராமக் கோட்டடிச் சந்தி"எனவும் இவ்விடத்து மக்கள் அழைத்து வரக் காரணமாக இருந்து விட்டது.

மேற்குறிப்பிட்ட பெயர்களோடு, இவ்விடத்திற்கு "கச்சாயர்சந்தி", "நெசவாலைச் சந்தி" என்று மேலும் இரண்டு பெயர்களில், 1995ம் ஆண்டு வரை அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. குறித்த இச் சந்தியின் தென்கிழக்கு மூலையில் நெல்லிநாதர் காசிநாதருக்குச் சொந்தமான இரண்டு அறைகளைக் கொண்டிருந்த வாடகைக் கட்டிடத்தில் "கச்சாயர்" என்ற செல்லப் பெயரோடு கூடிய சின்னத்தம்பி சிவகுரு என்பவர், ஒரு அறையில் மாளிகைப் பொருட்கள் வைத்து விற்பதற்கும், அடுத்திருந்த அறையைத் துவிச்சக்கர வண்டிகள் வைத்துவாடகைக்கு விடுவதற்கும், திருத்துவதற்கும், பாவித்துக் கொண்டு, அதன் வடக்குப் பக்கத்தில் ஒரு சாய்ப்பான் நிறுவி அதில் வாடகைக்கு விடுவதற்கு என ஒரு (A40 Austin) மோட்டார் காரும் வைத்திருந்தார். அதன் நிமித்தமே இச்சந்திக்கு"கச்சாயர் சந்தி" எனப் பெயரும் உருவாகிற்று. இந்த ஸ்தாபனம் வந்து பல ஆண்டுகளின் பின், இச்சந்திக்குத் தென்மேற்கு மூலையில் இருந்த நீதிமன்ற வளவை அடுத்து,

அதன் தெற்குப் பக்கமாக உள்ள காணியில் “லிங்கம்” என அன்பாக அழைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை தர்மலிங்கத்திற்குச் சொந்தமான, மின்சாரத்தில் இயங்கும், நவீன தொழில்நுட்ப வசதிகளோடு கூடிய நெசவு சாலை நிறுவப்பட்டு இயங்கி கொண்டிருந்தது. அதனை வைத்து “நெசவாலைச்சந்தி” எனவும் இப்பகுதி அழைக்கப்ட்டு வந்தது. இவைகள் இரண்டும் உள்நாட்டு யுத்தத்துடன் மூடப்பட்டு விட்டன. அவற்றின் உரிமையாளர்களும் இறந்து விட்டனர்.இப்பெயர்கள் இப்பொழுது பாவனையில் இல்லை.

இச்சந்தியின் தென்மேற்கு மூலையில் இருந்த கிராமசபை இப்பொழுது புத்தூர் பிரதேச சபையின் காரியயாலயமாக மாற்றம் பெற்று பெரியதொரு மாடிக் கட்டிடத்தில் உள்ளது. இப்பொழுதும் முன்பு போலவே மிகவும் பிரசித்தமாகவும், மக்கள் பெருந்தொகையில் கூடும் இடமாகவும் உள்ளது. நீதிமன்றமாக இருந்த கட்டிடமும் இப்பொழுதுபிரதேச சபைக் காரியாலயத்தின் தேவைகளுக்காகப் பாவிக்கப்படுகிறது. மிக அநாதியில், நீதிமன்றக் கட்டிடத்தின் ஒரு பகுதிலேயே, கிராமச் சபையும் இயங்கி வந்தது. இக் கிராம சபையின் கன்னித் தலைவராக பரிஷ்டர் முத்துச்சாமி இராமநாதன் அவர்கள் இருந்துள்ளார்கள். இவரின் பெரிய நிழற்படம் ஒன்று திரு. சு. சதாசிவம் அவர்கள் குறித்த சபைக்குத் தலைவராக இருந்த போது அக்கட்டிடத்தில் வைத்து அவரால் திரை நீக்கம் செய்யப்பட்டுக் கிராமசபை நிகழ்ந்த பகுதியில் மாட்டப்பட்டிருந்தது. இந்தக் கிராமச் சபை நிகழ்ந்து வந்த நீதிமன்றக் கட்டிடம், இருந்த காணி, நிலப்பரப்பு ஏழு விஸ்தீரணம் கொண்டதாக இருந்தது. ஆதியில் இக்காணி புத்தூரைச் சேர்ந்த கதிரவேலு சின்னத்தம்பி என்பவருக்குச் சொந்தமாக இருந்ததாகவும்

அவரிடமிருந்து அரச பொதுமராமத்துப் பகுதி சுவீகரித்து, நீதிமன்றக் கட்டிடத்தை நிறுவியதாகவும் கூறப்படுகிறது. பின்பு 1950 ஆண்டில் திரு. சு. சதாசிவம் அவர்களினால், இந்தக் காணியுடன் புலவர் பொன்னம்பலம் அவர்களின் மனைவியாரின் சகோதரியிடம் இருந்து குளி நாலரை (தெற்குப்பக்கமாக) நன்கொடையாகப் பெற்றுக், குறித்த நிலப்பரப்பு ஏழுடன் சேர்க்கப்பட்டு, இப்பொழுது ஏழேகால் பரப்பு விஸ்தீரணத்தடன் இருக்கிறது. இந்தக் காணிக்குள் வடகிழக்கு மூலையில். இருந்த வாகனப் பாதைக்கு நேரே, (10அடி உள்ளே) முக்கோண வடிவத்தில், 12 அடி உயரம் கொண்ட தூபி ஒன்று 1950ம் ஆண்டு வரை இருந்துள்ளது. இதனைக் குறித்த பரிஷ்டர் இராமநாதன் அவர்கள், "யாழ்பாடி" (அந்தகக்கவிவீரராகர் எனவும் அழைக்கப்பட்டவர்) காலத்தில் புத்தூர் கிராமத்தைக் காடு திருத்தி, நாடாக்கி, உபகாரமாகத் தனது முதல் மந்திரியாக இருந்த சேதுராயனுக்குக் கொடுத்து வைத்த "சரித்திரச் செய்தியை" ஞாபகமிருத்தி, நிறுவியிருந்தார் என அறியப்படுகிறது. அதன் அடித்தளப் பகுதியில் "சேதுராயன் நினைவுச் சின்னம்" எனச் சீமெந்து மூலம் ஆக்கப்பட்ட இரண்டு அடி நீளமும், ஒன்றரை அடி அகலமும் கொண்ட கல்லில் பதிவு செய்தும் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் இச்சின்னம் போக்கு வரவுப் பாதையைத் தடுதல் செய்து கொண்டிருந்த காரணத்தினால், அந்தச் சின்னத்தைப் போன்று (எவ்வித உருமாற்றமும் ஏற்படாத விதத்தில்) வேறு ஒன்றைப் புதிதாக இதே காணியின் வடமேற்கு மூலையில் அமைத்துக் கொண்டனர். பழைய சின்னத்தை இடித்துப் பாதையை அகட்டிக் கொண்டனர். அவர்களுக்கு அந்நேரம் அப் பாதையை மாற்றி இன்னொரு பகுதியில் அமைத்துக் கொண்டு, ஞாபகச் சின்னத்தை அதே இடத்தில் வைத்துக் கொள்ள முடியாமல் போனதற்கான காரணம்,

அரச மராமத்துப் பகுதியினர் (PWD) தெருவோரம் நின்ற மரங்களை அகற்றிப் பாதையை வைப்பதற்கானமாற்று இடத்தை ஒதுக்கிக் கொடுக்க மறுப்புத் தெரிவித்துக் கொண்டதே ஆகும். இவ்விடம் குறித்த நினைவுத் தூபி இடமாற்றம் செய்யப்பட்டு ஆறு ஏழு ஆண்டுகளுக்குள் இந்தச் சின்னம் இருந்த இடத்தைக் கைப்பந்து அடிக்கும் மைதானம் (Volliballcourt) அமைப்பதற்காக அடுத்த வந்த கிராம சபை நிருவாகம், அந்தச் சின்னத்தை அவ்விடத்திலிருந்து அகற்றி விட்டது. இச்செயல் இக்கிராமத்திலுள்ள பலபேரால் அந்நேரம் ஆட்சேபிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்களின் பரிதாப வேண்டுகோளின் நிமித்தம் எதிர்ப்புகள் காத்திரமாக அமையாமல் போய் விட்டன. ஆனால் தற்போது உள்ள பிரதேச சபை நிருவாகமாவது, அந்த இடத்தில் (கைப்பந்து விளையாட்டு மைதானமாக இருந்த இடத்தில்) அதனை மீள அமைக்க முன்வர வேண்டும் என்பதே இக்கிராம மக்களின் பலரின் கோரிக்கையாக உள்ளது. அச் சின்னம் இருந்த இடம் இப்பொழுது விளையாட்டு இடமாகப் பாவிக்கப்படாமல் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இத் தூபி வடமேற்கே தள்ளிக் கட்டப்பட முன்பே, இதன் முன் பக்கத்தில், புத்தூர் மேற்குக் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு என ஒரு மண்டபமும், அதனை அடுத்து அக் கட்டிடத்தின் வலது புறத்தில் வாசிகசாலைக்கான ஒரு அறையோடு கூடிய கட்டிடமும், இடம் பெற்றிருந்தன. இந்த இரண்டு கட்டிடங்களும் பகல் நேரத்தில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். வாசிகசாலைக் கட்டிடத்தின் குறித்த அறையில் 1960ம் ஆண்டில், முதன் முதலாக உள்ளூர் ஆட்சியின் கலாசார உதவித்திட்டத்திற்குக் கீழ் முழுப் புத்தூர்க் கிராமத்துக்கும் என ஒரு பிரமாண்டமான மரப்பெட்டியில் சத்தம் வெளியேறக் கூடிய வகையில்

முகப்பு அமைக்கப்பட்டு, அதற்குள் வானொலிப்பெட்டியை வைத்து, மக்கள் கேட்டு அனுபவிக்க வாய்ப்பு ஏற்படுத்தி இருந்தனர். அப்பொழுது வாசிகசாலையின் காரியதரிசியாக இருந்த திரு. என். எஸ். இராசா அவர்களும். அதன் தலைவராக இருந்த திரு. சி. மாணிக்கவாசகர் ஆகிய இருவரும், ஒரு நாளுக்கு ஒருவர் என்ற கிரம ஒழுங்கு முறையில், அதனைப் பகல் நேரத்தில் மாத்திரம் இயக்கி வைப்பார்கள். அக் காலத்தில் புத்தூர் கிராமம் முழுவதற்கும் மின்சாரம் இருக்கவில்லை. ஆகவே குறித்த வானொலியானது மோட்டார் வாகனத்திற்குப் பாவிக்கப்படும் "பற்றறி" மூலமே இயக்கிக் கொண்டார்கள். பிற்பகலில் பெரிய சனக்கூட்டம் அவ்விடத்தில் கூடும். கிராம முன்னேற்ற சங்கத்தின் பயன்பாட்டிலிருந்த பகுதி, இப்பொழுது புத்தூர் பிரதேச சபையின் பொறுப்பில் "புத்தூர்ப் பிரதேச பொதுநூலகமாக" மாற்றப்பட்டு, நன்று இயங்கி வருகிறது. இதற்கு அருகில் இருந்த வாசிகசாலை பெரியளவில் முன்னேற்றம் காணவில்லை. புத்தூர் கிராமத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் தற்சமயம் மின்சாரம் வந்து விட்டது. வீட்டுக்கு வீடு தொலைக் காட்சிப் பெட்டிகளும், கணணிகளும், தொலைத்தொடர்பு சாதனங்களும் புழக்கத்தில் உள்ளன. போக்குவரத்துச் சாதனங்கள் பாரிய முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. திரு. சி. நடராசா அவர்கள் இரண்டாவது தடவை இக் கிராம சபைத் தலைவராக இருந்த காலத்தில் அச் சபைக்குத் தனியான புதிய கட்டிடம் நிறுவப்பட்டது. அது இப்பொழுது பெரிய மாடிக் கட்டிடமாக மாற்றம் பெற்று புத்தூர் பிரதேச சபையின் பிரதான அலுவலகமாக உள்ளது.

இச் சந்தியில் இணையும் மூன்று தெருக்களின் ஓரத்தில் நின்ற சவுக்க மரங்களில் இப்பொழுது ஆக இரண்டே இரண்டு மரங்கள் மட்டும் அடையாளத்திற்கு

நிற்கின்றன. பரிஷ்டர் இராமநாதன் அவர்களால் கிராமசபை வளவில் உண்டாக்கப்பட்ட பயன்தரு மரங்களில் தொன்னூறு வீதமானவை இப்பொழுது இல்லை. பல கட்டிடங்கள் அவைகள் நின்ற இடத்தில் கட்டப்பட்டு விட்டன. இச் சந்திக்குக் கிழக்கே இருக்கும் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் தென்கிழக்கு மூலையில், நுனிவிற்குளம் பகுதியைச் சென்றடையும் பாதை ஓரமாகக் காணி ஒன்று இருந்தது. அதன் நாலு பக்கச் சுற்றுப்புறங்களிலும் சவுக்க மரங்கள் நின்றிருந்ததாகவும், கிழக்குப் பக்கத்தில் சிறிய தொகையில் மரணித்த கிறிஸ்துவ மதகுருமாரின் நினைவுக்காக நாட்டப்பட்ட நடுகல்லுகளும் அதற்கான கட்டுகளும் இடம் பெற்றிருந்ததாகவும், அக்காணியின் நடுவிலிருந்த இடைவெளியில், கூத்துமேடை அமைத்து இரவு நேரங்களில் “அரிச்சந்திரர்” போன்ற பழைய நாடகங்கள் நடத்தப்பட்டதாகவும், அவ்விடத்தில் அரசியல் பிரசார கூட்டங்கள் பிற்காலங்களில் இடம் பெற்றதாகவும், கோடை காலங்களில் குறித்த தமிழ் கலவன் பாடசாலை அக் காணியை அதன் மாணவர்களின் விளையாட்டிடமாகப் பாவித்ததாகவும் இக்கிராமத்தின் மூத்த பிரஜைகள் கூறுகிறார்கள். அவ்விடத்தில் ஒன்று இரண்டு சவுக்க மரங்கள்காணப்படுகின்றன. ஆனால் இப்பொழுது அப்படி நிகழ்ச்சிகள் அவ்விடத்தில் நடப்பதாக இல்லை. இச்சந்தியின் வடக்கு நோக்கிய தெருவில் இருந்த கிறிஸ்துவத் தேவாலயம் புனரமைக்கப்பட்டும் அதன் எதிரிலுமுள்ள தமிழ் கலவன் பாடசாலை, புத்தூர் பாடசாலைகளின் “கொத்தணி” அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டு, நன்றாக நடைபெறுகிறது. குறித்த வேதக்கோயில் வளவுக்குள் வடக்கேயுள்ள பரிலூக்கா முதியோர் இல்லமும் அதன் அருகேயுள்ள பரிலூக்கா மகப்பேற்று மருத்துவ நிலையமும் மறுசீரமைக்கப்பட்டு நன்றாக இயங்குகின்றன.

இவ் மருத்துவ நிலையத்திற்கு எதிரே உள்ள திரு. எஸ். சதாசிவம் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட புத்தூர் பொதுச் சந்தை நன்றாக நடை பெறுகிறது. அதை அடுத்திருந்த மக்கள் வங்கி இப்பொழுது இல்லை. ஒரு கிராமிய வங்கி உள்ளது. சந்தைக்கு எதிரே இருக்கும் காரைக்கூடல் ஞானவைரவர் கோயில் எப்பொழுதுமில்லாத வகையில் சிறப்புடன் காட்சி அளிக்கிறது. அதே போன்று தகரம் பிள்ளையார் கோவில் கட்டிடங்களும் புனருத்தாரணம் கண்டு புதுப் பொலிவுடன் காணப்படுகிறது.

இதன் யாழ்ப்பாணப் பட்டிணம் நோக்கிய தெருப் பாதையில் இருக்கும் உபதபால் நிலையம், வர்த்தக ஸ்தாபனங்கள், புத்தூர் மத்திய வைத்திய நிலையம் ஆகியன சிறப்பான புதிய கட்டிடங்களுடனும் நன்றாக இயங்குகின்றன. இவற்றை அடுத்து "கோபால் ரேட்ஸ்" என்னும் வர்த்தக ஸ்தாபனம் இரண்டு புதிய கட்டிடங்களில் நடைபெறுகின்றன. புத்தூர் சிவன் கோவிலின் நாலு பக்கங்களின் பெருவீதிகளும் புணரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி தருகிறது. புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்குப் பல புதிய கட்டிடங்கள் சேர்க்கப்பட்டு விஸ்தாரமாகவும், சிறப்பாகவும் காட்சி அளிக்கிறது. இக் கல்லூரியின் வரவேற்பு வளைவுக்கு எதிரே உள்ள திரு. பொ. சிவசுப்பிரமணியம் அவர்களின் பூந்தோட்டம், நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் குறித்த கல்லூரியின் "வரவேற்பு வளைவுக்கு" அது அழகு சேர்த்துக் கொண்டு இருக்கிறது. கருகப்பை ஈஸ்வரன் கோவில் இருக்கும் காணி நிலப்பரப்பு ஏழு குளி ஏழு, அதன் உரித்தாளர்களால் 2010ம் ஆண்டு உபயமாக கோயிலுக்குக் கையளிக்கப்பட்டு, அவ்விடத்தில் பக்தர்களின் நிருவாகத்தால் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுச் சிறப்பாக இருக்கிறது. இக்கோவில் அமைந்திருக்கும்

இடத்துக்கு வடபால் சென்று கொண்டிருக்கும் புத்தூர் சாவகச்சேரிப் பெருந் தெரு அகலமாக்கப்பட்டு, புது முறையில் (Carpet) தார் போடப்பட்டு இருக்கிறது. பஞ்ஞசீல பாடசாலைக்குப் புதிய விளையாட்டு மைதானம் அமைத்துள்ளார்கள். புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா சிறுவர் படிப்பகம் அதன் நலன்விரும்பி ஒருவரின் மனைவியின் ஞாபகார்த்தமாக வழங்கிய நிலப்பரப்பு எட்டு விஸ்தீரணம் கொண்ட காணியை நன்கொடையாகப் பெற்று, அப் படிப்பகத்தை விஸ்தரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஸ்ரீ குமரகுருபரன் கிராம முன்னேற்றச் சங்கமும், வாசிகசாலையும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் நன்றே நடைபெருகின்றன.

சங்கானைப் பட்டினம் பக்கம் செல்லும் இச் சந்திக்கு அண்மித்த வீதியோரம் இடது புறத்தில் இருக்கும் “ஸ்ரீ சோமஸ்கந்த அன்ன சத்திரம்”, அதற்கு எதிரில் உள்ள அரிசி ஆலை ஆகியன முன்புபோல இயங்கிக் கொண்டிருக்கின்றன. மருதடிக் குறிச்சியில் இருக்கும் வாசிகசாலை நன்றாக நடைபெறுகிறது. கிந்துசிட்டி மயானம் புணரமைப்புப் பெற்றுள்ளது. நிலாவிரைக் கிணற்றுச் சூழல், உல்லாச பிரயாணிகளின் முக்கிய பார்வையிடமாகத் தினமும் இருநூற்றுக்கு மேற்பட்ட யாழ்ப்பாணத்திற்கு வரும் பல்லினத்தைச் சேர்ந்த, சுற்றுலா பயணிகள் தரிசித்துப் போகும் மையமாக வந்துவிட்டது. அதன் எதிரில் உள்ள புராணப் பெருமையும், சரித்திரப் பிரசித்தியும் கொண்ட “நவசைலேஸ்வரர் ஆலயம்” புணரமைக்கப்பெற்றுச் சிறப்பாகவும் இருக்கின்றது. இக்கோயிலுக்கு ஒரு மகாகோபுரமும் குறித்த இதன் மூலவர் தீர்த்தமாடும் “நிலாவரைக் குன்றுக்கு” ஒரு வரவேற்பு வளைவும் நிறுவப்பட்டால் இவை மேலும் எழுச்சியும் பொலிவும் பெற்று புத்தூரின் வருங்காலச் சரித்திரத்தில் முக்கிய இடம்

பிடித்துக் கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே இக் கிராமத்தின் வசதி படைத்தோரும், பரோபகாரிகளும் சிந்தித்து நவசைலேஸ்வரர் சந்நிதானத்தின் முகப்புக்கு ஒரு மகா கோபுரமும் அதன் தீர்த்தம் இடம்பெறும் நிலாவரைக்கு ஓர் "வரவேற்பு வளைவும்" அமைக்க முன் வருவார்களாக. நிலாவரைக்குக் கிழக்கேயுள்ள கமத்தொழில் அலுவலகமும், உரம் விற்பனைப் பகுதியும் நன்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இக் கட்டுரையில் குறித்த "சவுக்கடிச் சந்தியை" வைத்து புத்தூர் கிராமத்தின் பௌதீக அமைப்பையும், அது அடைந்திருக்கும் மாற்றங்களையும், ஆராயச் சரியான மையப் புள்ளியாக அமையுமெனக் கருதியபடியாலேயே இத் தலையங்கத்தைத் தெரிவு செய்துள்ளேன். மேலும் இக் கட்டுரையில் புத்தூர் பகுதியில் இருக்கும் இன்னும் சில முக்கிய இடங்கள், பொது ஸ்தாபனங்கள் சேர்க்கப் படாமல் இருப்பதையும் அறிவேன், ஆனால் கட்டுரையின் "அளவு மரபு" மீறிப் போய்விடும் என்றகாரணத்தினால், அவைகள் தவிர்த்துக் கொள்ளப்பட்டன. இன்னொரு சந்தர்ப்பத்தில் அவற்றையும் சேர்த்துப் பதிவு செய்து கொள்வேன் எனத்தெரியத்தருகிறேன்.

# உடையார் உத்தியோகம் பற்றிய ஓர் பார்வை

(என் முற்சந்ததியினர் ஏழு தலைமுறையாகத் தொடர்ந்து இப் பதவியில் இருந்துள்ளனர். ஆகவே இவ் ஆக்கம் அத்தொழில் சம்பந்தமான ஒரு ஆய்வாகும்)

உடையார் பதவியின் நிருபண காலத்தை அறிய, யாழ்ப்பாண வரலாற்றோடு தொடர்வுபடுத்திப் பார்க்கும்போது, அதன் இடைநிலைக் காலப்பகுதியாக (mediaeval period) அமைகிறது. யாழ்ப்பாணச் சரித்திரத்தின் இடைநிலைக்காலத்திய (mediaeval period) நிர்வாகக் கட்டமைபுச் சம்பந்தமாக மிகவும் அருந்தலாகப் கிடைக்கப் பெற்றதும், பக்கச் சார்பற்றதுமான விபரங்கள், இபன் பட்டுட்டா (Iban Battuta) என்ற மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த அராபிய யாத்திரிகரின் பிரயாணக் குறிப்பை உள்ளடக்கி வெளிவந்த "ரவல்ஸ்" (Travels) என்னும் நூலில் உள்ளது. இது நாலு பகுதிகளாக (Four Volumes) நாலு தனித் தனிப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ளது. இந்த யாத்திரிகர் இலங்கை, மாலைதீவு ஆகிய இரு நாடுகள் சம்பந்தமாகப் பதிந்து வைத்திருந்தவை, குறித்த நூலின் நாலாவது பகுதி (Fourth Volume) முதலில் பிரான்ஸ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு பின்பு அதனை ஆங்கில மொழியாக்கம் செய்தனர். இதனை நேரடியாகவே அராபிய மொழியிலிருந்து G A R Gibbs & C E Beckingham ஆகிய இருவரும். 1994 ம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். இதனை ஆதாரமாக வைத்தே இந்த ஆய்வு செய்யப்படுகிறது.

இபன் பட்டுட்டா அவர்கள் யாத்திரிகனாக 1344 (AD) ஆண்டு செப்டம்பர் மாதம் முதற்கிழமையில் மார்த்தாண்ட சிங்க ஆரிய பரராசசேகரன் (முடிக்குரிய பெயர்

ஆறாம் ஆரியச்சக்கிரவர்த்தி) யாழ்ப்பாணத்தை ஆண்டு கொண்டிருந்த போது, புத்தளத்தில் வந்து இறங்கி மன்னரின் விசேட விருந்தினராகச் சில காலங்கள் இருந்துள்ளார். அப்படி இருந்த காலப்பகுதியில் இலங்கையில் சிவனொளிபாத மலை உட்பட குருநாகல், கொழும்பு, காலி போன்ற பல இடங்களுக்குச் சென்றிருக்கிறார். இவரின் இப்பிரயாணங்களுக்குத் தேவைப்பட்ட வசதிகள் யாவும் அரசனால் வழங்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் தங்கிய காலத்தில், அப்பொழுது அவ்விடம் இருந்து நிருவாகக் கட்டமைப்புப் பற்றிய விபரங்களைக் குறிப்பு எடுத்துக் கொண்டார். அவரின் அந்தக் குறிப்புக்களின்படி, அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம், இரண்டு தலைநகரங்களைக் கொண்டிருந்திருக்கிறது. ஒன்று நல்லூ ரிலும் அடுத்தது புத்தளத்திலுமாக இடம்பெற்றிருந்தது, இவற்றில் புத்தளம் முத்துக்குளிப்புக் காலங்களில் மட்டும் தலைநகர் போன்று சுறுசுறுப்பாக இருந்ததாகக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாடு அப்பொழுது நிருவாக வசதிகளுக்காக, நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அவை மேலும் பரிஷ் (Parrus) ஆகப் பிரிக்கப்பட்டிருந்தது. Parrus என்ற பதத்தின் அர்த்தம் ஊர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஊர்களை உள்ளடக்கிய அலகுகள் (Territional Units) என்பதாகும். டச்சுக்காலத்தில் இவை Paris என ஆங்கிலத்திலும், "கோவிற்பற்று" எனத் தமிழிலும் அழைக்கப்பட்டன. இப்பொழுதும் காணி உறுதிகள் எழுதும் போது, அவற்றின் அமைவிடத்தைச் சுட்டிப்பாக விபரிப்பதற்கு. இந்தப் பதம் பாவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிர்வாகக் கட்டமைப்பின் உச்சியில் அரசன் சகல அதிகாரங்களுடனும் இருந்துள்ளார். படைப்பிரிவுகள் யாவும் அவரின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்திருந்தன.

அரசனுக்கு உதவியாகச் சிவில் நிருவாகத்தில் அதிகாரிமார் (Adigars) அரசனால் நேரடியாக உபயோகிக்கப்பட்டு இருந்தார்கள். இவர்கள் மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பாக விடப்பட்டிருந்தார்கள். நீதி சம்மந்தமான கருமங்களுக்கு அரசின் முகவர்களாகச் செயற்பட்டார்கள். இவர்களுக்கு அரச வேதனமென எதுவும் வழங்கப்பட இல்லை. ஊதியமாக உணவுவகைகளை ஊர் மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். காலப்போக்கில் இவ் ஒழுங்குமுறை நீக்கப்பட்டு "அதிகார்வரிப்" பணத்தில், ஒரு பகுதி இவர்களுக்கு என ஒதுக்கப்பட்டு இருந்தது. டச்சுக்காரர் தாங்கள் நடைமுறைப்படுத்திய, "பணவரியில்"" இருந்து ஒரு பகுதியை இவர்களுக்குச் சேரக் கூடியதாக வழி செய்து இருந்தார்கள்.காலத்துக்குக் காலம், பதவிக் கடமைகள் மாற்றம் பெற்றிருந்தன.

அதிகார்மாருக்கு உதவ "முதலியார்மார்"(Mudaliyars) நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களின் நியமனம் பிராந்திய ரீதியில் செய்யப்பட்டிருந்தன. பிராந்தியத்தின் முக்கிய பொறுப்புகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. பிராந்தியங்களில் நிகழும் முக்கிய வைபவங்கள் யாவற்றினதும் விபரங்களைத் திரட்டி, மேல் இடத்திற்குச் சமர்ப்பித்துக் கொள்ள வேண்டும். இவர்கள் குடியேற்றம் சம்பந்தமான விவகாரங்களிற்குப் பொறுப்பாகவும், மேலும் நீதி வழங்கும் கடமைகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டு இருந்தார்கள். குற்றங்களைத் தண்டிக்கவும், பிணக்குகளைத் தீர்க்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டு இருந்தது. பொதுநல சேவைகளுக்கும் பொறுப்பாக இருந்தார்கள். பதவிச் சின்னங்களாகப் பல்லக்கு, வெள்ளைக்குதிரை, வில்லுக்குஞ்சம், கொடி, நாகசுரம், முதலிய வரிசைகளும் வழங்கப்பட்டிருந்தன. இவர்களின் காணிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு உதவியாக கணக்குச்

சம்பந்தமான கருமங்களுக்கு, “கண்காணி” (Kankani) “பண்டாரப்பிள்ளை” (Pandarapillai) ஆகிய பதவிப் பெயர்களில், நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஒவ்வொரு பிராந்தியங்களுக்கும் “மணியகாரர்” (Maniagars) பிரதானிகளாக (Chief) ஆக நியமிக்கப்பட்டு இருந்தார்கள். வரிகள் அறவிடுதல் கருமங்களுக்குரிய பொறுப்புக்கள், வரி ஏய்ப்பாளர்களுக்கு குற்றங்கள் விதித்தல் ஆகியன இவர்களைச் சார்ந்திருந்தது. காணிப்பிணக்குகள் தீர்ப்பது, முடிக்குரிய நிலங்கள் சம்பந்தமான விவகாரங்களைக் கையாளுதல் போன்ற பொறுப்புகளும் இவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிப்பதற்கும். குற்றப்பணம் கொடுக்க முடியாதவர்ளுக்கு அடிப்பிப்பதற்கும் உரிமை பெற்றிருந்தனர்.

குறித்த மணியகாரருக்கு உதவியாக அடுத்த நிலையில் “உடையார்மார்” (Udaiyars) ஒவ்வொரு ஊருக்கும் அல்லது இரண்டு மூன்று ஊர்கள் சேர்ந்த பகுதிகளுக்குப் (இறைகளுக்குப்) பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அந்தந்த இறைகளின் சட்ட ஒழுங்குகளுக்குப் பாதுகாவலர்களாகவும் தங்களின் பகுதிக்குள் அடங்கும் அரச நிலங்களை அடையாளங் கண்டு அவற்றை அளவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இன்னும் அந்தந்த ஊர்களின் வருவாய்கள் ஒழுங்காக அறவிடப்படுகிறதா என்பதைக் கண்காணித்துக் கொள்ளும் பணிகளும் அளிக்கப்பட்டிருந்தன. பல நிர்வாக ஏற்பாடுகளில் இவர்களின் உதவி பொதுவாகத் தேவைப்பட்டிருந்தது எனலாம். இவர்களின் நியமனம் குலத்தாலும், குணத்தாலும், செல்வாக்காலும், சம்பத்தாலும் சிறந்து விளங்கியவர்களுக்கே வழங்கப்பட்டது. குறிப்பிட்ட காலம் வரை இப்பதவி பரம்பரை உரிமையாகவும் இருந்து

வந்துள்ளது. ஊதியமாக எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் அதற்கு ஈடாக நிலங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அந் நிலங்களிற்கு வரி விலக்கும் இருந்துள்ளது. இதன் நிமித்தம் இவர்கள் நிலச்சுவாந்தர்கள் ஆகினர். அந்நிலங்களைத் தங்களுக்கு வேண்டியோர் இலவசமாக விவசாயம் செய்ய அனுமதித்து இருந்தனர். இப்படியான நடவடிக்கைகளினால் மக்களின் நன் மதிப்பைச் சம்பாதித்துக் கொண்டனர். ஊருக்குள் அசாதாரண முறையில் ஏற்படும் மரணங்களின் விசாரணைகளில் இவர்கள் பிரசன்னமாகித் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் தகமையும் அளிக்கப்பட்டிருந்தது. மேலும் ஊரில் உள்ள அரச நிலங்களை அதிகார்மார் தானமாக வழங்குமிடத்து இவர்களின் ஒப்பம் பெறுவது வழக்கமாகக் கொள்ளப்பட்டிருந்தது. ஊரில் நிகழும் முக்கிய வைபவங்களை அறிந்திருக்கவும், அனுமதி தேவைப்படும் நிகழ்வுகளுக்கு, அவற்றின் தன்மை அறிந்து மேலிடத்துக்குச் சிபாரிசு செய்யும் தகுதியும் வழங்கப்பட்டிருந்தது. ஊரில் அமைதியை நிலை நாட்டுவதில் முக்கிய பங்கை இவர்கள் வகித்திருந்தனர். இதன் நிமித்தமாகவே சில கிராமங்களில் மக்கள் கூறக் கேட்டிருக்கிறேன். “உடையாரின் ஊன்று கோலைக் (Walking Stick) கேட்டு எடுத்து வந்து, விழாப்பந்தலில் முன்னுக்கு வைத்த விட்டு, வைபவத்தை நிம்மதியாய் நடத்திக் கொள்ளலாம். என்று இக்கூற்று இப்பகுதிக் கிராமங்களில் அக்காலத்தில் இருந்த மதிப்பையும் செல்வாக்கையும் காட்டி நிற்கின்றது. இவர்களின் சீருடையாக நாரியில் வெள்ளை நிற வேஷட்டியும் அங்கத்தை மூடிச் சர்வாணியும், அதில் உலோக எழுத்துக்களால் “உடையார்” எனப் பொறிக்கப்பட்ட இலட்சணையும் தோழில் மடிப்புடனான உத்தரியச்சால்வையும். தலைப்பாகையும் அணிந்து கொள்வார்கள். அண்மைக்காலம் வரை “முன்னோரினது ஞாபகார்த்தப் பொருளாக” அப்படி ஒரு சீருடையை

எனது பெற்றார் தங்கள் வீட்டில் பாதுகாப்பாகப் பேணி வைத்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவைகள் சிவில் யுத்தம் உக்கிரமம் பெற்றிருந்த காலத்தில் (1998ல்அவர்களின் இடியுண்ட இல்லத்தடன் மாண்டு போயின. இப்பதவி 1960ல்அருகிப்போகும் காலத்தில், யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள மந்துவில் கிராமத்தில் கடமையிலிருந்த நல்லமாப்பாணர் என்பவரை இந்த உத்தியோக உடைக் கோலத்தில் பார்த்திருக்கிறேன்.

இவர்களுக்கு உதவியாக உத்தியோக நிலையில் அடுத்ததாகத் "தலையாரிகள்" (ஒல்லாந்தர் காலத்தில் விதானை என அழைக்கப்பட்டவர்கள்) நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களின் நியமனமும் கிராம ரீதியிலேயே செய்யப்பட்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் இரண்டு ஊர்களுக்கு ஒருவர் எனவும் நியமிக்கப்பட்டு இருந்தனர். இவர்களின் சேவைக்கு ஈடாகச் சில வயல் நிலங்களையும், மேட்டுக் காணிகளையும் வழங்கி அவற்றிற்கு வரி விலக்களிப்பும் செய்து கொடுத்திருந்தனர். ஊர்களில் கள்ளர்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல், அரச வரிகள் அறவிடுதல் மற்றும் சட்டதிட்டங்களை ஊர்மட்டத்தில் அவதானித்தல் போன்ற கடமைகள் கொடுக்கப்பட்டிருந்தன. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மக்கள் இலவச அரிசி மற்றும் உப உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யக் கூப்பன்கள் வழங்கும் வேலையும் இவர்களிடம் விடப்பட்டிருந்தது. 1806ம் ஆண்டு ஆடி மாதம் தொடக்கம் இவர்களின் பதவிப் பெயர் "விதானையார்" என மாற்றப்பட்டது. 1960ம் ஆண்டில் மீளவும் இவர்களின் பதவிப் பெயர் "கிராமசேவகர்கள்" என்றும் சில ஆண்டுகள் கழித்து "கிராம உத்தியோகத்தர்" எனவும் மாற்றம் பெற்றுள்ளது. இவர்களுக்கு இப்பொழுது சம்பளமும் வழங்கி, அலுவலகங்கள் தாபரிப்புக்காகப்

பிறம்பாகப் பணமும் வழங்கப்படுகிறது. இன்னும் இவர்களுக்கு அரசாங்க கருமங்களின் பொறுப்பான வேலைகள் பல இப்பொழுது அளிப்பட்டுள்ளன. கிராம மட்டத்தில் அரசாங்கத்தின் முக்கிய முகவர்கள் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். ஆனால் இவர்களுக்கு முன்பு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்டு விட்டன.

இடைநிலைக் காலப்பகுதியில் (Mediaval period) தலையாரிகளுக்கு அடுத்த நிலையில் இன்னும் சில உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். உதாரணமாக ஒவ்வோரு சாதிக்கும் “நாட்டாமை” என்பவர் நியமிக்கப்பட்டு அவரின் பொறுப்பில் அந்தந்தச் குலத்துக்காக ஒதுக்கப்பட்ட பணிகளைக் குறித்த சாகியத்தார் சரிவர நிறைவேற்றுகிறார்களா என்பதை அவதானிக்க விடப்பட்டிருந்தார்கள். தலையாரிகளுக்கு உதவியாக இருந்த மேற் குறித்த “நாட்டாமை” அடைப்பனார், பட்டங்கட்டிகள், போன்ற நியமனங்களும், “முதலியார்”, “அதிகார்”, “உடையார்” போன்ற பதவிகளும் 1960ம் ஆண்டின் பின்பு உருவான ஜனநாயக முறையிலான சிவில் நிருவாகக் கட்டமைப்புகளின் கீழ் அற்றுப்போயின. எனினும் இப்பதவிப் பெயர்கள், யாழ்ப்பாணக் கிராம சமுதாயத்துடன் இரண்டறக் கலந்து விட்டன என்றே கூறவேண்டும். இவ் உத்தியோகங்களை வகித்தவர்களின் பிற்சந்ததியார் பெரும்பாலானோர், நினைவு மலர்கள் வெளியிடும் போது, முக்கியமாக அதில் இடம்பெறும் “மரபுகிளர்த்தல்” பகுதியில், இன்ன “உடையார்” அல்லதுஇன்ன “அதிகார், “மணியகாரர்” பரம்பரை வழி வந்தவர்கள் என்று பதிவு செய்து கொள்ளத் தவறுவதில்லை. கிராமங்களில் நிலவும் சம்பாஷனைகளில் “சந்ததிக்குப் பெயர் சொல்ல, ஊரில் ஒருவர் இருக்க வேணும்” என்று கூறுவது கேட்டிருக்கிறேன்.

அந்த ஸ்தானத்தில் வைத்து இப்பொழுதும் இவர்களின் பதவிப் பெயர்கள் பாவிக்கப்படுகின்றன எனக் கூறலாம்.

இந்தியாவின் தென்மானிலத்தில் குறிப்பாக மைசூரில் பதினேழாம் நூற்றண்டில், உடையார் (Uodaiyar) ஒரு சந்ததிப் பெயராகவும், இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சி ஆகிய இடங்களில் கலிங்க அரசு இருந்த போது ஒரு குலப் பெயராகவும் இருந்துள்ளது. சிற்றூர்த் தலைவர் தொட்டு, அரசன் ஈறாகப் பல தரத்திலும் உள்ளவரை "உடையார்" என வழங்கினர். முதலாம் இராஜராஜசோழ மன்னர் "பெரியஉடையார்" என்று அழைக்கப்பட்டிருந்தார் என்பதும் நோக்கற்பாலது. யாழ்ப்பாணத்தில் போன்று முதலியார், உடையார், பண்டாரிப்பிள்ளை, கணகாணி, தலையாரி அதிகாரிகள் வன்னிமை நிர்வாகத்திலும் இருந்துள்ளனர் என்பது சுவாமி ஞானப்பிரகாசர் வெளியிட்ட "வன்னியம் நல்லமாப்பாணனின் ஓலை" மூலம் அறியக் கிடைக்கின்றது.

**உசாத்துணைகள்:**


"இபன் பட்டுட்டாவின்" பிரயானக் குறிப்புகள் அடங்கிய ரவல்ஸ் புத்தகத்தின் நாலாம் பகுதி (G A R Gibbs & C EE Beckingham அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் ஆனது).

"யாழ்ப்பாண இராட்சியம்" - கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் ஆக்கியது,

"யாழ்ப்பாண வைபவ மாலை" - குல சபாநாதன் அவர்கள் வெளியிட்டது.

"வன்னியர்" - பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் நூல்

# புத்தூர் மத்திய மருந்தகம்

(Puttur Central Dispensary and Primary Medical Care Center)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அமைந்திருக்கும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பெருந் தெருவில், இக்கல்லூரிக்கு நூறு யார்கள் தொலைவில் வரும் சந்தியில், சாவகச்சேரி செல்லும் வீதியில், வலது பக்கத்தில் மேற்குறித்த மருந்தகம், அழகான ஒரு புதிய கட்டிடத்தில் அமைந்துள்ளது. வலிகாமம் கிழக்குப் பகுதியில், புத்தூரிலும் அடுத்தது உரும்பிராயிலும் ஆக இரு அரசாங்க மத்திய மருந்தகங்கள் மட்டும் உள்ளன. வட மாகாணத்தில் இப்படியான முப்பத்தொரு அரசாங்க மத்திய மருந்தகங்கள் உள்ளன. குறிப்பாக வலிகாமம் கிழக்குப் பகுதியிலுள்ள இவ் இரு மருந்தகங்களிலும், காலத்தால் மூப்புப் பெற்றது புத்தூரில் உள்ளதாகும். இதன் ஆரம்ப காலத்தை உறுதிபடக் கூற முடியாததாக இருப்பினும், இது நிச்சயமாக முதலாம் உலக மகா யுத்த காலத்தின் பின்பு, இரண்டாவது உலக யுத்தம் தொடங்க முன்பு (1937), புத்தூரில் ஸ்தாபிதமாயிருக்க வேண்டும். அதற்கான பல ஆதாரங்கள் உள்ளன. இவ் மருந்தகத்தின் பழைய கட்டிடத்தின் நுழை வாசல் முகப்பு கதவைக் குண்டு துளைக்காமல் இருக்க மிகவும் காத்திரமான, பத்து அடி அகலத்தில், பன்னிரண்டு அடி உயரத்தில், இரண்டு அடி கனதியில், சீமெந்துச் சுவர் ஒன்று இரண்டாவது யுத்த காலத்தில் எழுப்பப்பட்டிருந்தது. அச்சுவர் 1950ம் ஆண்டு வரை குறித்த இடத்தில் அகற்றப்படாமல் இருந்து, அப்போதிக்கரி நாகலிங்கம் அவர்கள் வைத்திய அதிகாரியாகக் கடமை புரிந்த காலத்தில் (1949 - 1955) அதனை இடித்து அகற்றி விட்டார்கள் எனவும், கட்டிடத்தின் கூரை ஓடுகளுக்கு மேல் மிகவும் துல்லியமாகத்

தெரியக்கூடியதாகப் புள்ளடி (FirstAid Mark) அடையாளம் இடப்பட்டு இருந்ததாகவும். யுத்தகாலம் முடிவடைந்த பின்பும் அது நீண்ட காலமாக அழியாமல் இருந்ததைப் பார்த்ததாகாவும், இக்கிராமத்தின் முதியவர்கள் கூறுகிறார்கள். அந்த நேரப் போர்ச் சூழலுக்கு ஏற்ப ஒரு அவசர சிகிச்சைப் பிரிவும் தயார் நிலையில் அவ்விடத்தில் வைக்கப்பட்டு இருந்ததாக அவர்கள் கூறுகிறார்கள். இந்தப் பகுதியில் வான் தாக்குதலில் காயமடைந்தோரைப் பாதுகாப்பாக மருந்தகத்திற்கு அழைத்துவர தொண்டர்களும் மருந்தகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்ததாகவும், அறியத் தந்தார்கள். ஆகவே குறித்த மருந்தகம் இரண்டாவது மகா யுத்த காலத்தையும் தாண்டிப் பின்பு ஏற்பட்டிருந்த உள் நாட்டு (Civil) யுத்தத்தையும் கடந்து எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு கண்டு புதிய கட்டிடத்தில் இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது.

குறித்த மருந்தகம் முதலில், புத்தூரைச் சேர்ந்த திரு. மழவராயர் கந்தையா என்ற தனவந்தர், தனது வதிவிடத் தேவைக்காகக் கட்டிய கட்டிடத்திலேயே 2010ம் ஆண்டு வரை இடம் பெற்றிருந்தது. அரசாங்கம், மருந்தகம் நடத்தவென அவரை அணுகிக் கேட்டபோது, அவர் எதுவித மறுப்பும் கூறாது. புதிதாக அமைத்த குறித்த கட்டிடத்தைக் ஒப்படைத்தாரென எனது பெற்றார் கூறக் கேட்டிருக்கிறேன். திரு. மழவராயர் கந்தையா அவர்கள் தனது வாழ்நாள் வரை, குறித்த கட்டிடத்திற்கு வாடகையாக எதுவித பணமும் அரசாங்கத்திடம் இருந்து பெற்றதாக இல்லை. ஆனால் திரு மழவராயர் கந்தையா அவர்கள் இறந்த பின் அவரின் உரித்தாளரின் கோரிக்கையின் நிமித்தம், இரண்டு எண்கள் தொகையில் ஒரு வாடகை அரசாங்கத்தினால் இறுக்கப்பட்டு வந்ததாக அறியக்கிடக்கிறது. பெரும்பாலும் அவரின் உரித்தாளர். காணிக்கும் வீட்டிற்கும் தங்கள்

உரித்தை நிலைப்படுத்திக் கொள்ள அப்படியான ஒரு சிறிய வாடகையை அரசாங்கத்திடம் இருந்து பெறுவது அவசியமாகக் கருதியிருக்கலாம்.

2010ம் ஆண்டு வரை இம் மருந்தகம் இருந்த பழைய கட்டிடம், மூன்று விசாலமான அறைகளும், மூன்று விறாந்தைகளும், தனியாக ஒரு குசினியும், களஞ்சிய அறையும், பெரிய வாகனத்தரிப்பிடமும் கொண்டிருந்தது. மேற்குப் பக்கத்தில் இருந்த இரு அறைகளும் அவற்றின் முன் இருந்த விறாந்தைப் பகுதியும் புறம்பு படுத்தப்பட்டு, கிளினிக் நடத்துவதற்கும் மருந்துகள் சேமித்து வைப்பதற்கும் பாவிக்கப்பட்டு வந்தது. கட்டிடத்தின் மிகுதிப்பாகம் அனைத்தும் மருந்தகப் பொறுப்பாளரான வைத்தியரின் விடுதித் தேவைக்கு ஆக ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்குப் பக்கத்தில் இக்கட்டிடம் இருந்த காணிக்குச் சேர்ந்த்தாக, ஆனால் புறம்பு படுத்திய ஒரு அடைப்புக்குள் இரண்டு அறைகளைக் கொண்ட இன்னொரு கட்டிடம், மருந்தாளரின் விடுதியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. திரு. தம்பையா அவர்கள் மருந்தாளராக இருந்த போதுதான் அக் கட்டிடத்தைக் காணிச் சொந்தக்காரன் நிறுவிக் கொடுத்தார் என்றும் அறியக் கிடக்கிறது இவர் இளைப்பாறிய பின்பும் அவரும் மனைவியும் அதிலேயே இருந்து வந்தார்கள், அவருக்குப் பின் வந்த மருத்துவர்கள் அக்கட்டிடத்தை அரசாங்கத்தின் ஆட்சியிலிருந்து மீளப் பெற்றுக் கொண்டனர். திரு. தம்பையா அவர்களுக்குப் பின்பு வந்த மருந்தாளர்கள். திரு. இ. செல்வராசா, திரு. துரைராசா ஆகியோர். தங்களது வீட்டிலிருந்தே கடமைக்கு வந்து சென்றனர்.

இந்த மருந்தகத்திற்கும் நோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கும் முதல் வைத்திய அதிகாரியாக காலஞ்சென்ற

வைத்தியக் கலாநிதி வி. ரி. பசுபதி அவர்கள் அரசாங் கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தார். என்றும், அவர் குடும்பமாக இவ்இடத்தில் இருந்த விடுதியிலேயே வசித்து வந்தார்கள் எனவும், இவ்விடத்துக்கு அண்மையில் வசித்த முதியோர் கூறக்கேட்டிருக்கிறேன். அவுஸ்திரேலியாவில் தற்சமயம் வசிக்கும் டாக்டர் பசுபதி அவர்களின் புத்திரரான இளைப்பாறிய சட்டமா அதிபர் சிவாபசுபதி அவர்களை ஒரு முறை சந்தித்த போது தனது தந்தையார் புத்தூர் மருந்தக விடுதியில் இருந்ததை எனக்குத் தெரிவித்து இளமைப் பருவத்தில் பாடசாலை விடுமுறை நாட்களில் தான் புத்தூர் மருந்தகத்தின் விடுதியில் தந்தையருடன் தங்கி இருந்த சந்தர்ப்பங்களில், துவிச்சக்கர வண்டியில் ஓடித்திரிந்து இடங்கள் பார்த்ததையும் கூறினார். டாக்டர் பசுபதி அவர்களின் பின், இப் பதவிக்குச் சேவை மூப்புள்ள அப்போதிக்கரிமாரே வைத்திய அதிகாரிகளாக நியமனம் பெற்று வந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் அப்போதிக்கரி கணபதிப்பிள்ளை (காரைநகர்) நாகலிங்கம் (வட்டுக்கோட்டை) குழந்தைவேலு (கரவெட்டி) செல்லையா (பருத்தித்துறை) மூர்த்தி (வட்டுக்கோட்டை) என இன்னும் நாலு ஐந்து பேர்கள் தொடர்ச்சியாக இக் கடமையில் இவ்விடம் இருந்து இருக்கிறார்கள். குழந்தைவேலு அவர்கள் கடமையில் இருக்கும் வரை கோப்பாய், நீர்வேலி, வாதரவத்தை, அச்செழு ஆகிய இடங்களுக்கு கிழமையில் ஒரு நாள் பிற்பகலில் சென்று மூன்று மணித்தியாலங்கள் வரை ஒழுங்கு அமைக்கப்பட்ட இடங்களில் தங்கி இருந்து சிகிச்சையும் மருந்தும் வழங்கி வந்தார். அதன் பின்பு வந்த செல்லையா, மூர்த்தி அவர்கள் காலத்தில் இந்த ஒழுங்கில் ஓர் சோர்வு ஏற்பட்டு இருந்ததை இக் கிராம மக்கள் அவதானித்து இருந்து இருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் அப்படியான வெளியிட சிகிச்சை அளித்தல் முறையை

இவ் மருந்தகத்தின் தரம் இறங்கத் தொடங்கிய முறையில் அரசாங்கம் அதற்கு ஊக்கமளிப்பதை நிறுத்திக் கொண்டது. “ஏ” தரத்தில் இருந்த மருந்தகம் “சி” தரத்துக்கு வந்து சேர்ந்தது. இதற்கு உள்நாட்டுக் குழப்பங்களின் தொடக்கமும் ஒரு காரணமாக இருந்துவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் இம் மருந்தகத்தின் மீள் எழுச்சியை யோசித்த இதன் பயன்பாட்டு எல்லைக்குள் வதிக்கும் மக்களில் பெரும்பாலானோர் ஒன்றுகூடி இதற்குப் மறுஜென்மம் அளிக்க, இளைப்பாறிய தலைமை அதிபர், காலஞ்சென்ற திரு. சபாபதி தங்கராசா அவர்களைத் தலைவராகவும், செயலாளராக இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் திரு. தாமோதரம்பிள்ளை அவர்களையும் நியமித்து, அவர்களுக்கு உதவியாக ஒரு செயற்குழுவும் நியமித்து, முதலில் மருந்தகம் மட்டும் இருந்த காணியைக், காணியின் உரித்தாளரிடமிருந்து விலைக்குப் பெற்று, அடுத்தபடியாக அதனை அக் குழு அரசாங்கத்திற்கு அன்பளிப்புச் செய்து பின்பு அரசாங்கப் பொறுப்பில் ஒரு புதிய கட்டிடத்தை அமைத்துக் கொள்ளக் கோருவதெனவும் தீர்மானித்து செயலில் ஈடுபட வைத்தார்கள். இறையருளாலும், அரசாங்கத்தின் ஆதரவாலும் இக் குழுவின் அயராத உழைப்பாலும் மக்களின் உளப் பூர்வமான அன்பளிப்புகளாலும் கட்டிடத் தொழிளாலர்களின் ஒத்துழைப்பாலும் 2010ம் ஆண்டு எல்லாப் பணிகளும் நிறைவுபெற்று இப்பொழுது புதியதொரு அழகான கட்டிடத்தில் மருந்தகம் வீறுநடை போடுகிறது.

இப்பொழுது நடைமுறையில், உள்ள சுகாதாரப் பகுதியினரின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இவ் விடத்திலும், உரும்பிராயிலும் ஆக வலிகாமம் கிழக்குப் பிரிவில், இரண்டு “ஆரம்ப நோய்த் தடுப்பு பாதுகாப்பு அலகுகள்” (Primary Medical Care Units) தொடக்கப்பட்டுச்

செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பணியோடு மருந்தக சேவையும் நடைபெறுகிறது. இவ்விட மக்களுக்கு இப்படியாக வந்தது நல்ல வாய்ப்பு என்றே கூறவேண்டும். 2010ம் ஆண்டில் முடிவில் வெளியிடப்பட்ட Ambulatory Care (OPD) by Hospitals அறிக்கையின்படி ஒரு நாளைக்குச் சராசரியாக எண்பத்தாறு நோயாளிகள் புத்தூர், ஆரம்ப நோய்ப் பாதுகாப்புச் சிகிச்சைப் பிரிவில் வைத்தியமும் மருந்தும் பெற்றுச் சென்றிருக்கின்றனர். இது ஒரு நல்ல முன்னேற்றம் என்றே கூறவேண்டும். ஏனெனில், இவ் வைத்திய சாலைக்கு மிகவும் அருகில் உள்ள பிராந்திய ஆஸ்பத்திரிகளாக அச்சுவேலியில் ஒன்றும், மற்றையது கோப்பாயிலுமாக இடம்பெற்றிருக்கும் நிலையில் ஒப்பீட்டளவில் குறித்த வரவு திருப்தியாக உள்ளது. மேலும் குறித்த 2010ம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம், இந்தப் பிரிவு 225 நாட்கள் இயங்கி உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 365 நாட்களாக உயருமென எதிர்பார்ப்போமாக. மேலும் சிறிய அளவில், இவ் இடத்தில் ஒரு "உள்நோயாளர் பிரிவு" ஏற்படுத்திக் தருமாறு வடமாகாண சபைக்கு ஒரு கோரிக்கை வைப்பது நல்லது. அச்சுவேலிப் பிராந்திய வைத்திய நிலையத்தில் அறுபது கட்டில்கள் உள்ள "உள்நோயாளர் பிரிவும்" கோப்பாய்ப் பிராந்திய வைத்திய சாலையில், அறுபத்தெட்டுக் கட்டில்கள் கொண்ட "உள்நோயாளர் பிரிவும்" செயல்படுகின்றன. இந்தத் தரவுகளை வைத்துப் பார்க்கும் போது, வலிகாமம் கிழக்குப் பிரிவில் ஆரம்ப நோய்த்தடுப்பு அலகுகளாக இயங்கும் புத்தூர், உரும்பிராய் ஆகிய இடங்களில் சிறிய அளவில் "உள்நோயாளர் பிரிவு" நிறுவப்படுவது நன்றாக இருக்கும், ஆனால் இது மத்திய அரசாங்கத்தின் மருத்துவப் பராமரிப்புத் திட்டத்தில் இடம் பெற்றால் மட்டுமே சாத்தியமாகும்.

இக்கட்டுரையை அடியேன் எழுத முற்பட்ட காரணம் இவ் மருந்தகமும் நோயாளர் சிகிச்சைப் பிரிவும் அமைந்துள்ள கட்டிடத்திற்கு நேர் எதிர்ப் புறத்தில் உள்ள "சங்கரவாசா" என்னும் இல்லத்தில் பிறந்து, வசித்து வந்ததுவும், புத்தூர் கிராமத்தின் பசுமை நினைவுகள் இன்றும் எனது மனதில் ஆழப் பதிந்திருப்பதுமே ஆகும். புத்தூர் கிராமப் பௌதீக அமைப்புப் பற்றி எழுத முனையும் இளம் சந்ததியினருக்கு இக் கட்டுரை உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

**உசாவியவை:**


List of Hospitasl in Northern Province from Wikipedia (Encyclopaedia)

'Hospital" from Wikipedia and Jaffna Teaching Hospital - from same source

'2010 Statistics" Jaffna Regional Directorate of Health Services - Google

Northern Province Bed Strenght - Ministry of Health, Sri Lanka - Google

Journal of Mental Health in Family Medicine - Jan.2012 9 (1) 15-24

# கோவிற்பற்று

இந்தத் தலையங்கத்தைச் சாதாரணமாகப் பார்ப்பவர், இது கோவில் மீது ஒருவர் வைத்துள்ள பக்தி அல்லது அதனையிட்ட அக்கறை சம்பந்தமாக எழுதப்பட்டதாக இருக்கலாம் என நினைத்து விடலாம், ஆனால் இதில் வரும் "கோவிற்பற்று" என்ற சொற்பதம் இரண்டு சந்தர்ப்பங்களில் எடுத்தாளப்பட்டு வருகிறது. முதலாவது திருக்கோவிலோடு சம்பந்தப்படுத்தி மதகுமாரின் கருமத்திற்கான நிர்வாக எல்லையைக் குறிப்பிடுவதற்கும், மற்றையது குடியியல் நிருவாகத்தில் காணிகள் பதிவுச் சட்டத்திற்குக் கீழ் ஆதனங்களின் வட்டார எல்லையை விபரிக்கப்படுவதற்குப் பாவிக்கப்படுவதாக உள்ளது. இரண்டிற்கும் மத்தியில் ஒரு நிர்வாக அமைப்பு பொறுப்புக் கூற இடம் பெற்றிருக்கும்.

இக் கட்டுரையின் ஆய்வுக்காக எடுக்கப்பட்டிருப்பது, மேலே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் *1863*ம் ஆண்டு பிரித்தானியரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட "காணிகள் பதிவுச்" சட்டத்தின் கீழ் இலங்கையில் எழுதப்படும் உறுதிகளின் அட்டவணையில் காணிகளை அடையாளப்படுத்தி விபரிக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் வட்டாரப்பிரிவான "கோவிற்பற்று" சம்பந்தப்பட்டதும் ஆகும். கோவிற்பற்று "பரிஷ்" (PARISH) என ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டு வருகிறது.

கோவிற்பற்று அல்லது வட்டார முறையை அதிகமாகப் பிரித்தானியரின் குடியேற்றத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளில் காணலாம். இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தமட்டில் "டீயூடர்" (Tudor) காலத்திலிருந்து (*1485-1603*) இது நிலவி வருவதாகச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. ஆதியில் "டீயூடர்" காலத்தில் இவ்வித

வட்டார ரீதியிலான மக்கள் அமைப்புகளை உருவாக்கி, வறியவர்களை ஆதரிப்பதிலும் பொது தெருக்களைப் பராமரிப்பதிலும் சட்டம் ஒழுங்குகளைக் கவனிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் வரிகள் அறவிடும் ஒழுங்குகளிலும் இந்த வட்டார முறை பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இங்கிலாந்தில் 1997ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளக நிர்வாக அமைப்புக்கள் சீரமைப்புச் சம்பந்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இன்னும் இந்த ஒழுங்குமுறை அந்நாட்டில் தொடர்ந்து இருந்து செயல்பட்டு வருவது காணலாம்.

"கோவிப்பற்று" மாதிரியான வட்டாரப் பிரிவுகள், ஐரிஷ் நாட்டிலும் இருக்கிறது. ஆனால் அவை பல மாவட்டங்களை உள்ளடக்கி வகுக்கப்பட்டுள்ளது. இதனை விட அமெரிக்க முறை வித்தியாசமானது. அயர்லண்டு ஸ்கொட்லண்டு, வேல்ஸ் ஆகிய நாடுகள் இங்கிலாந்தைப் போன்றே பரிஷ், கவுண்ரீஷ் (Parish, Counties) என்ற பிரிவுகளைக் கொண்டுள்ளன.

இலங்கையில், டச்சுக்காரரின் குடியேற்றக் காலம் (1658) தொடங்கிப் பிரித்தானியர் காலமும் (1795-1948) கடந்து இற்றை வரையும் "கோவிற்பற்று" வட்டார அமைப்பு நடைமுறையில் உள்ளது. ஆகவே 250 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்டதாக இலங்கையில் உள்ள காணிகளை அடையாளப் படுத்த ஏற்படுத்தப் பட்டிருக்கும் இக் கோவிற்பற்று அல்லது வட்டாரப் பிரிவு ஆனது. ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கி உருவாக்கப் பட்டவைகளாகும். உதாரணமாக வடக்கு மாகாணத்தில் வலிகாமம் கிழக்குப் பகுதிப் பிரதேசச் செயளாலரின் (AGA) நிருவாக எல்லைக்குள் உள்ள "புத்தூர் கோவிற்பற்று" என்னும் பிரிவுக்குள் ஆவரங்கால், சிறுப்பிட்டி, நவற்கிரி, ஈவினை, அச்செழு, வாதரவத்தை,

புத்தூர் ஆகிய கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2007ம் ஆண்டு அரசாங்கத்தினால் வடமாகணத்தில் நடத்தப்பட்ட ஒரு விசேட குடிசன மதிப்புக் கணக்கீட்டின் படி, குறித்த ஏழு கிராமங்களிலும் வசிக்கும் மக்களின் மொத்தத் தொகை 22,822 ஆகும். கோவிற்பற்றுகள் யாவும் ஒரே அளவான நிலப்பரப்பைக் கொண்டவையாக இருப்பது இல்லை. சில கிராமங்கள் பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கி இருக்கும் போது கோவிற்பற்றின் பரப்பு அளவு வித்தியாசமாகவே இருக்க நேரிடும். உதாரணமாகக் குறித்த புத்தூர் கோவிற்பற்றுப் பிரிவுக்குள் உள்ள ஆவரங்கால் கிராமம் பரப்பளவில் அவ்வட்டாரப் பிரிவுக்குள் அமைந்திருக்கும் வாதரவத்தைக் கிராமத்தை விடப் பெரியதாகும். புத்தூர் கிராமம், அதாவது இயல் நிலையான புத்தூர் கிராமம், புத்தூர் கோவிற்பற்றுப் பிரிவுக்குள் உள்ள மற்றைய கிராமங்களைக் காட்டிலும் பரப்பளவில் பெரியது. "கோவிற்பற்று" என்னும் வட்டார அமைப்புக்குள் கிராமங்கள் உள்ளடக்கப்படும் போது தங்கள் பெயர் அடையாளத்தை இழந்து விடமாட்டாது. உதாரணமாகக் குறித்த புத்தூர் கோவிற்பற்றுப் பிரிவுக்குள் உள்ள ஆவரங்கால் என்னும் கிராமம் தன் இயற் பெயரையே எப்பொழுதும் கொண்டிருக்கும்.

அடுத்தபடியாக இலங்கையில் காணிகள் பதிவு ஒழுங்கு முறையில் எவ்வாறு "கோவிற்பற்று" என்னும் வட்டாரப்பிரிவு சம்பந்தப்பட்டிருக்கிறது எனவிபரமாக அறிந்து கொள்வோமாக. டச்சுக்காரர் காலத்துக்கு முன், நிலங்களின் விபரங்கள் Lekammitti இல் வைக்கப் பட்டிருந்ததாக "மகாவம்சம்" என்னும் நூல் கூறுகிறது. டச்சுக்காரர் இலங்கையை ஆட்சிப்பண்ணிய போது காணிகளின் விபரங்களைத் "தோம்புகளில்" (Thompu) பதிந்து கொண்டனர். இவைகளைப் பதிவு செய்வதற்குப் பனை ஓலைச்சட்டங்களைத் தொடக்கத்தில் பாவித்தனர்.

பின்பு காலப்போக்கில் கடதாசியைப் பாவித்தனர். இதில் காணியின் இருப்பிடத்தைக் காட்டும் விபரங்களாக, மாகாணம், மாவட்டம், கோவிற்பற்று (Parish), இறை, காணியின் பெயர், பரப்பளவு ஆகியன பதிந்து கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கச்சேரிகளிலும் இவற்றைப் பாதுகாப்பதற்கும், வாசித்துக் காண்பிப்பதற்கும் ஒரு உத்தியோகத்தர் (Thompu Officer) நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கையில் 1863ம் ஆண்டு "காணிகள் பதிவு" சட்டமென ஒன்று பிரித்தானியரால் கொண்டுவரப்பட்டு, மேற் கூறிய பந்தியில் உள்ள விபரங்களை உறுதிகளில் சேர்த்துக் கொள்ள உத்தரவாகியது. ஆனால் இந்தச் சட்டத்தின் கீழ் காணிகள் எவ்வாறு காணிச் சொந்தக்காரனுக்கு வந்து சேர்ந்தது என்பதற்கான விபரம் (உருத்து வழி) பதியப் படவேண்டு என்று வலியுறுத்தப் பட்டிருக்கவில்லை. ஆகவே குறித்த சட்டத்தில் இருந்து வந்த இந்த குறைபாட்டைச் சீர் செய்ய 1877ம் ஆண்டில் ஒரு சட்டமும் பின்பு 1901ம் ஆண்டு நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தையும் அதனை அடுத்து 1927ம் ஆண்டில் ஆவணப்பதிவுச் சட்டமும் கொண்டு வரப்பட்டிருந்தது. இவற்றோடு 1980ம் ஆண்டு மோசடிகள் தவிர்ப்புச் சட்டத்தையும் இலங்கை அரசாங்கம் கொண்டு வந்து மேற்படி விபரங்களை உறுதிகளில் பதியப் படவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி உள்ளது. காணிகளின் உருத்து அதன் சொந்தக்காரர்களுக்கு வந்த வழியையும், காணியின் எல்லைகளை விபரிக்கும் அளவு படங்களையும் சேர்த்துப் பதிவு செய்வதில் மேலும் இருந்து வந்த சிக்கல்களைச் சீர் செய்து கொள்ள எடுத்த முயற்சிகளுக்குரிய தொழில் நுட்ப வேலைகளுக்கான செலவின் பெரும்பங்கை வழங்கிக்கொண்டிருந்த உலக வங்கி அந்நேரத்தில் அவ் உதவிக்கான கால எல்லை முடிவுற்றதால் அதிலிருந்து விலகிக் கொள்ள ஏற்பட்டதை

அடுத்து அம் முயற்சியைத் தொடர முடியாத நிலை அரசாங்கத்திற்கு வந்தது. அதன் பின்பு இலங்கை அரசாங்கம் 1996ம் ஆண்டு "பிம்சவிய" (Bimsaviya - மண்ணின் மகிமை) என்னும் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்து காணியின் இருப்பிட விபரங்களையும், காணிகள் வந்த வழி பதிவதற்கான நடவடிக்கையைத் திருப்திகரமாக நிறைவேற்றிவைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது காணியின் விபரங்கள் பதிந்து கொள்ளும் போது, காணி இருக்கும் கோவிற்பற்றும், இறையும், கிராமசேவையாளர் பிரிவும், பிரிவின் பெயரும், பிரிவின் பதிவு இலக்கமும் பிரதேச செயலாளர் பிரிவும், பிரதேச சபையின் பெயரும் மற்றைய வழமையாக அளிக்கப்படும் மாவட்ட விபரங்களுடன் மாகாணசபையின் பெயரும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்து விபரங்களும் அக்காணியின் இருப்பிடத்தைத் துல்லியமாகக் கண்டுகொள்ள உதவும் முகமாக அரசாங்கம் இந்த ஒழுங்கு முறையை இப்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கிறது.

காணிப்பதிவுக்கான விபரங்களில் வரும் "இறை" என்பது கோவிற்பற்று என்னும் வட்டாரப் பிரிவுக்குள் அடங்கி உள்ள ஒரு கிராமத்தின் உப பிரிவு ஆகும் உதாரணமாகக் குறித்த புத்தூர் கிராமத்தில் இரண்டு "இறைகள்" உண்டு ஒன்று "புத்தூர் வடக்கு" இறை மற்றையது "புத்தூர் தெற்கு" இறை. சில கிராமங்கள் ஒரு இறையை மட்டும் கொண்டிருக்கும். உதாரணமாக வாதரவத்தையக் குறிப்பிடலாம். அவ்விடத்தில் ஒரு இறை மட்டும் முன்பு இருந்தது. ஆகவே "இறைகள்" விபரிக்கப்படுவதும் உறுதிப் பதிவைப் பொறுத்தமட்டில் முக்கியம் பெற்றுள்ளது. 2010ம் ஆண்டு வரை கிராமசேவையாளர் பிரிவு

விபரத்திற்குப் பதிலாக இறைகளின் பெயர்களே தனிய இடம்பெற்று இருந்தன. ஆனால் இப்பொழுது இறையும், கிராமசேவையாளர் பிரிவும் சேர்த்துப் பதியப்படும் ஒழுங்குமுறை வந்துள்ளது. இப்படியாக இறையையும், கிராமசேவையாளர் பிரிவையும் பதிவில் சேர்த்துக் கொள்வதன் நிமித்தம், முழுமையான அடையாளம் பதிவுக்கு உட்படும் காணிகளுக்குக் கிடைக்கும். மேலும் ஒரு ஆதனம் இரு கிராம சேவையாளர் பகுதிகளின் எல்லையின் மத்தியில் அமைந்திருக்கச் சந்தர்ப்பம் வருமிடத்து இப்படியாக இறையையும் கிராம சேவையாளர் பிரிவையும் சேர்த்துப் பதிந்து கொள்ளும் போது அப்படியான காணியை, அடையாளம் கண்டு கொள்ளமிகவும் உதவியாக இருக்கும். இதற்கு இன்னுமொரு காரணமும் கூறப்படுகிறது. அது யாதெனில் கிராம சேவையாளர் பிரிவுகள், சனத்தொகையை வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன. அதன் நிமித்தம் இறையானது இடப்பரப்பளவில் கிராம சேவையாளர் பிரிவைவிடப் பெரிதாக அமைந்து இருக்க இடமுண்டு. ஆகவேதான் இரண்டையும் சேர்த்துப் பதிந்து கொள்ள இப்பொழுது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக குறித்த புத்தூர் கிராமத்தில் உள்ள புத்தூர் வடக்குக் கிராம சேவையாளர் பிரிவு புத்தூர் வடக்கு இறையை விட இரண்டு மடங்கு குறைவான நிலப்பரப்பை கொண்டுள்ளதைக் காணலாம்.

"கோவிற்பற்று" என்னும் வட்டாரப் பிரிவுக்குள் உள்ள "இறைகள்" மேலும் அங்கீகாரம் எதுவும் பெறாத சிறு சிறு குறிச்சிகளைக் கொண்டு இருக்கின்றன. ஆனால் அவற்றிற்கும் காணிப்பதிவுக்கும் எதுவித சமபந்தமும் இல்லை. அவை அந்தந்த குறிச்சியில் உள்ள மக்களாலேயே உருவாக்கப்பட்டு அவர்களால் பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு என எதுவித எல்லைகளும் இல்லை. அவற்றிற்குரிய

நாமங்கள் அக் குறிச்சிகளில் உள்ள குளம், மரங்கள், செடிகள் மண் தன்மை காணியின் பெயர் ஆகியவற்றை அடியிருத்தி வைக்கப்பட்டவைகளாகவே இருக்கின்றன. உதாரணமாகப் புத்தூர் வடக்கு இறையில் உள்ள அப்படியான சில குறிச்சிகள் பின் வருமாறு: மணற்பகுதி, கயட்டை, சம்மாளைக்கட்டி, கொக்கனை, உலந்தனை, ஓடை, உலைக்குளம், காளாவெளி, தீரை, மந்திரிதாழ்வு, கருமண்புலம், விரியணை, சடுவளை, கிந்துசிட்டி, வேம்பாபுலம், ஏரந்தனை என்றவாறு இன்னும் பல உள்ளன. அதே மாதிரி புத்தூர் தெற்கு இறையிலும் மாளிகை, வேம்பிராய், கோப்பாவுடை, காளியானை, சொக்கதிடல், ஊறணி, பெரியாப்புலம், கிராலி, அம்பவுடை, தல்லுடை, தம்பனை, கண்டியவத்தை என ஒரு பட்டியல் உள்ளது. இக்கட்டுரையில் புத்தூர் "கோவிற்பற்று" மட்டும் உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டற்கான முக்கிய காரணம் வடமாகாணத்தில் புத்தூர் கோவிற்பற்று மிகவும் தொன்மையானதாகவும் பெரிய நிலப்பரப்புக் கொண்டதாகவும் இருப்பதே ஆகும்.

**உசாவியவை:**


1. Implementing Land Registration Systems in Sri Lanka. Being Pragmatic, an Article in Sri Lankan Journal of Real Estate.
2. English Counties, Parishes, etc. for Genealogists in Jim Fisher's Genealogy and Family
3. Notaries Ordiance 1907
4. Registration of Documents Ordinance 1927
5. Prevention of frauds ordinance 1980
6. Basic Population Information on Jaffna District 2007 - Released by Department of Census and Statistics.
7. Registration of Title Act No. 21 of 1998

# வெள்ளப்பரவை உப்பு ஏரியின் சரித்திரப் பிரசித்தி

### (ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கும் கடலின் நீர், ஏரிகளாக ஒரே நீட்டிற்கு, ஒன்றிற்கொன்று தொடர்புபட்டுக் குறைந்தது ஏழு கிராமங்களின் கிழக்கு எல்லையோரமாக வடக்கே கரணவாய் என்னுமிடத்தில் தொடங்கித் தெற்கே அரியாலைக் கிராமம் வரை நீண்டு காணப்படும் பகுதியே "தொண்டமான் ஆறு" அல்லது "யாழ்ப்பாணம் உப்பு ஆறு" என்று அழைக்கப்படுகிறது. குடாநாட்டின் வடக்கே தொண்டமானாறு என்ற ஒரு கிராமமும் உள்ளது. அங்கேதான் வரலாற்றுப் பெருமை பெற்ற செல்வச்சந்நிதி முருகன் தேவஸ்தானம் உள்ளது. இதே மாதிரி இன்னுமொரு நீர் ஏரிகளின் தொடர் வரிசை, குடா நாட்டின் வடக்குக் கரையோரமாக வடமராட்சி வடக்குக் குறிச்சியிலிருந்து ஆனையிறவு வரை நீண்டு செல்கிறது, அதனை "வடமராட்சி வடக்கு ஏரி" என அழைக்கப்படுகிறது.

மேலே கூறப்பட்ட யாழ்ப்பாண உப்பாற்று ஏரியைக் கிழக்கு எல்லையாகக் கொண்ட ஏழு கிராமங்களில் ஒன்று புத்தூர் ஆகும். குறித்த ஏரியின் மேற்குக் கரையோரம் புத்தூரின் கிழக்கு எல்லையாக அமைகின்ற பகுதியே "வெள்ளைப்பரவை" என்று அழைக்கப்படுகிறது. இந்த வெள்ளப்பரவை புத்தூர் பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. முதற்காலத்தில் இந்தியாவின் தெற்கே உள்ள தொண்டமண்டலத்தை அரசாண்ட மன்னர்களுக்கும், ஈழத்தை அரசாண்டவர்களுக்கும் இடையில் நடந்த பொருட்கள் பண்டமாற்றில் பெரும் கிராக்கி பெற்றிருந்த

பளிங்கு போன்ற வெள்ளை உப்பு ஒன்றாக இருந்தது. அதுவிளைய்ும் இடமாகவும் சிறு மரக்கலங்கள் தரித்து நின்ற பகுதியாகவும் இவ் வெள்ளப்பரவை இருந்துள்ளது. ஆகவே இதன் பண்டையகாலத்துச் சரித்திரப் பிரசித்தி எவ்வாறு அமைந்து இருந்தது என்பதனை அறிந்து கொள்வோமாக.

இலங்கையில் தமிழரசர் காலத்தை விபரிக்கும் முதல் நூல்களாக கைலாய மாலை, வையாபாடல், பரராாசசேகரஉலா. இராாசமுறை ஆகியவற்றைக் கூறுகிறார்கள். இவற்றில் மூன்றாவதும், நாலாவதும், சரித்திர ஆசிரியர்களின் கைக்கெட்டாமல் எங்கோ மறைந்து கிடக்கின்றன. முதல் இரண்டு நூல்களில் யாழ்ப்பாடியின் குடியேற்றம் தொடர்பான சம்பவங்களை விளங்கிக் கொள்ள வையா பாடல் மிகவும் துணையாக உள்ளது. அந்நேரத்தில் யாழ்பாடி “மணற்றிடல்” என்னும் யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றுத் தானும் தன் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்து காடு வெட்டித் திருத்தி தோப்புகளும், தோட்டங்களும் வகுத்துத் தான் அழைத்து வந்த ஓராயிரம் வடநாட்டுக் குடிகளையும் அவ்விடத்தில் குடியேற்றிய பின் சில வருடங்கள் செல்ல மீண்டும் தொண்டைமண்டலம் போய்ச் சேர்ந்தார். இவர் மணற்றிடலுக்கு வரும்போது இவரின் மனைவியார் தங்கள் குல ஒழுங்குக்கு மாறாக கடல் கடந்து அவருடன் வர விருப்பப்படவில்லை. இவருக்குப் பிள்ளைகளும் இல்லை, அந்தத் தனிமையே இவர் மீளவும் குறுகிய காலத்திற்குள் தனது நாட்டிற்குத் திரும்பவைத்தது. அப்படியாக இருந்தும் அவ்விடம் சேர்ந்த இரண்டொரு நாட்களுக்குள் தொண்டமண்டல அரசனைச் சந்தித்து மணற்றியைச் சீராக நிர்வகிக்க ஒரு இராாசதந்திரமுடைய மந்திரியையும் பிரதானிகளையும் சிறு சேனையையும் தந்துதவுமாறு உரிய மரியாதையோடு

கேட்டுக்கொண்டார். அச் சந்தர்ப்பத்தில் அரசன் நீர் பரிசாகப் பெற்ற நாட்டின் வளங்களைப்பற்றிக் கூறுகின்ற போது, மணற்றியில் சில இடங்களில் இயற்கையாகக் கோடைகாலத்தில் பளிங்குபோல் வெள்ளை நிற உப்பு பெருமளவில் விளைகிறது. அவை அபரியிதமாக்கப்பட்டு வருஷம் தோறும் மழையினால் அழிந்து போகிறது என்றார். அப்பொழுது அரசன் அவ் உப்பைத் தனக்குத் தந்தால் வேண்டிய யாவற்றையும் தந்து உதவலாமெனக் கூற யாழ்ப்பாடி தனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டார். அதன் பின்பு அரசன் ஒரு மந்திரியையும், பிரதானியையும் சிறு படை ஒன்றையும் முதல் பாணருடன் மணற்றிடலுக்கு அனுப்பி வைத்துவிட்டு பின்பு உப்பு ஏற்றுவதற்கான மரக்கலங்களையும் உப்பு அமைப்போரையும் ஏவலாளர்களையும் அக்கருமத்துக்கு மேற்பார்வைக்கு வீரபராயன் என்ற ஒரு அதிகாரியையும் அனுப்பி வைத்தார். இவைகள் வந்து சேர்ந்த பின் பாணர் அவர்கள் நல்லூரில் ஒரு இராசதானி அமைத்து அரசாட்சியைத் தொடர்ந்தார். இவருடன் கூட வந்த சனங்களில் ஒரு பகுதியினர் கரணவாய், வெள்ளைப்பரவை ஆகிய இடங்களில் விளையும் உப்பு முழுவதையும் திரட்டிக் காலந்தோறும் ஒழுங்காக அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவற்றை ஏற்றிச்செல்லும் மரக்கலங்கள் திரும்பி வரும்போது நெல் கறிச்சம்பாரம், வஸ்திரம் முதலியன அவ்விடங்களில் குடியமர்த்த தொண்டமண்டல சனங்களுக்கும் மற்றைய சனங்களுக்கும் பண்டமாற்றி மீளும். இவ்வாறு ஆ. முத்துத்தம்பிபிள்ளை அவர்களின் யாழ்ப்பாணச் சரித்திர நூலில் 12ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்து மாதகல் புலவர் சுப்பிரமணியர் மயில்வாகனம் அவர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1736ம் ஆண்டளவில்)

எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையில் 14ம் பக்கத்தில் தொண்டமான் அரசன் கரணவாய், வெள்ளப்பரவை ஆகிய இரு இடங்களில் விளையும் உப்பை விலைக்குப் பெற்றுக்கொள்ள உத்தரவு கேட்டுக் கீரிமலைச் சாரலில் அப்பொழுது முகாமிட்டிருந்த உக்கிரமசிங்க மகாராசாவிடம் வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் குறித்த இடங்களில் விளையும் உப்பை வருடம் தோறும் ஏற்றி எடுக்க வசதியாக உப்பு விளையும் இடங்களுக்குச் சமீபமாக மரகலங்களைக் கொண்டு செல்லக் கூடியதாக ஒரு ஆறு வெட்டிப் பாவித்துக் கொள்ளவும் அனுமதி பெற்றதாகவும் அதன் பின்பு அவ்விடத்திலிருந்து தொண்டமான் அரசன் குறித்த கருமங்களை நிறைவு செய்துவிட்டுத் தனது நாட்டுக்குத் திரும்பினார் எனவும். அதுவே பின்பு “தொண்டமனாறு” எனப் பெயர் பெற்றதெனவும். பதிவு செய்துள்ளார்.

மேற்குறித்த தகவல் பற்றிச் சரித்திர ஆசிரியர்கள் மத்தியில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் உள்ளன. அவை எப்படியாக இருப்பினும் வெள்ளப்பரவை, கரணவாய் ஆகிய இடங்களிலிருந்து பண்டைய தமிழரசர் காலத்தில் இந்தியத் தென் மண்டலத்திற்கு உப்பு ஏற்றுமதி நடைபெற்றிருந்தது என்பதனை சரித்திர ஆசிரியர்களும் சரித்திரம் கற்றோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்றிய காலப்பகுதியில் உப்பு ஏற்றுமதிக் கருமங்களில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது. 1879ம் ஆண்டு குடா நாட்டிற்குள் கடல்நீர் உட்புகும் இடங்களில் தடுப்பு அணைகள் அமைத்து விவசாயத்தை மேன்படுத்தவும், குடாநாட்டின்நிலத்துக்கடி நீர் உவர்த் தன்மை பெறுவதைத் தடுக்கும் நோக்கங்களோடு அரசாங்கத்தால் குடாநாட்டு நன்னீர்த் திட்டம் என ஒன்று உருவாக்கப்பட்டு சில காரணங்களால்

பூரணமாகச் செயற்படுத்த முடியாமல் இருந்தது. இக்காலப்பகுதியில் உப்பளங்கள் யாவும் அரசாங்க உப்பு இலாகாவின் அதிகாரத்துக்குள் கொண்டு வரப்பட்டு வட பகுதி உப்பளங்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் நிர்வாகத்திற்குள் இயங்கி வந்தன. அதற்கென ஒவ்வொரு மாகாணத்திற்கும் அரசாங்கத்தினால் மேலாளர்களும், மேற்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டு இருந்தது. வெள்ளப்பரவைக்கு புத்தூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் சதாசிவம் அவர்கள் 1945ம் ஆண்டு தொடக்கம் 1955ம் ஆண்டு வரை மேற்பார்வையாளராக இருந்துள்ளார். 1955ம் ஆண்டில் ஏற்கனவே 1879ல் போடப்பட்ட திட்டத்தின் பிரகாரம் தொண்டமானாறுப் பகுதியில் பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி தேவஸ்தானத்துக்கு அன்மித்த பகுதியில் ஒரு கடல் நீர்த் தடுப்பு அணையும் மற்றயது அரியாலையிலுமாக 1955ல் கட்டி முடிக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்ததுடன். இந்தப் பகுதியில் தடுப்பு அணைகள் மூலம் அரசாங்கம் எதிர்பார்த்த பயன்களையும் அடைய முடியாமலும் போய்விட்டது. அதற்குப் பல காரணங்கள் தெரிவிக்கப்படுகிறது. அதில் உள்நாட்டு யுத்தம் ஓர் காரணமாகக் கூறப்படுகிறது. எவையெப்படி இருப்பினும் குறித்த திட்டம் இப்போது செயற்படாத நிலையிலேயே உள்ளது.

வெள்ளப்பரவையில் உப்பு விளைச்சல் தடைப்பட்டுப் போய்விட்ட போதிலும் அப்பகுதியில் வாழும் மக்கள், இக் காலத்திலும் தங்கள் பேச்சு வழக்கில் பாவித்துக்கொள்ளும் பீச்சாக்கத்தி, கடவை, புட்டுவம் போன்ற சொற் பதங்கள் தொண்டை நாட்டுத் தொடர்பை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தச் சொற்கள் தெலுங்குப் பாஷையில் உள்ளவையாகும். யாழ்ப்பாடி அழைத்து வந்தவர்கள் இவ்விடத்தில் வாழ்ந்ததிற்கு

இன்னும் ஒரு ஆதாரமாக அவர்கள் விஷ்ணுவை வணங்குபவர்கள் எனவும், வெள்ளப்பரவை கரணவாய் ஆகிய இடங்களில் கிருஷ்ணர் நாகதம்பிரான் ஆலயங்கள் அமைந்து இருந்தமையைக் கூறுவார்கள். கரணவாய்க்குக் கிட்டவாகப் சிறப்புப் பெற்ற வல்லிபுர ஆழ்வார் கோயிலும், அதற்கு மிக அன்மித்த இடத்தில் நாகர்கோயில் இருப்பதையும், வெள்ளப்பரவைக்கு மிகவும் அருகிலுள்ள விரவாணி என்னும் இடத்தில் நாகதம்பிரான் கோயிலையும் புத்தூரின் மையப் பகுதியில் இருந்ததாகக் சொல்லப்படும் ஒரு விஷ்ணு கோவில்லையும் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்கள் இவற்றில் புத்தூரில் இருந்த விஷ்ணு ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டு விட்டதாகவும். அது இருந்த இடத்தில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் அமைக்க 1824ம் ஆண்டு அத்திவாரம் போட நிலத்தை அகழ்ந்த போது, விஷ்ணு சிலை ஒன்று தென்பட்டதாகவும் அதனை அத்திவாரத்துக்குள் அப்போதே போட்டுக் கட்டிடம் எழுப்பப்பட்டு விட்டதாகவும் 1964ம் ஆண்டு C. S. நவரத்தினம் அவர்கள் எழுதி வெளியிட்ட புத்தகத்தில் 41ம் பக்கத்தில் கூறியிருப்பதாகக் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் ஆக்கிய யாழ்ப்பாண இராச்சியம் என்னும் நூலில் அத்தியாயம் ஏழில், பக்கம் 217ல் (அடிக்குறிப்பு 87) பதியப்பட்டுள்ளது.

இன்னும் புத்தூர் கிழக்குப் பகுதியில் இவ் உப்பு ஏரிக்கு மிகவும் அண்மித்துள்ள குறித்த “விரவாணி” என்னும் இடத்துக்கு வடக்குக் கிழக்காக “வாதுருவத்தை” என்னும் ஒரு சிறிய கிராமம் உள்ளது. இதுவும் புத்தூர் பிரதேச சபைப் பிரிவுக்குள் அடங்கிய இடமாகும். இவ் இடத்தில் பண்டைய காலத்தில் “வாதுமை” என்னும் ஒருவகை மரம் ஏராளம் காணப்பட்டதெனவும், இந்த வாதுமை மரங்களைப் பாவித்தே வள்ளம் (வத்தை) கட்டி, தொண்டமானாற்றின் ஊடாக உப்பேற்றிச் சென்றதாகவும்.

இதன் நிமித்தமே இக் கிராமம் "வாதுருவத்தை" என்னும் நாமம் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுவதாக, இலங்கை இடப்பெயர் ஆய்வு 2 (வடமராட்சி - தென்மராட்சி) என்ற நூலில் 81ம் பக்கத்தில் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் இச் சந்தர்ப்பத்தில் நோக்கற்பாலதாகும்.

**உசாத்துணை நூல்கள்**


யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை 2ம் பதிப்பு

யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - தமிழரசர் உகம் - சுவாமி ஞானப்பிரகாசர்

யாழ்ப்பாண வைபவ மாலை - மாதகல் மயில்வாகனப் புலவர்.

யாழ்ப்பாண இராச்சியம் - கலாநிதி சி. க. சிற்றம்பலம்

இலங்கை இடப்பெயர் ஆய்வு 2 - (வடமராட்சி - தென்மராட்சி) Dr. இ. பாலசுந்தரம்

# புத்தூர் பதியும் பதிசார்ந்த வரலாறும்

இலங்கைத் திருநாட்டின் வடபால் அதன் மகுடமாகத் திகழும் "மணற்றி" என ஆதியில் அழைக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையப் பகுதியில், நிலவளம், நீர்வளம் நிறைந்து விளங்கும் செழுமையான, ஒரு பழம்பெரும்பதி புத்தூர்.

**பதியின் வரலாறு:**

புத்தூர் பதியின் வளர்ச்சியும் செழிப்பும் தொடங்கிய காலம், யாழ்ப்பாடி எனப் பின்பு நாம் கொண்ட அந்தகக் கவி வீரராகவரின் இலங்கைக்கான வருகையுடன் தொடர்புடைய தால் நிதானமாக ஒரு ஆண்டைக்குறிப்பிடுவதில் சரித்திரச் சிக்கல்கள் உள்ளன. எவ்வாறு இருப்பினும் யாழ்ப்பாடி என்னும் யாழ்வல்லபன் வருகை திடமாகப் புத்தூர்ப்பதியின் வரலாற்றுத் தொடக்கமாக எல்லாச் சரித்திர விற்பனர்களும் ஒருமித்த கருத்தைத் தந்துள்ளார்கள். மேலும் இப்பதியை காஞ்சியைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாடியின் மந்திரியாக இருந்தவருமான சேதுராயனுக்காகக் காடு திருத்தி நாடாக அமைக்கப்பெற்று கையளிக்கப்பட்டதென்பதற்கு போதிய ஆதாரங்கள் நிலைநிறுத்திச் சரித்திர ஆசிரியர்கள் வெளிக்கொணராத முறையில், திட்டவட்டமாக இதன் ஆரம்ப காலப்பகுதியை விபரிக்கமுடியாமல் உள்ளது. மேலும் மந்திரி சேதுராயன் யாழ்ப்பாணத்தில் குடிகொண்ட இடம்முகமாலை என்னும் பதி எனச் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். யாழ்ப்பாண வைபவகௌமுதியில் நல்லூரில் வந்து இறங்கிய சேதுராயனுக்கு யாழ்ப்பாடி புத்தூரை வழங்கினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதமான சந்தர்ப்பத்தில் இது யாருக்காக உருவாக்கப்பட்ட

ஊர் என்பதிலும் சரித்திர ஆசிரியர்களிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இன்னும் ஒரு ஆய்வின்படி யாழ்ப்பாடியின் வருகைக்காலத்தை நிலைநிறுத்திக் கூற முடியாத சந்தர்ப்பம் எழுந்துள்ளது. அதாவது, யாழ்ப்பாடி என்பவர் ஏலேலசிங்கன் அரசர்காலத்தில் மணற்றி என்னும் யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றாரா என்பதில் சரித்திர ஆசிரியர்களிடையே எழுந்திருக்கும் சர்ச்சையும், புத்தூர் பதியின் வளமான வளர்ச்சிக் காலத்தின் ஆரம்பப்படியின் வருகைக் காலம் பற்றியும், பொன்பற்றியூர் மழவன் வருகைக்காலத்தைக் கண்டறிவதிலும் ஈடுபட்டு ஐயம்திரிபுர இவற்றை எடுத்துக்கூற முன்வரும்போது, இப்பதியின் தொடக்ககாலத்தை வரையறையாகக் கூறமுடியும். எது எவ்வாறாயினும் புதிதாக அமைக்கப்பட்ட ஊர் புத்தூர் என ஆயிற்றெனப்பதில் சரித்திர ஆசிரியர்களிடையே ஒத்தகருத்து இருக்கிறது. மேலும் இக்கிராமம் யாழ்ப்பாடியின் வருகையோடு சம்பந்தப்படுத்தியிருக்கும் கருத்துக்கு ஒருவித ஐயப்பாடும் சரித்திர ஆசிரியர்கிடையில் இருக்கவில்லை. இன்னும் தொண்டமண்டல அரசன் புத்தூருக்குக் கிழக்கேயுள்ள வெள்ளைப்பரவை என்னும் இடத்திலிருந்து உப்பு விளைவித்து அவ்விடத்திலிருந்து ஏற்றுமதி செய்யும் கருமத்திற்காக மரக்கலங்களையும், ஏவலர்களையும் அனுப்பி வைத்தார் என்ற கூற்று, அப்பொழுதே இக்கிராமத்தின் நிலவளமும், நீர் வளமும் நன்குணரப்பட்டிருந்தது என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை.

புற்றுகள் நிறைந்து, பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப் படாமல், கவனிப்பார் இல்லாமல் கிடந்த இடம் ஆதலால் இந்த ஊருக்கு இப்பெயர் வந்திருக்கலாம் என்று இடங்களின் பெயர்கள் பற்றி ஆய்வு மேற்கொள்வோர் சிலர் வெளியிட்ட கருத்து, இப்பதியின் சரித்திரப் பின்னணியை வைத்து

நோக்குமிடத்து நன்று ஒத்து நிற்கிறது. இதற்குச் சான்று சேர்க்கும் வகையில் யாழ்ப்பாடி காலத்தில் இப்பதியின் கிழக்குப் பிராந்தியமான வெள்ளப்பரவை என்ற பகுதியை அண்மித்துள்ள இடத்தில் மிகவும் பழையதும், நாலு அடிகள் உயரம் அளவிலான புற்று ஒன்று அவ்விடத்திலுள்ள நாகதம்பிரான் கோவில் ஆதிமூலவராக இருப்பதும் அப்பகுதியல் நாகதம்பிரானை வணங்குபவர்கள் அதிக அளவில் வசிப்பதும், இந்த ஆய்வாளர்களின் கருத்துக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்து இருக்கிறது.

செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள களத்தூர் அருகில் உள்ள பூதூர் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட யாழ்ப்பாடி தனது கிராமப் பெயருடன் ஒத்துப் போகக் கூடிய மாதிரி இதற்கு நாமம் சூட்டியிருக்கலாமெனக் கருத்துத் தெரிவிப்பவர்கள் ஆதாரமாக புத்தூர் எனப்பெயர் கொண்ட ஊர்கள் வட ஆற்காட்டிலும் தென்கண்டத்திலும், தஞ்சாவூரிலும், கோழிக்கூட்டிலும் உள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்குப் பொருத்தமாகப் பாண்டிநாட்டிலுள்ள பதியொன்று புத்தூர் எனவும், வேறு இன்னொரு பதி அரிசிக்கரைப் புத்தூர் என்றும் தேவார பதியங்களில் கூறப்பட்டு இருப்பதையும் உதாரணம் காட்டுகிறார்கள்.

மேலும் ஒரு சாராரின் கருத்து புத்தூரின் மேற்குப்பக்கமாக அமைந்திருக்கும் நவக்கிரி என்னும் குறிச்சியில் உள்ள நிலாவிரை நீர் நிலையை இராமபிரான் தனது வானரப் பரிவாரங்களுக்குத் தாகசாந்தி தீர்ப்பதற்காக இராம பாணத்தினால் உருவாக்கி வைத்தார் என்ற கருண பரம்பரைக் கதையை அடித்தளமாகக் காட்டி அதன் நிமித்தம் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறுபவர்கள் கருத்தும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

புத்தூரை யாழ்ப்பாடி தெரிந்தெடுத்து தனது மந்திரிக்கு கையளித்ததிற்கு காரணியாக அவ்விடத்தில் இருந்த புற்றுகள் விவசாய உற்பத்திப் பாவனைக்கு உகந்ததாக அறிந்திருந்தமையே எனக் கூறுபவர்கள். இராமாயணத்தில் ஒரு சந்தர்ப்பத்தை உதாரணமாக அதாவது அயோத்திய நகர மக்கள் தாமும் இராமரைத் தொடர்ந்து காட்டில் குடியேகின் "புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போமென" அறிந்திருந்தமையைக் கூறுவர். மேலும் புத்தர் ஊர், திரிபு பெற்று, புத்தூர் என வந்திருக்கலாமெனக் கருத்துத் தெரிவிப்பவர், இக்கிராமத்தில் உள்ள சில குறிச்சிப் பெயர்கள் புத்தகலட்டி, வாதரவத்தை ஆகியவற்றைச் சிங்கள மொழியுடன் தொடர்புடையதாகக் காட்டித் திசை திருப்பும் பணியிலும் உள்ளார்கள்.

பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் தொகுத்து வெளியிட்ட தமிழகம் ஊரும் பெயரும் என்ற நூலில் இந்தியாவில் புத்தூர் எவ்வாறு வந்தது என்று கூறுமிடத்து, தமிழ் நாட்டு ஊர்களைப் புத்தூர் எனவும் நல்லூர் எனவும் வகுக்கப்பட்டு இருந்ததாகவும் அதில் புதிதாகத் தோன்றிய ஊரைப் புத்தூர் எனக் கூறி இருப்பதும் ஏற்கனவே பல சரித்திர ஆசிரியர்களால் கூறப்பட்டிருப்பதற்குப் பொருத்தமாக இக்கூற்று அமைகின்றது எனச் சுட்டிக்காட்டி இப்பதியின் பெயர் வந்த வரலாற்று அதிகாரத்தின் முடிவுரையாக இக்கருத்தை வைக்கிறேன்.

**பதியின் நிர்வாக அமைப்பு:**

இலங்கை முழுவதிலும் நடைமுறையிலிருக்கும் உள்ளூராட்சி நிர்வாக அமைப்புக்குக் கீழ் பத்தொன்பது வட்டாரங்களை உள்ளடக்கிய பிரதேசசபை அமைப்பு

ஒழுங்கில் இங்கே நிர்வாகம் அமைந்துள்ளது. இதன் தலைமைச் செயலகம் கிராமத்தின் மத்தியில் இருக்கிறது. இதற்கான தேர்தல்கள் அவ்வப்பொழுது உள்ளூராட்சிச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக உரிய காலத்தில் நடைபெறும். நீதி நிர்வாகம், யாழ்ப்பாண மேல்நீதிமன்ற அதிகார வரம்புக்குள் உட்பட்ட பருவகால நீதிமன்றத்தினால் பரிபாலனம் செய்யப்படுகிறது. மற்றைய கல்வி, சுகாதாரம் நீர் விநியோகம், மின்சாரம், பொலிஸ், மராமத்துப் பரிபாலிப்பு, நிலம் ஆகிய இவைகள் சம்பந்தமான நிர்வாகம் மாவட்ட அரச அமைப்புக்குக்கீழ் உள்ளது.

**பதியின் பூகோள அமைப்பு:**

தட்டையான பூமி, இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் யாழ்ப்பாணம். பருத்தித்துறைப் பெருந்தெருவுக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள நிலம் சவர்சேர்ந்த சாதாரண மண் கொண்டதாகவும், மேற்குப் பக்கம் செம்மண் கொண்டதாகவும் காணலாம். சவர் சேர்ந்த பகுதிகளில் உள்ள கிணறுகள் தாழ்வு குறைந்தும், செம்மண்பகுதிக் கிணறுகள் சில இடங்களில் அறுபது அடி ஆழத்திலும் அமைந்திருக்கின்றன. கிழக்கே இக் கிராமத்தின் எல்லையாகக் கொள்ளக்கூடியதான பகுதியில் இருக்கும் தொண்டமனாற்றில் ஆரம்பித்து செம்மணி வரை செல்லும் வாய்க்கால்வழி ஓடும் கடல் நீர் காரணமாகவே இதன் கிழக்குப்பகுதிப் பிரதேசம் உவர் மண் கொண்டுள்ளதாக மண்ணியல் நிபுணர் கருத்து வெளியிட்டுள்ளார்கள். ஆனால் இந்தப் பகுதிதான் முழுக்கிராமத்தின் நெல் தேவையைப் பூர்த்தி செய்கிறது. மேலும் இந்த வட்டாரம் வெங்காயம், குரக்கன், சாமை, சோளம், தினை ஆகிய உப உணவுப்பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக உள்ளது. செம்மண் பகுதியில் வாழை, உருளைக்கிழங்கு, மரவள்ளி,

திராட்சை போன்ற பயிர்கள் செழிப்புடன் வளர்ந்து பயன் தருகின்றன. இக் கிராம பூகோள அமைப்பின் சிறப்பு அம்சம் வயல்நிலப்பகுதியும், தோட்ட நிலப்பரப்பளவும், சமமாகக் கொண்டுள்ளதே!

**பதியின் இயற்கை வளங்கள்:**

இக்கிராமத்தில் நீர்ப்பாசன உபயோகத்திலிருக்கும் குளங்களாக நுனிவிற் குளம், கிராலிக் குளம், கிளுவதிரைக் குளம், வரிக்கம்புரைக் குளம், கொட்டுக்கிணற்றாள் குளம் என ஐந்து உள்ளன. இவையாவும் இக்கிராமத்தின் கிழக்குப் பிராந்தியத்திலேயே அமைந்திருக்கின்றன. இதற்கான காரணம் இப்பதியின் முழு நெல் வயல்களும் இங்கேயே இடம்பெற்றுள்ளன. இந்தக் குளங்கள் யாவற்றிலும் நீர் எல்லாக்காலங்களிலும் எடுக்கக்கூடியதாக அவற்றில் இரண்டிற்கு மேற்பட்ட துரிசுகள் தோண்டப்பட்டுள்ளன. மோட்டார் யந்திரம் பாவித்து விவசாயத் தேவைக்கான நீரைப் பெற்றுக்கொள்வார்கள். மற்றும்படி ஆயிரக்கணக்கில் நீர்த் தேவைக்கு கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. வீட்டுத் தேவைக்கான நீர் கிணறுகளில் இருந்து பெறப்படுகிறது. மேலும் இக்கிராமத்தின் மேற்குப் பகுதியின் விவசாய தேவைக்கான நீர் நிலாவிரை நன்நீர்த்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இந்த நிலாவிரை நீரூற்று ஒரு புதுமை யானதும் முழுக் கிராமத்திற்கும் பெருமை சேர்ப்ப தொன்றாகவும் திகழுகிறது. இதுபற்றி பூரண விபரம் அடுத்துவரும் பந்தியில் காண்க.

**நிலாவிரை நீரூற்று:**

இந்த நிலாவிரை என அழைக்கப்படும் அதிசயமான நீர் நிலை அல்லது வற்றாவாவி புத்தூர் கிராமத்தின் மேற்கே உள்ள நவக்கிரிப் பகுதியில் உள்ளது. 1950ம்

ஆண்டு தொடக்கம் மேலே விபரித்தவாறு யாழ்ப்பாண நன்னீர்த்திட்டத்திற்குக் கீழ்க் கொண்டுவரப்பட்டு புத்தூர் மேற்கு அச்செழு சிறுப்பிட்டி நவக்கிரி ஆகிய பகுதிகளின் விவசாய நீர்த்தேவை இதன் மூலம் ஓர் அளவிற்குப் பூர்த்தி செய்யப்படுகிறது. 1824ம் ஆண்டு பான்ஸ் பிரபு இலங்கையின் மகாதேசாதிபதியாக நியமிக்கப்பட்டபின் சில காலங்கள் சென்று இவ் வற்றா வாவியை நீர்ப்பாய்ச்சலுக்கு உட்படுத்த எண்ணங் கொண்டு இங்கிலாந்திலிருந்து பென்னம்பெரிய நீராவி யந்திரத்தை வரவழைத்து அதன் மூலம் பரிசீலனையில் ஈடுபட்டார். எட்டு நாட்கள் இரவு பகலாக இறைத்தும் அதன் நீர் அளவில் எவ்வித் வித்தியாசமும் ஏற்படவில்லை. முடிவில் அந்த நீர்நிலையின் கீழே கந்தக நீரூற்று இருப்பதை அவதானித்த பின் அந்த முயற்சி கைவிடப்பட்டது. அப்பொழுது இந் நீர்நிலையின் ஆழம் 144 அடி எனவும் அகலம் 30 அடியாகவும் அறிந்து கொண்டனர். நூற்றாண்டு காலம் கழிந்து 1950ம் ஆண்டு வட மாகாண அதிபர் ஒருவரின் முயற்சியின் நிமித்தம் குறித்த திட்டத்திற்குக் கீழ்க் கொண்டுவரப்பட்டு விவசாயத்திற்கான நீர் வழங்கல் நடந்துகொண்டிருக்கிறது. உத்தேசம் ஆயிரம் ஏக்கர் விவசாய நிலப்பரப்பு இதன் நிமித்தம் பயன்பெற்றுவருகிறது. மிகவும் குறைந்த கட்டணமே இதன் செலவாக விவசாயப்பகுதி அறவிடுகிறது.

இந்நீர் நிலை இடியேறு விழுந்து உண்டானதென்று Baldeus பாதிரியார் கூறியதாக Sir E. Tennent பண்டிதர் கூறியுள்ளார். இடியேற்றை ஒருவாறு எடுத்து அதனை ஆயுதங்களில் அமைத்துக்கொள்ளும் அறிவு நம் பூர்வீக ஆரியருக்கு இருந்ததென்று இந்நீர்நிலை இடியேறு காரணமாக வந்ததென்று கூறியது இதனை அடியிருத்தியாய் இருக்கலாம் இராமபிரான் தமது சேனைகளுக்கு நீரூட்டும்

பொருட்டு வச்சிராஸ்த்திரம் விடுத்து இந்த வற்றா ஊற்றை உருவாக்கினார் என்பதும் மேற்கூறிய கருத்துக்கு வலுவூட்டுகிறது, வச்சிராஸ்திரம் மேற்கூறிய முறையில் தயாரிக்கப்பட்டதொன்றாகும்.

நிலாவிரை வாவிக்கு நாற்பது அடிகள் தொலைவில் உள்ளது நவசைலேஸ்வரம் எனப்படும் சிவஸ்த்தலம் இந்த நீரூற்றில்தான் அதன் தீர்த்த உற்சவம் இப்பவும் நடைபெற்று வருகிறது. இதற்கும் கீரிமலைக் கடற்பகுதிக்கும் அடித்தளத் தொடர்பு இருப்பதாகவும், இந்நீர்நிலையில் ஒரு தேசிக்காயைப் போட்டால் இது கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தை அண்மித்த கடற்கரையில் மிதக்கும் எனவும், இரு சிவஸ்தலங்களின் சரித்திரத்தில் இவ் அற்புத நிகழ்வு எடுத்துரைக்கப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

இச்சந்தர்ப்பத்தில்ஒரு அதிர்ச்சியான தகவல் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் கிழமையில் இரண்டு நாள்கள் இடைவெளியில் இந் நீர்நிலையில் பிரேதங்கள் மிதந்திருப்பதும், மக்கள் அவற்றைப் பார்ப்பதற்கு அவ்விடத்தில் சேர்வதும் யாவரும் அறிந்த செய்தி. வாழ்க்கையில் விரக்தி, வேதனையுடையவர் மனைவியை இழந்து துன்பம் அடைந்தவர் எனப் பலபேர் இதில் விழுந்து மரணித்து இருக்கிறார்கள். 1950ல் நன்நீர்த்திட்ட அறிமுகத்துடன் இதன் நாற்புறமும் கம்பி வேலி போடப்பட்டு இந்த அநாகரியச் செயலுக்கு அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

**உப்பு ஏற்றுமதி:**

இக்கிராமத்தில் வெள்ளப்பரவை என்னும் இடத்தில் யாழ்ப்பாடி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்த உப்பு ஏற்றுமதி இப்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டது.

1950ம் ஆண்டளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நன்நீர் உருவாக்கல் திட்டத்தின் கீழ் தொண்டமனாறு கடற்கரையில் ஆரம்பித்து நல்லூர் செம்மணிவரை கால்வாய் வழி வந்துகொண்டிருந்த கடல்நீரை சன்நிதி முருகன் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் அணைபோட்டுக் கோடைகாலத்தில் இந்த ஏற்றுமதிபற்றி இங்கே கூறவந்தது, முன்பு நடைபெற்ற உப்பு ஏற்றுமதியானது புத்தூர் சரித்திரத்தில் மிகவும் முக்கிய இடம் எடுத்திருந்ததே காரணம்.

யாழ்ப்பாடி இரண்டாவது தடவை யாழ்ப்பாணத்திற்கு வந்து இராசதானி அமைத்து தனது மனைவியுடன் கூடி வாழ வழி அமைத்துக்கொடுத்தது இந்த உப்பு ஏற்றுமதி தானெனக் கூறினால் அது மிகையாகாது. இங்கே விளையும் வெண்மைநிற உப்பின் பெருமையை தொண்டமண்டல மன்னனுக்கு விபரித்து அதனை ஏற்றுமதிபண்ணும் ஆசையை ஊட்டி, அந்தச் சாட்டில் யாழ்ப்பாணம் வந்தேசேர்ந்தார். இவருடன் மரக்கலங்களும் வேலையாட்களும் இந்த ஏற்றுமதிக்காக அவ்விட அரசன் அனுப்பிவைத்துள்ளார். இந்த உப்பைப் பெற்றுக்கொண்டு, அதற்குச் சன்மானமாக நெல்கறிச்சம்பாரம், வஸ்திரங்கள் அவ்விடமக்களுக்கு அனுப்பிவைத்தாரெனச் சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த உப்பு ஏற்றுமதித்தொழில் பிரித்தானிய அரசு காலத்தில் யாழ்ப்பாண அரச அதிபரின் ஆணையின்கீழ் தொடர்ந்தும் நடைபெற்றது. இதற்கென ஒரு மேற்பார்வை அதிகாரி நியமிக்கப்பட்டு அவரின் ஆற்றுப்படுத்தலில் நிகழ்ந்துள்ளது. அந்த அதிகாரியாக புத்தூரிலிருந்து ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த ஒழுங்குமுறையும் 1950டன் நிறுத்தப்பட்டாயிற்று. இப்பொழுது வெள்ளப்பரவைப்

பகுதியில் சில இடங்களில் உப்புப் பிடித்திருக்கும், அதனைக் கிராம மக்கள் வீட்டுத் தேவைக்கு அபகரித்து விடுவார்கள்.

**தரிசு நிலங்கள்:**

இக்கிராமத்தில் தரிசு நிலங்களாக உத்தேசம் அறுநூறு ஏக்கர்கள் அளவில் உள்ளது. இவைகளை இவ்வூர் விவசாயிகள் தங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாகப் பாவிக்கிறார்கள். இந்த நிலங்களை அரசாங்க நிலங்களாகக் கொள்ளமுடியாது. ஏனென்றால் இவைகள் முன்னொரு காலத்தில் பயிர் செய்கையில் இருந்து இருப்பதற்கான போதிய அடையாளங்கள் தாங்கி நிற்கின்றன. அழிந்து சிதைந்த வரம்புகளும் முள்ளிச் செடிகளும் ஆங்காங்கே இக் காணிகளில் இருக்கின்றன. சில இடங்களில் நீர் பாய்ந்த வாய்க்கால் அடையாளங்களும் உள்ளன. முள்ளிகள் வளரக்கூடிய இடங்கள் நெற்செய்கைக்கு உகந்தன என நிலவியளாளர்கள் கருத்துப் பகர்ந்து உள்ளனர்.

புத்தூர் கிராமம் டச்சுக்கார அரசாங்க அமைப்பிலிருந்த போது, இவ்விட நிலங்களைப் பதிவு செய்திருந்தார்கள். அப்பதிவு முறை ஒழுங்குகளின் கீழ் புத்தூர் கிராமம் புத்தூர் வடக்கு இறை எனவும் புத்தூர் தெற்கு இறை எனவும் பிரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பதிவு முறை தொடர்ந்தும் அமுலில் உள்ளது. இந்தப் பதிவு ஒழுங்கு முறைக்குக்கீழ் புத்தூர் தெற்குப்பகுதியில் மட்டும் இந்த மேய்ச்சல் நிலங்கள் உள்ளன.

**கால்நடை வளர்ப்பு:**

வயல் நிலங்களை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களே பெருந்தொகையினர் இம் முயற்சியில் ஈடுபட்டுள்

ளார்கள். இவைகளை தங்கள் வயல் அல்லது தோட்ட நிலங்களில் பட்டியடைத்து அதில் அவைகளைப் பராமரிப் பார்கள். இந்தப் பிராணிகளின் எருக்கள் பயிர்ச்செய்கைக்குப் பசளையாகப் பாவிப்பதற்குச் சேகரித்து வைத்துக் கொள்வார்கள். இக்கிராமத்தின் பசும்பால் தேவையையும் இவைகள் தன்நிறைவாக்குகின்றன. இக் கால்நடைகளின் உணவுத் தேவையை இக் கிராமமக்கள் தங்கள் நெல் அறுவடை காலங்களில் சேரும் வைக்கோலைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தும் பனை ஓலை வெட்டிக் கிழித்து அவற்றையும் இன்னும் குரக்கன், சாமை, வரகு, தினை போன்றவற்றின் வைக்கோல்களையும் சேகரித்து வைத்து அவற்றின் மூலம் பூர்த்தி செய்கிறார்கள். தோட்டங்களில் வயல்களில் பயிர்கள் வளர்ந்து நிறைந்திருக்கும் போது அவற்றை அயலில் உள்ள தரிசு நிலங்களில் பட்டியடைத்து அதில் அவற்றை விட்டுப் பாதுகாப்பார்கள். பகல் காலங்களில் அவற்றை மேய்ச்சல் நிலங்களில் உணவு தேடக் கூட்டமாக அழைத்துச் செல்வார்கள்.

**வான் பயிர்கள்:**

இக்கிராமத்தின் மேற்குப் பகுதியில் தென்னைகள் அதிக தொகையும் கிழக்குப் பகுதியில் தோப்பாகப் பனைகளும் காணப்படுகின்றன. அரசாங்க அனுமதியின்றி இவற்றைத் தறிக்க முடியாது. தொடர்ந்து இவற்றின் பிரயோசன வருமானங்களை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்த நடைமுறையை அரசாங்கம் கொண்டு வந்து உள்ளது. இவற்றைத்தொட்ட சிறு கைத்தொழில்கள் இக்கிராமத்தில் அதிக வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. இவற்றின் பரிபாலனம் இவற்றுக்காக அரசினால் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவுச்

சங்கங்கள் கவனிக்கின்றன. இக்கிராமம் தன்னிறைவு பெற்றுத் திகழ்வதற்கு இப்பயிர்களின் வருமானமும் ஒரு காரணியாகும். மா, பலா, வேம்பு, அரசு, ஆல் ஆகிய மரங்கள் போதியளவு உள்ளன. மரம் அரியும் ஆலை ஒன்று புத்தூர் வடக்கு இறையில் உள்ளது. இது தனியாருக்குரியது.

**பொது ஸ்தாபனங்கள்:**

இத் தலைப்பின் கீழ் இக்கிராமத்திலுள்ள பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், மருத்துவ நிலையங்கள், வங்கி, தபால் நிலையம், வாசிகசாலைகள், பொது விளையாட்டு மைதானங்கள், மினி சினிமா அரங்குகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் வாய்ப்புகள் மற்றும் அவற்றின் வளர்ச்சிபற்றி ஆராயப்படுகிறது.

**பாடசாலைகள்:**

இக்கிராமத்தில் ஐந்து பாடசாலைகள் உள்ளன. 1950ம் ஆண்டு முதலாம்தர பாடசாலையாகத் தரம் உயர்ந்து இப்பொழுது தெரிவுத் தகமையில் வலிகிழக்குக் கல்வி வட்டாரத்தில் முதன்மைப் பாடசாலை அந்தஸ்தில் இருக்கும் சோமாஸ்கந்தக் கல்லூரி இதன் மத்தியில் இருக்கிறது. 2000 மாணவர்களுக்கு மேல் இங்கு கல்வி பயில்கிறார்கள். 70 ஆசிரியர்கள், விஞ்ஞான கூடங்கள், விளையாட்டு மைதானம், யாவும் தன்னகத்தே கொண்ட கல்லூரியாகும். இது கொடை வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களால் 1939ல் ஸ்தாபிக்கப்பட்டு அன்றிலிருந்து இலவசக்கல்வி அறிமுகப் படுத்தப்பட்டு, அவரின் நிருவாகத்திலிருந்து அவரின் பின் அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலனத்திலிருந்து 1960ல்

அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு பெயரும் புகழ் உடன் இயங்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தில் ஒரு விசேட தகவல் பகிர்ந்து கொள்ளவேண்டும். அதாவது இலங்கையில் அரசாங்கத்தினால் இலவசக்கல்வி ஏற்படுத்தமுன்பே இந்தப் பாடசாலையில் கொடைவள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் அறிமுகப்படுத்திச் செயல்படுத்தியும் விட்டார். இக் கிராமத்தி லுள்ள மிகுதி நான்கு பாடசாலைகளும் பிராந்திய அமைப்பு நிர்வாகத்துக்குக்கீழ் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

**ஆலயங்கள்:**

இங்கே அமைப்பில் பெரியதாக மூன்று கோவில்களும், சிறியனவாகப் பதினொரு ஆலயங்களும் உள்ளன. மிகவும் விஸ்தாரமாக விசுவநாத சமேத விசாலாட்சிக்கு மூன்று பெரிய வீதிகளுடனும், தெப்பைக்குளத்துடனும் சிவஸ்த்தலம் கொண்டவள்ளல் மழவராயர் கந்தையா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு அது கிராமத்தின் மையத்திலிருந்து அருள் பாலித்து வருகிறது. இது அறக்கொடையாளர் பரம்பரையில் உள்ளவர்களால் செவ்வனவே கவனிக்கப்படுகிறது. இதன் தலவிருட்சம் பலா. இங்கே உள்ள அம்மனைப் பலாவடியாள் என்று அழைப்பார்கள்.

மற்றைய இரு பெரிய கோவில்களில்ஒன்று இக் கிராமத்துக்கு வடமேற்கேயுள்ள **பைரவர்** கோவிலாகும். இதனைக் காரைக் கூடல் பைரவர் என அழைப்பர். இதன் மூலமூர்த்தியான ஓங்கார பைரவர், இப்பொழுது எழுந்து அருளியிருக்குமிடத்தில் இருந்த காரைப்பற்றைக்கூடல் இடமொன்றிலிருந்து காட்சிகொடுத்து, அதே இடத்தில் நிலைகொண்டார் என இவ் இடமக்கள் கூறுகிறார்கள். இதன்

தல விருட்சம் ஆல், இரண்டு வீதிகள் உண்டு. தனிப்பட்ட பரிபாலனத்திலிருக்கிறது. அடுத்தது **தகரம் பிள்ளையார்** கோவிலாகும். ஆதியில் இவ் ஆலயத்தின் பெரும் பகுதி தகரத்தினால் வேயப்பட்டிருந்தது. அதுவே இப்பெயர் வரக்காரணமாக இருந்தது. அங்கே எழுந்தருளியிருக்கும் மூலமூர்த்தியானவர் சித்தி விநாயகப் பெருமானாவார். இவருக்கு இன்னொரு நாமம் ஆருக்ஷன். அதன் அர்த்தம் ஏற்றம் தருபவர். இவர் மிகவும் அருளுடையவரெனவும் சக்திமிக்கவரெனவும் இவ் ஊர் மக்கள் தங்கள் மனதில் இருத்திவைத்திருக்கிறார்கள். இதன் தல விருட்சம் புன்னை. இதற்கு மூன்று வீதிகள் உண்டு. வருடாவருடம் வரும் சித்திரைப் பௌர்ணமியன்று பெருந்திருவிழாவின் பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். மூலவருக்கு இவ்விட மக்கள் வைத்த இன்னும் ஒரு காரணப்பெயர் கொடித்தூக்கிப் பிள்ளையார். இந்தத் திருநாமம் சூடப்பட்ட காலப்பகுதியோ அல்லது அந்த நாமத்துடன் சம்பந்தப்பட்ட அற்புதம் நிகழ்ந்த சரியான ஆண்டோ தெரியாது. இது பரம்பரை பரம்பரையாக வாய்வழிகாவப்பட்ட ஒன்றாகும். இது ஒட்டிய அற்புதத்தை இவ்வாறு வர்ணிக்கிறார்கள். பெருந்திருவிழாத் தொடக்க நாளான கொடி ஏற்ற வைபவ தினத்தன்று, கொடித்தம்ப பூசை நிறைவுற்று மேளவாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருக்க, அந்தணர் வேதம் ஓதியிருக்கையில், பக்தர்கள் பார்த்திருக்க பிரதான குருவின் ஒரு கை கொடிச்சீலையைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்க வலது கரம் தர்ப்பைக் கயிற்றைத் தாங்கிப் பிடித்திருக்கையில் கோவில் காண்டா மணியின் முதல் ஒலியுடன் கொடி பிடித்திருந்த பிரதம குருவின் கையிலிருந்து நழுவி, அதிசயமானமுறையில் கொடிச்சீலை தானாகவே கொடித்தம்பத்தின் உச்சிக்குச் சென்று தொங்கிக் கொண்டதாம்.

மற்றைய எட்டுத் **திருத்தலங்களும்** கிராமத்தில் உள்ள சிறிய குறிச்சிகளில் ஆங்காங்கே எழுந்தருளி இருக்கின்றன. அவற்றின் பூசைகளும் காலம்தவறாது கிரமமாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

**கிறிஸ்தவ தேவாலயங்கள்:**

இக் கிராமத்தில் கிறிஸ்தவ மதத்தைக் கைக்கொள்பவர்கள் அதிகுறைந்த தொகையினர். அவர்களுக்கான தேவாலயங்கள் இரண்டுள்ளன. கிராமத்தின் மத்தியிலும் அடுத்தது நவற்கிரிக் குறிச்சியிலும் இருக்கின்றன. மத்தியிலிருக்கும் தேவாலயம் மிகவும் பெரியதும், பழையதும், பதினேழாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதற்கான சான்றுகளும் கொண்டிருக்கிறது.

**அன்ன சத்திரம்:**

இது புத்தூரிருந்து சுன்னாகம் செல்லும் வழியில் கொடைவள்ளல் மழவராயர் கந்தையா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதுவாகும். அவரின் நம்பிகைப் பொறுப்பாளர்கள் இப்பொழுதும் அந்தக் கைங்கரியத்தை கைவிடாது நிறைவேற்றி வருகிறார்கள். இச் சத்திர வளவுக்குள் உள்ள மூன்று கிணறுகளில் வற்றா ஊற்றுடைய ஒரு கிணற்றிலிருந்து வாதரவத்தைக் கிராமத்துக்கு அரசாங்கம் குழாய் மூலம் குடிநீர் வழங்கி வருகிறது.

**மருத்துவ நிலையங்கள்:**

இவை இரண்டுள்ளன. ஒன்று அரசினால் நடத்தப்படும் பிராந்திய தரத்தில் உள்ள மத்திய வைத்திசாலை. படுக்கைகள் கொண்டிருக்கவில்லை. நிரந்தரமான ஒரு உதவி மருத்துவத் தகுதி உடையவராலும்

ஒரு மருந்தாளராகவும் இயக்கப்பட்டு வருகிறது. வைத்தியம் இலவசமாக நடைபெறுகிறது. மற்றையது தனியார் மகப்பேற்றுமருத்துவ மனையாகும். இங்கேயும் ஒரு பகுதியில் சாதாரண சிகிச்சைகளும் செய்யப்படுகிறது. ஐந்து வாட்டுகளும், சிறிய சத்திர சிகிச்சைக் கூடமும் கொண்டுள்ளது. இது மிசனரி நிருவாகத்தில் இயங்குகிறது. இந்த இடத்தில் இரண்டு கட்டிடத்தில் வயோதிபர்களை வைத்துப் பராமரிக்கிறார்கள். வயோதிபர் இல்லம் சிறந்த முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வைத்திய நிலையத்தோடு பெரிய கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ளது. இதன் அருகில் தனியார் பார்மசியும் உள்ளது.

**மற்ற அமைப்புகள்:**

ஒரு உபதபாற் கந்தோர் உண்டு. ஒவ்வொரு வட்டாரத் திலும் கூட்டுறவுச் சங்கக்கிளைகளும், வாசிகசாலைகளும், அந்த வாசிகசாலைகளுடன் சேர்ந்த சிறிய விளையாட்டு இடங்களும் கொண்டுள்ளது. மிகவும் பெரிய விளையாட்டு அரங்குகளும் உள்ளன. ஒவ்வொரு தெருக்களிலும் அங்காங்கே போட்டோப் பிரதிகள் உருவாக்கும் ஸ்தாபனங்கள், பலசரக்கு விற்பனை செய்யும் மையங்களும், கடைகளும் உள்ளன. கூட்டுறவுக் கிராமிய வங்கி ஒன்றுள்ளது. இரண்டு நெல் குற்றும் ஆலைகளும் ஒரு மினி சினிமா அரங்கொன்றும் கூட்டுறவு முறையில் உள்ள மண் எண்ணை விற்கும் நிலையமும் இருக்கின்றன. இக் கிராமத்தில் முன்பு அதாவது 1990ம் ஆண்டுகள் வரை இயங்கி வந்த தனியார் துணி ஆலை இப்பொழுது இல்லை. இப்பொழுது இரண்டு அரசினர் நெசவு நிலையங்கள் இயங்குகின்றன. மூன்று பொது மயானங்களும், அரசாங்க அனுசரணையில் இயங்கும் மராமத்துப் பகுதியின்

வாகனங் திருத்தும் தொழில்பட்டடையும், நெற்பயிர்ச் செய்கைக் குழுக்களின் வலிகாமம் கிழக்குப்பகுதிக்குரிய தலைமைச் செயலகமும் நவற்கிரியில் உள்ளன. தனியார் நிருவாகத்தில் ஒரு வாகனங்கள் சேர்விஸ் செய்யும் நிலையமும் யாழ்-பருத்தித்துறை பிரதான தெருவில் இருக்கிறது. பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் வலிகாமம் கிழக்குப் பகுதியின் வடபாகத் தலைமைச் செயலகமும் இதே பிரதான தெருவில், புத்தூர் வடக்கு இறையில் அமைந்துள்ளது. பல தனியார் தொலைத் தொடர்பு ஏற்படுத்தி உதவும் மையங்கள் அங்காங்கே நிறுவப்பட்டுள்ளன. இவை உரிமையாளர்களுக்கு நல்ல வருமானம் சேர்க்கும் வர்த்தகமாக உள்ளது. 1950ம் ஆண்டுவரை இங்கே பட்டுப் பூச்சிகள் வளர்த்து, அவற்றிருந்து பட்டு நூல் எடுத்து, நல்ல தரமான பட்டுத் துணிகல் நூர்த்தெடுக்கும் அரசு நிருவாகத்தில் இயங்கிய தொழிலகம் இருந்தது. அது பின்பு செலவுகள் ஏற்றம் காரணமாகக் கைவிடப்பட்டாயிற்று. நவற்கிரியில் அரசாங்கப் பொறுப்பில் உள்ள பெரிய உரக்களஞ்சியம் இருக்கிறது. அரசாங்கத்தினால் குழந்தைகளுக்கு இலவச பசுப்பால் வழங்கும் பல மையங்கள் இயங்கி வந்தன. ஆனால் அவற்றை அரசாங்கம் 1970ல் நிறுத்திவிட்டது. துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தனியார் மையங்கள் போதியன உள்ளன. தனியார் கல்வி நிலையங்கள் இரண்டு புத்தூர் வடக்கு இறையில் இயங்குகின்றன.

**பூர்த்தி உரை**

இக்கட்டுரையை நிறைவு செய்யுமுன் ஒரு செய்தியைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது

புத்தூர் கோவிற்பற்றின் மையப்பகுதியான புத்தூர் வடக்கு, புத்தூர் தெற்கு ஆகிய இரண்டு இறைகளாகும். இதற்குள் புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு கிராமசேவை யாளர்கள் முழுப்பிரிவுகளும் உள்ளடங்குகின்றன. இதன் விஸ்தீரணம் 1 1·2 கிலோமீட்டர் அகலம், 2 கிலோமீட்டர் நீளம். குடிசனத்தொகை இரண்டாயிரம் ஆண்டு அப்பகுதிகளின் கிராம சேவையாளர்களிடமிருந்து பெற்ற புள்ளி விபரங்களின்படி ஒன்பதினாயிரமாகும். வலிகாமம் கிழக்குப் பிரிவில் ஜனத்தொகை கூடிய கிராமசேவையாளர் பிரிவுகள் இவை இரண்டுமாகும். புத்தூர் கோவிற்பற்று என ஆய்வுக்கு எடுத்திருந்தால், அப்பொழுது ஆவரங்கால், வாதரவத்தை, சிறுப்பிட்டி, அச்செழு, ஈவினை ஆகிய கிராமங்களைச் சேர்க்க வந்திருக்கும். இந்தக் கிராமங்களில் உள்ள அறிஞர் பெருமக்கள் தங்கள் கிராமங்கள் பற்றி ஏற்கனவே கட்டுரைகள், எழுதிவிட்டார்கள். மேலும் எழுத ஆர்வமாக இருக்கிறார்கள். ஆகவே இவ்விதம் எனது ஆய்வை மட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள நேர்ந்தது.

இந்த ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட இறைகள் இரண்டிலும் சான்றோர்களாக திகழ்ந்தவர்களின் பெயர்கள் அவர்களின் சேவை விபரங்கள் சேர்க்கப்படவில்லை. அவற்றைத் தனியாக வெளிவரவைக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறேன்.

**புத்தூர் மாதா மேன்மேலும் சிறப்புற்று நீடுவாழ்க!**

**உசாத்துணை:**

*01.* யாழ்ப்பாணச் சரித்திரம் -
மெஸ். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை - 02ம் பதிப்பு

*02.* யாழ்ப்பாண வைபவ கௌமுதி -
ஆ. வேலுப்பிள்ளை - மறுபதிப்பு

03. யாழ்ப்பாண வைபவமாலை -
குல சபாநாதன் - பதிப்பு - 1953

04. கோவைப்பதியில் சைவமும் தமிழும் -
லோ. மங்கையர்க்கரசி 1990

05. புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி
வெள்ளிவிழா மலர் - 1956

06. புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி
பவளவிழா மலர் - 2006 பிரித்தானிய வெளியீடு

07. புத்தூர் இலக்கிய மன்ற வெளியீடு -
நறுந்தொகை - சு. சதாசிவம் நினைவு மலர்

08. சிவமலர் - து. சிவராசா:
ஞாபகார்த்த மலர் 2006

09. Ancient Jaffna-C இராசநாயகம் - மறுபதிப்பு

10. Ceylon - P.Baldeus: மறுபதிப்பு-1959.

11. யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கி கொள்ளுதல்.
பேராசிரியர் - கா. சிவத்தம்பி.

12. Kingdom of Jaffna -
பேராசிரியர் எஸ். பத்மநாதன்.

# “கங்காதேவி தரிசனம்”

(புத்தூர் - நவக்கிரி நிலாவரை நீரூற்று)

வேதாகம புராண இதிகாசங்கள் ஆகியன இறைவன் அருளால் அருளிச் செய்யப்பட்டவையாகும். அதேநேரம் இவையாவும் இறைவன் வாக்காகவே உள்ளன. சைவநெறியைக் கருசனையோடு கைக்கொள்பவர்கள் அனேகர் இவ்வாறே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

இறைவன் திருவாக்காக கொள்ளப்படும் பதின்நான்கு வித்தைகள் உள்ளன. அவையாவன: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கும், வேதாந்தங்கள் ஆறும், மீமாஞ்சை, நீதி, புராணம், தரும சாஸ்திரம் என்னும் நாலும் ஆகும். வித்தைகள் யாவும் வேதத்தை முதன்மையாகக் கொண்டவை. இவற்றின் ஆக்கியோனாகிய பரமேஸ்வரன், அகில வேதாந்த இரகசியம் நிறைந்த நூறு கோடி கிரந்த அளவு கொண்ட புராண சங்கிதையை அவரே முதலில் வெளியிட்டார் என்று கூறப்படுகிறது. இவற்றைக் கலி வருமுன் துவாபர யுகத்தில் நாலு இலட்சம் கிரந்தங்கள் கொண்டவையாகச் சுருக்கிப் பதிணெட்டாகப் பிரித்து வேதவியாச முனிவர் வெளியிட்டிருந்தனராம். ஆகவே புராணங்களின் வரலாற்று ஒழுங்கு முறையில் இவ்விதம் அவை இடம் பெறுகின்றன. பிரம புராணங்கள் இரண்டு, அக்கினி புராணம் ஒன்று, சூரிய புராணம் ஒன்று, விஷ்ணு புராணங்கள் நாலு, சைவ புராணங்கள் பத்து, எனக் காட்டப்பட்டுள்ளது. சைவ புராணங்கள் பத்தாகக் காணப்படுபவற்றில், “கந்த புராணம்”முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இந்தக் கந்தபுராணத்தில் இக்கட்டுரையில் சம்பந்தப்படுத்தப்பட்ட, “தசஷிண கைலாச மான்மியம்” இடம் பெற்றுள்ளது.

இதில் லங்காபுரியின் மகிமையையும் புகழையும் எடுத்துக் கூறப்பட்டு இருக்கிறது.

தசஷிண கைலாச புராணத்தின் வரலாற்றையும் மகிமையையும் முற்காலத்தில் திரு நந்திதேவருக்கு சிவபெருமான் முதலில் அருளினார் என்றும் அவர்கள் அதனை சனற்குமார முனிவருக்கு உபதேசம் செய்தா்ர் என்றும், பின்பு அவர் வியாச முனிவருக்கு உரைத்ததாகவும், அதனைப் பின்பு, வியாச முனிவர் அவர்கள் சூதபௌராணிக்கர் முனிவருக்குக் கூறியதாகவும் அறியக் கிடக்கின்றது.

புராணங்களில் தசஷிண கைலாச மான்மியும் சாரமுடையது. இதில் படல அட்டவணைப்படி இருபத்தேழு அத்தியாயங்களையும், சுமார் 2500 கிரந்தங்கள் கொண்டுள்ளது. குறித்த இருபத்தேழு அத்தியாயங்களில் இருபத்திரண்டு அத்தியாயங்களைத் தெரிந்து எடுத்துப், பெரும் சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாணம், வடமராட்சியைச் சேர்ந்த வதிரியில் வதித்த வித்துவானும், வட மொழி, தென்மொழி ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்றவருமான திரு. சின்னத்தம்பி நாகலிங்கம் பிள்ளை அவர்கள், 1928ம் ஆண்டு வைகாசி மாதம், தமிழ் மொழி ஆக்கம் செய்து வெளியிட்டிருந்தார்கள்.இதற்கு முன்பு சிலச் சில அத்தியாயங்களின் பகுதிகள், தமிழில் தேவையைப் பொறுத்து, மொழியாக்கம் செய்யப்பட்டு இருந்ததாகவும் தெரிய வருகிறது.

தசஷிண கைலாச புராணத்தின் முதல் அத்தியாயமான புராண வரலாற்றுப் படலத்தில், முனிவர் சூரபௌராணிக்கர் அவர்கள் கோமதி ஆற்றங்கரையில் இடம்பெற்ற “தீர்க்க தரிசனம்” என்ற யாகத்தின் முடிவில்,

அவ்விடத்தில் பிரசன்னமாகி இருந்த முனிவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுத் தசஷிண கைலாச புராணத்தைத் தான் வியாச முனிவரிடமிருந்து அறியக்கிடைத்த அரிய சந்தர்ப்பத்தையும் (இக் கட்டுரையில் மூன்றாம் பந்தியில் கூறியவாறு) மேலும் அதன் உள்ளடக்கத்தையும் வெளிப்படுத்துவது இடம் பெற்றுள்ளது. ஸ்ரீ தசஷிண கைலாச புராணத்தில் பத்தொன்பதாவது படலமாகக் காணப்படும், "நவசைலேஸ்வர புராணத்தில்" அவர் கூறியவை, இவ்வாறு இடம் பெறுகிறது.

"அங்கம், வங்கம், கலிங்கம், காம்போசா முறையான ஐம்பத்தாறு தேசங்களுள், சிங்கள தேசம் மேலானதெனவும், அங்கே யாழ்ப்பாணத்தில் அழகுவாய்ந்த புத்தூர் என்னும் பதியில், பூமிக்கு மேல் சிறிது உயரமாகவும், ஐந்து குரோச விசாள முள்ளதாயும் இருக்கின்றது நவசைலத்தின் மேல் ஒரு குகை இருக்கின்றது. அது மங்களகரமானது. அதன் கந்தர மத்தியில் நீல இரத்தினத்தினால் அலங்கரிக்கப்பட்ட அழகு வாய்ந்த சிங்காசனத்தின் மீது லிங்கநாத ரூபமும், தேவரும், தாரகப்பிரமமும், சாசுவதரும் உமாதேவியாருடன் கூடியிருந்து உலகத்துக்குச் சுகம் செய்பவருமாகிய சங்கரர் இடப்பாகத்தில் விநாயகரும் வலப்பக்கத்தில் சுப்பிரமணியரும், மற்றும் நந்தி, பிருங்கி மகாகாளார், ஐயனார் முதலானவர்களும் சூழ்ந்திருக்க, மகாதேவுராய் உலகங்களுக்கு அநுக்கிரகம் செய்யும் விருப்பத்துடன் எழுந்தருளி இருந்தனர்"

இவ்வாறு இருக்கும் தருணத்தில் பாதாளத்தில் உள்ள "கங்காதேவி" சிவன் அனுமதிப்படி, அதிக பிரவாகத்தோடும் இரைச்சலோடும், மீன் முதலிய நீர்வாழ் சொத்துக்களோடும், தாமரை முதலிய பலவகைப் புஸ்பங்களோடும், அலை சூழ்ந்த குமுழிகளோடும்

மலையைப் பிளந்து கொண்டு அதி வேகமாய் தடாகத்தில் வந்து தோன்றினாள். கருணையங்கடலாகிய மகேஸ்வரன். கங்கையின் தோற்றத்தைக் கண்டு, தமது திருக்கரத்தினால் அக்கங்கையை எடுத்து, விந்து அளவு சடையில் தரித்துக் கொண்டு மிகுதியை மேலே விட்டு, மங்களம் உண்டாகுகவென ஆசீர்வதித்து அத் தேவதேவேஸ்வரன் கங்காதரிசனத்தால் வசஞ்செய்யப்பட்ட புத்தியுடையவராயினர் அவ்வுமை மணவாளர் இப்பொழுதும் அக்குகையில் இருக்கின்றனர். அந்த நவக்கிரிக்கு ஒப்பாக இதன் முன்பும் இல்லை. இனி உண்டாகப் போவதும் இல்லை. பராசரர் முதலான முனிவர்கள் பிரம நிஷ்டாபரர்களாய் அங்கே வசிக்கிறார்கள். முனிவர்களே! வேறு இடத்தில் வெகுகாலத்தில் சாதிக்காதது அவ்விடத்தின் மகிமையால் உடனே சித்தியாகும். எவனொருவன் இக் கங்கையைப் பார்க்கிறானோ, அவன் தான் நூறு கோடி குலத்துடன் சிவனோடு கூடி மகிழ்ச்சி அடைவான்."

"அருத்தேதயம், பஞ்சபருவம், மகோதயம், ஆவணி மாதம் தைப்பூசம், மாசிமகம், சந்திர சூரிய கிரகண முதலிய புண்ணிய காலங்களில் ஸ்நானதானம் முதலியன செய்பவன் புலன் ஒடுங்கியப் பரிசுத்தன் ஆவான். அவன் அடையும் புண்ணியப்பயன் இன்னதென்று சொல்லப் பிரமதேவனாலும் முடியாது. இச்சரித்திரம் பாவத்தைப் போக்கும், புண்ணியத்தை நல்கும். நீண்ட வாழ்நாளும் உண்டாகும். இதனைப் படிப்போரும் கேட்போரும் சிவசாயுச்சியம் பெறுவர்" இத்துடன் நவசைல படலம் முற்றுப் பெறுகின்றது.

திரு. சி.நாகலிங்கம் பிள்ளை அவர்களின் புத்தகத்தில் இப்பகுதியை வாசித்த போது நீரூற்றுச் சம்பந்தமான

இப்புராணக் கதையோடு ஒத்து மருவிப் போகக் கூடிய, நேர்காணல் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. அதனை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக அமையுமென நம்புகிறேன்.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியின் எனது இடைநிலைக் கல்வியை எடுத்துக் கொண்டிருக்கும் போது, (1953ம் ஆண்டளவில்) எனது நல்ல நண்பனாகக் குறித்த நீர் நிலைக்கு அண்மித்து வசித்து வந்த வீ. சின்னத்தம்பி என்பவர் இருந்தார்.அவர் நாளாந்தம் குறித்த நீரூற்றுப் பகுதியில் நிகழும் திகில் ஊட்டும் புதினங்களோடு பாடசாலைக்கு வருவார். அங்கே நடக்கின்ற நீச்சல் போட்டி, அயலிலுள்ள தோட்டக்காரர் சண்டையில் ஈடுபட்டு இரு பகுதியாரும் கோபத்தில் மாறி மாறி மாட்டுத் தொட்டிகளைக், குடிலோடு சேர்த்துக் கொண்டு வந்து இந் நீர் நிலைக்குள் தள்ளுவதையும், அவ்விடத்தில் அந்திமக்கடன் நிறைவேற்ற வரும் நபர்கள் போடும் தர்க்கங்களையும், இதற்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்ட ஆண், பெண் ஆகிய இருபாலாரின் பிரேதங்கள் மிதக்கும் போது அவை பற்றிய செய்திகளையும் எமக்குத் தெரிவிப்பார். இந்த நீர் நிலையில் தான் அவரின் தந்தையார் நாற்பத்தைந்து வயதைத் தாண்டாத வீரவாகு என்ற நாமமுடையவர், காலையிலும், மாலையிலும் கிரமம் தவறாது இந் நீர்நிலையில் ஸ்நானம் செய்து கொள்ளுவது வழக்கம் என்று கூறுவார். இன்னும் பகலில் யாரும் சுற்றுலாப் பிரயாணிகள் கூப்பிட்டால் அல்லது அரச அதிபர்மார் வந்து பார்வையிடும் போது அவர்களுக்குத் தனது நீச்சல் சாகசங்கள் நிகழ்த்திக் காட்டுவார். என்றும், மது போதையிலிருந்தாலும் இவ்வித முயற்சியைச் செய்து காட்டத் தவறுவதில்லை என்பதையும் அவரின்

அப்பழக்கத்தை தானும் தன் தாயாரும் தடுத்துப் பார்த்தும் அவர் அதனை விட்டபாடு இல்லைஎனத் துயரத்துடன் எங்களுக்கு உரைத்திருக்கிறார். இப்படியான ஒருவரை அடியேன் ஒரு தருணத்தில் நேரில் சந்தித்து குறித்த நீர்நிலை பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொள்ள விரும்பி, அவரின் மகனான சின்னத்தம்பி மூலம் ஒரு சந்திப்பை முன் ஏற்பாடு செய்து கொண்டு உரிய நேரம், எனது வீட்டிலிருந்து துவிச்சக்கர வண்டியில் அவர்களது இல்லம் சென்றடைந்தேன். மகனும் தகப்பனும் வரவேற்றுத் தங்கள் வீட்டு வேதிகையில் ஒரு பாய் விரித்து அதில் அடியேனை அமர வைத்தார்கள். வழக்கமான சுகம் விசாரிப்போடு, குறித்த நீர்நிலை பற்றிய பகிர்வைத் தொடங்கிக் கொண்டோம். சின்னத்தம்பி அவர்கள் தந்த தகவல்களுடன்அவரின் தந்தையார் புதிதாகச் சிலவற்றைக் கூறினார். அவர் எங்களுக்கு இடையில் நடந்த உரையாடலில் பல தடவைகளில் குறித்த வற்றாஊற்றுக் கொண்ட தடாகத்தின் வடமேற்கு மூலைப்பக்கத்தில் ஒரு குகை போல நீண்டு செல்லும் ஒரு அமைப்பைப் பார்த்துள்ளதாகவும் அதற்குள் புகுர ஒருமுறை முற்பட்டபோது சுழிகள் இழுத்துச் செல்லக் கூடிய அபாயத்தை அத் தடவை தான் அனுபவித்த பின்பு, அதனை மீளவும் முயற்சித்துப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டதாகவும் கூறினார். ஆனால் பல தடவைகளில் அதற்குள் தேசிக்காய், பூக்கள் போன்று நீரில் மிதந்து செல்லக் கூடிய பொருட்களை எறிந்து பார்த்த போது அது நீர்ச் சுழியினால் இழுத்துச் செல்லப்படுவதை அப்படிச்செய்த அத்தனை சந்தர்ப்பங்களிலும் தான் அவதானித்ததாகவும் தெரிவித்தார். தான் ஒவ்வொரு கிழமையும் இரண்டு பிரேதங்களுக்குக் குறையாமல் அந்த நீர் நிலையிலிருந்து தூக்கி எடுத்து வெளியே போட்டுத் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு உதவுவதே தனது

வேலையாக இருந்து வருகிறதெனவும் காவல் துறையினர் தனது உதவி இல்லாமல் பிரேதங்களை அதற்குள்ளிருந்து மீட்டெடுக்க மாட்டார்கள் என்று ஒரு புன்சிரிப்போடு அவர் கூறினார். தென் மாகாணத்திலிருந்தும், கிழக்கு மாகாணத்தில் இருந்தும், மலையகத்திலிருந்தும் வரும் சுற்றுலாப் பிரயாணிகள் நீர்நிலைக்குள் பரிசோதனை முயற்சியில் வீசிப்பார்க்கும் பொருட்களைச் சுழியோடி எடுத்துக் கொடுத்தால் நிறையப் பணம் தருவார்கள் என்று கூறினார். இத்துடன் எங்களின் நேர்காணலை முடித்துக் கொண்டு, அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் நன்றி தெரிவித்துவிட்டு, எனது இல்லம் நோக்கிப் புறப்பட்டேன்.

ஸ்ரீநவசைல படலத்துக்கும் திரு வீரவாகு அவர்களுடனான எனது உரையாடலில் பெற்றுக் கொண்ட சில தகவல்களுக்கும், ஒருவித உடன்பாடு தெக்கி நிற்பதைக் காணலாம். இந்த வற்றா ஊற்று நிலையில் அல்லது தடாகத்தின் ஒரு பகுதியில் குகை போன்ற அமைப்பு ஒன்று இருந்து வருகிறது. என்பது இதன் நிமித்தம் நிரூபனமாகிறது. இன்னும் இக்கிராமத்தில் பரவியுள்ள ஒரு செய்தி இத்தடாகத்துக்கும் கீரிமலைக்கடலுக்கும் தொடர்பு இருப்பதாகவும், ஒரு தேசிக்காயை இந்த நீர்நிலையில் போட்டால் அது கீரிமலைக் கடலைச் சென்றடையும் என்பதும் வலுவான ஆராய்ச்சிக்குரிய விடயமாக உள்ளது. மேலும் இந்த நீர்நிலை இருக்கும் இடத்திலிருந்து நூறு யார் தூரத்தில் அதாவது இப்பொழுதுள்ள ஆலயம் அமைந்திருக்கும் இடத்துக்கு வடமேற்குப் பக்கமாக நவசைலேஸ்வர புராணத்தில் கூறப்பட்ட ஸ்ரீநவசைலேஸ்வரம் பெரும்கோவிலின் இடிபாட்டு எச்சங்கள் இருப்பதாக அவ்விடத்து வயது முதிர்ந்த மக்கள் கூறுகிறார்கள். அதனையும் அது இருக்கும் பகுதியின் பௌதீக

அமைப்பையும், புராணமான ஆய்வுக்கு உட்படுத்திய பின்பு, இப்பகுதியை "புனித சைவபூமிப் பகுதியாகப்" பிரகடனப் படுத்துமாறு வடமாகாணசபை தங்கள் சபையில் ஒரு பிரேரணை ஊடாக மத்திய அரசை வலியுறுத்திச் செயற்பட வைப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

**உசாவியது:**

தசஷிண கைலாச புராணம் - வடமொழியிலிருந்து தமிழ் மொழியாக்கம் - திரு. சி. நாகலிங்கம்பிள்ளை - முதற் பதிப்பு - வைகாசி *1928.*

## ஊரும் - பேரும்

புத்தூர் கிராமச்சங்கக் கட்டடவளவில் சனசமூக நிலையத்திற் கண்மையில் இரு ஞாபகச்சின்னங்கள் உள, அவற்றுள் ஒன்று ஒரு நாயைச் சுமக்கிறது. "வாலி" என்பது அந்த நாயின் பெயர். ஏனையதில் சேதிராயன் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இச்சேதிராயன் யார்? இவருக்கு இங்கு சின்னம் எழுதப்பட்ட தேன்? என்று எவரும் வினாவுவதியல்பே, இச்சின்னம் இவ்வூரின் பெயரோடு நெருங்கிப் பிணைந்துள்ளது. எனவே இது இவ்வூரின் உரிமைச்சின்னம். இவ்வூரின் தோற்றச்சின்னம் எனலாம். இவற்றை விளங்குவதற்கு ஈழத்தின் பூர்வ சரித்திரத்தை புரட்டிப் பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

விஜயனுக்குப் பின் வழிமுறையாக இலங்கை பதினொருவரால் அரசு செய்யப்பட்டது. பன்னிரண்டாம் அரசனாகிய அசேலனை ஏலேலன் என்ற தொண்டைநாட்டரசன் வெற்றிகொண்டு இராச்சியத்தை நடத்திவந்தான். ஏலேலன் இலங்கைக்கு வந்தகாலம் 205 கி.மு. என்று யாழ்ப்பாணச் சரித்திரம் பகருகிறது. இந்தக்காலத்திலேயே தொண்டை நாட்டிலிருந்து அந்தகக்கவிவீரராகவன் என்றொரு யாழ்வல்லான் ஏலேலனைக் கண்டு அவனிடம் தன் கவித்திறமைக் காட்டி யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றதாக நாம் கீழ்வகுப்புகளில் படித்ததுண்டு. சிலகாலம் சென்றபின்பு அந்த யாழ்ப்பாடி தனது சுவ தேசத்திற்குத் திரும்பி அங்கே தொண்டைமானைக் கண்டு, தான்பெற்ற மணற்றிடரில் குடியேறுவதற்கு ஜனங்களும், ஒரு மந்திரியும், சேனையும் தரும்படி வேண்டத் தொண்டைமானும் இசைந்து ஒரு மந்திரியையும், ஒரு சிறு படையையும் கொடுத்து அனுப்பினான். மணற்றிடற்குத் திரும்பியதும் யாழ்ப்பாடி பட்டாபிஷேகம் பெற்று, தன்னுடன் மந்திரியாகவந்த

சேதிராயனுக்குப் புத்தூர் என்று பின்னர் வழங்கப்பட்ட இடத்தைக் காடு கெடுத்து நாடாக்கிக் கொடுத்த செய்தியை நாம் சரித்திரவாயிலாக அறிகிறோம்.

இந்தப் புத்தூரானது வலிகாமம் கிழக்கில் உள்ள ஒரு கோவிற்பற்று. புதிய - ஊர், புத்தூர் என வந்தது போலும். இது யாழ்ப்பாணத்தில் உள்ள பழங்கிராமங்களில் ஒன்று. புத்தூர் எனப் பெயரிய ஊர்கள் நான்கு, வடஆற்காட்டிலும், தென் கண்டத்திலும், தஞ்சாவூரிலும், கோழிக்கூட்டிலுமுள. இப்பெயர் இன்னும் எத்தனையூர்களுக்கு அமைந்திருக்குமோ தெரியாது. இது சேதிராயனுக்கு ஆகவே அமைக்கப்பட்டவூர் என்பதற்கு ஆதாரங்கள் இல. எனினும் புதிதாக அமைக்கப்பட்டவூர் புத்தூர் என ஒன்றையே விஷேடித்துக் கூறியபடியால் யாழ்ப்பாணத்தில் உள்ள மற்றயவூர்கள் எல்லாம் யாழ்ப்பாடியின் காலத்தில் பழயனவாய் இருந்திருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது.

புத்தூரில் உள்ள மக்களுட் பெரும்பாலானோர் வருடாவருடம் புத்தூர் நாகதம்பிரான் கோவிலுக்குப் போய்வருகின்றனர். இப்புதூருக்கும் புத்தூருக்கும் உள்ள தொடர்பு கூர்ந்து நோக்கத்தக்கது. புத்தூராரின் இத்தொடர்பால் இவர்கள் பழங்குடி மரபினராதல் கூடும் என்றும் நாகவணக்கம் உடையார் என்பதும் அறியக்கிடக்கின்றது.

ஒரு சாரார் மழுவன் இந்த ஊரில் குடியேறிய முதல்வன் என்றும், இவன் சந்ததியினர் இன்றும் இங்கு இருக்கின்றனர் என்றும் கருதுகின்றனர். இதுவும் ஆராய்தற்கிடமானது.

இந்த ஊருக்கு மேற்கேயுள்ள குறிச்சி நவக்கிரி எனப் பெயர் பெற்றிருக்கிறது. இங்கே அதிசயம்

விளைக்கும், புதுமையான நீர்நிலை ஒன்றுண்டு. அதை "நிலாவிரை" என்று கூறுவர். இது மிகவும் ஆழமானதும், வற்றாவூற்றுடையதுமாகும். இப்போது இந்நீர்நிலையிலிருந்து நீர்ப்பாசனம் நடைபெறுகின்றது. ஆகையால் இப்புதுமை நோக்கி புத்தூர் ஆயிற்றெனினுமமையும்.

இன்னும் புத்தூர் என்ற பெயர் "புற்றுஊர்" எனப்பட்டுத் திரிந்து புத்தூர் என்றாயிற்று என்பவருமுளர். புற்றுள்ள நிலம் விவசாயத்திற்கு மிகவும் ஏற்றது என்பது நிலவியல் அறிந்தார் கருத்தாகும். இராமாயணத்தில் இராமன் காடேகின் அயோத்திநகர மக்கள் தாமும் அவனைத் தொடர்ந்து காட்டில் குடியேறின் "புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போமென்றார்." இதனாலும் இவ்வூர் விவசாயத்திற்கு ஏற்ற நில இயல் உடையது என்பது கண்கூடாகத் தெரிகிறது.

மேலும் "புத்தர் ஊர்" புத்தூர் எனத்திரிந்தும் இருக்கலாம் என்பதும் சிலர் கருத்தாகும். இக்கருத்திற்கும் ஆதாரங்கள் உள. இங்குள்ள ஒருசிறு பிரிவைப் "புத்தர் கலட்டி" என அழைக்கிறார்கள். இன்னும் இவ்வூரின் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு வளவுக்கு "புத்தர்கோயிலடி" எனப்பெயருண்டு. இன்னும் இவ்வூரின் கிழக்குப்பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பை "வாதரவத்தை" என்பர். இவ்வூர்ப் பெயர் "வத்துறுவத்தை" என்னும் சிங்களச் சொல்லின் திரிசொற்போலும். "வத்துறு" சிங்களத்தில் நீர், "வத்தை" தோட்டம். நீராற் சூழப்பட்ட தோட்டம் எனப்படும் என்பாருமுளர்.

"தமிழகம் ஊரும் பேரும்" என்ற நூலில் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் புத்தூர் எவ்வாறு வந்தது என்று கூறுமிடத்து, தமிழ் நாட்டூர்களைப் புத்தூர் என்றும் நல்லூர் என்றும் வகுத்தனராகவும், அதில் புதிதாகத்

தோன்றிய ஊரைத்தான் புத்தூர் என அழைத்தனர் என்றுங் கூறுகிறார். தேவாரப் பாடல்பெற்ற பாண்டிநாட்டுப் பதியொன்று புத்தூர் என்றும், அரிசிற்கரைப் புத்தூர், கடுவாய்க்கரைப் புத்தூர் என்றும் தேவாரங்கள் கூறுவதும் நோக்கத்தக்கது.

பேராசிரியர் அவர்கள் எழுதியிருப்பதை நோக்குமிடத்து காலம் சென்ற ஸ்ரீமான் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் கொண்ட கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவே. பல்வாற்றானும் ஆராயின் புத்தூர் என்பது, புதிய ஊர் என்றதின் திரிபு என்று துணியத்தக்கதாகின்றது.

**நன்றி: புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி,**
**வெள்ளி விழா மலர் – 1956**

## PUTTUR TIDAL WELL

Puttur has a wonderful well called "Nilavarai" the Tidal Well. The mystery that surrounds this well stands unsolved to this day. As legend would have it, it was made by Sri Rama's arrow to provide drinking water for his army, which was said to have marched this way in pre-historic times. Many are the versions regarding the origin of this well at Puttur. But the only authoritative reference to this is found in a book called "Thachana Kailasa Manium." The well had won the attention and admiration of several eminentmen and scholars of Sri Lanka and of some foreign countries.

Our Goverment carried out a very extensive experiment with this well with a view to inaugurating an irrigation scheme. Now a minor irrigation scheme is at work here.

It was generally belived thar the well is bottomless but actually it is not so. In the year 1896 attempts were made to measure its depth and its actual depth was found. According to the sanskrit book referred to above a Hindu Temple existed at this spot. Adjoining the temple was a cave in which religious ascetics were supposed to have carried on their Yoga practices. One day, quite suddenly a water fountain was supposed to have sprouted forth from this fountain and the crevice submerged. From that day the place became holy to the Hindus.

During the period of Dutch rule in Ceylon, it appears that several experiments were conducted by them to solve the mystery of this well. The results of their experiments are

not found in any available documents. In a note left behind by Sir James Emerson Tennent, it is said, that when he approcached this well on horse back, he was able to make out from the sound of the hoofs of the horse that he was riding over a hollow ground. Notwithstanding the fact that several experiments were carried out on this well, it was in the year 1895 that serious experimental work was done on this well by the irrigation department. At that time the water of this well was pumped out for ten days consecutively the pump working ten hours every day at a stretch but no appreciable change in the volume of water in the well was observed.

After this experiment, a report was submitted to the govrenment by the then provincial Engineer Mr. H. F. Thomarian in which he said that the experiment could not be carried out any further, as the engine became heated and owing to other causes that were beyond their control. Under such circumstances, the experiments were abandoned. It is said in the report under reference, that 388000 gallons of water were pumped out daily and after five days of such pumping operation, the well still maintained its usal water level, when the pumping out was not done during the nights. The inference was that the water level below 2 1/2 inches was almost stationery. Again the depth of the well was investigated in the year 1896 and it was found that the Nothern side of the well was 145 feet deep, the Eastern side 136 feet deep, the Sothern side 120 feet deep and the western side 121 feet deep and up to a depth of 80feet the water was fresh. The well was 130 feet deep in the middle part, below 130 feet the water was salty according to the report.

This well is a crevice 50 square feet in area and the level at which the water is good is 130 feet below the surface, which level was the basis for the construction of the present irrigation scheme from this well was carried on from time to time by the general public. As a result, two powerful engines were installed in 1946 and 4000 gallons of water (per minute) were pumped out daily from the well. The result of this experiment was that the water level kept stationery and the rising up of the salt water below helped to keep up the water level in the nights in spite of the heavy pumping during the day.

Anyway one good result came out of the experiments conducted in 1946 that is 200 acres of land could be irrigated from this well without any danger of salt water being pumped out and accordingly a 200 acre irrigation scheme was started. The farmers agreed to pay at the rate of Rs. 43-00 per acre as irrigation tax. It was estimated that Rs. 43-00 was a very negligible amount when compared to the money spent in employing man power for the purpose of irrigating the land. In addition to this much time is also saved.

There is yet time to judge the benefits of the irrigation schemes of Nilavarai, which is now in operation. It is hoped that similar schemes will be started in other such tidal inexaustible wells found in many other parts of Jaffna and increasing impetus given to agriculture in the Peninsula.

**Taken from:**
**Puttur Sri Somaskanda College**
**"Silver Jubilee Malar" 1956**
**- Thanks**